பொது நூலகம்

உதயன்

30°c - 25°c
மழைக்கான சாத்தியம் உண்டு

சுடர் 30 கதிர் 344 வள்ளுவர் ஆண்டு 2046 ஐப்பசி 19, வியாழக்கிழமை 05.11.2015

## மோசடிக்காரர்களை பாதுகாக்கும் அரசு

ஜே.வி.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, நவ.5
ஊழல், மோசடிக்காரர்களை சட்டத்தின்முன் நிறுத்துவதாக உறுதியளித்த அரசு, அவர்களைப் பாதுகாக்கின்றது என்பது நிரூபணமாகியுள்ளது என்று நேற்றுச் சபையில் குற்றஞ்சாட்டிய எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான அநுரகுமார திஸாநாயக்க, தேர்தல் காலத்தில் தற்போதைய அரசு தயாரித்த கறுப்புப் புத்தகத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், அந்தக்

பக். 24

# கைதிகளின் விடுதலையில் அரசு உறுதியளித்தபடி நடக்கவில்லை

## நாடாளுமன்றத்தில் நேற்று சுமந்திரன் எம்.பி சாடல்

கொழும்பு, நவ.5
தமிழ் அரசியல் கைதிகள் நவம்பர் 7ஆம் திகதிக்குள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று உறுதியளிக்கப்பட்டுள்ள நிலையில், அந்த உறுதிமொழியை நிறைவேற்றுவதற்கு இன்னும் மூன்று நாள்களே எஞ்சியுள்ளன. எனினும், உறுதியளித்தபடி வெளிப்படையான நடவடிக்கைகள் இன்னும் இடம்பெறவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் நேற்றுச் சபையில்



சுட்டிக்காட்டினார்.
அத்துடன், தமிழர்கள் என்பதாலா தமிழ் அரசியல் கைதிகளுக்கு பாகுபாடு காட்டப் படுகின்றது என்றும் கேள்வி எழுப்பிய அவர், ஊழல் மோசடிக்குஎதிரானநடவடிக்கை உட்பட வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாவிட்டால், இந்த அரசு ஒருவருடத்துக்கு நீடிக்குமா என்பது சந்தேகமே என்றும் அவர் முன்னெச்சரிக்கை விடுத்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று ஊழல் மோசடிகளுக்கு எதிராக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்தியும், அவன்கார்ட் விவகாரம் பற்றியும் ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார-திஸாநாயக்கவால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை

பக். 24

## ரவிராஜ் படுகொலை; பிரதான சூத்திரதாரியை விடுவிக்க முயற்சியா?

கொழும்பு, நவ.5
முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச மற்றும் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட ஆகியோரின் பாதுகாப்பு அதிகாரியாகக் கடமையாற்றிய லெப். கொமாண்டர் சம்பத் முனசிங்கவுக்கு எதிராக, ரவிராஜ் படுகொலை தொடர்பிலான வழக்கில் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்படாதமை சட்டத்துறை வட்டாரங்களில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.
2006 ஆம் ஆண்டு நவம்பர் 10 ஆம் திகதி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் படுகொலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பாக 6 சந்தேகநபர்களுக்கு எதிராக நேற்று முன்தினம் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.
ஹெட்டியாராச்சிகே சந்தன குமார, காமினி செனவிரத்ன, பிரதீப் சந்தன ஆகிய மூன்று கடற்படையினர் அத்துடன், பெமியன் ஹசேன் என்ற பொலிஸ் அதிகாரி, மட்டக்களப்பைச் சேர்ந்த

பக். 24

# போர்க்குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும்

## மகிந்த, கோத்தா சிறையில் இருக்கவேண்டியவர்கள்
## பீல்ட் மார்ஷல் பொன்சேகா உதயனுக்குச் செவ்வி

கொழும்பு, நவம்பர் 5
போரை நெறியாள்கை செய்தமை, உத்திகளை வகுத்தமை ஆகியவற்றுக்கான பொறுப்பை நான் ஏற்கின்றபோதும்,போரின்போது எவரேனும் மனித உரிமைகளை மீறிச் செயற்பட்டிருந்தால் - குற்றங்களை இழைத்திருந்தால் அதற்கு அவர்களே பொறுப்பேற்கவேண்டும். அவர்களை யாரும் தண்டிக்கமுடியும்.
- இவ்வாறு முன்னாள் இராணுவத்தளபதியும் ஜனநாயகக் கட்சியின் தலைவருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.
வெள்ளைக்கொடிச் சம்பவம் போன்ற குற்றச்சாட்டுக்கள் தான் இறுதிப் போரின் இறுதி ஆறு நாள்கள் காலப்பகுதியில் வெளிநாட்டில் இருந்தபோதே சுமத்தப்பட்டுள்ளன எனத் தெரிவித்த பொன்சேகா, இதற்குத் தான் பொறுப்பேற்கப்போவதில்லை என்றும் உறுதிபடக் கூறினார்.
ஊழல் மோசடிக் குற்றங்களைப் புரிந்த மகிந்த ராஜபக்ச, கோத்தபாய ராஜபக்ச ஆகியோர் சிறையில் இருக்கவேண்டியவர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.
இறுதிப் போர் தொடர்பில் பல்வேறு

பக். 24



## குமார் குணரட்ணம் நேற்று கைது



கொழும்பு, நவ.5
முன்னிலை சோலிசக் கட்சியைச் சேர்ந்த குமார் குணரட்ணம் நேற்றுப் பிற்பகல் கேகாலை மாவட்டத்தில் உள்ள அங்குருவெல என்ற இடத்தில் வைத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
செல்லுபடியான விசா இல்லை என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே குமார் குணரட்ணம் கைது செய்யப்பட்டுள்ளார்.
ஜே.வி.பியின் முன்னாள் உறுப்பினரான குமார்

பக். 24

## தமிழ்க் கைதிகள் விடுதலை சட்டமா அதிபர் கையிலா?

### நீதியமைச்சரின் கூற்றை ஒருபோதும் ஏற்கமுடியாது என்கிறார் வடக்கு முதல்வர்

யாழ்ப்பாணம், நவ.5
அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் சட்டமா அதிபர்தான் முடிவெடுக்கவேண்டும் என்ற நீதி அமைச்சரின் கூற்றை நான் ஒருபோதும் ஏற்கமாட்டேன் என வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
கைதிகள் விடுதலை தொடர்பில் சட்டமா அதிபரே முடிவு எடுக்க வேண்டும் என நீதியமைச்சர் கூறியமை தொடர்பில் தனது கருத்தை வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,
அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் சட்டமா அதிபர்தான் முடிவெடுக்கவேண்டும் என்ற நீதியமைச்சரின் கூற்றை நான் ஒருபோதும் ஏற்கமாட்டேன். ஏனெனில் சட்டமா அதிபர் சட்டரீதியில்



என்ன செய்யலாம் என்பது தொடர்பாகவே தெரிவிப்பார்.
ஆனால் கைதிகளில் சிலர் வழக்குகள் கூடப் பதிவாகாமல் வைத்திருப்பது அரசியல் ரீதியானது. ஒருவரைச் சிறையில் அடைக்க வேண்டுமானால் அவருக்கு எதிராகச் சாட்சியம் இருக்கவேண்டும்.

பக். 24

## அரசியல் கைதிகள் குறித்து முக்கிய தீர்மானம் இன்று

### பிரதமர் தலைமையில் நாடாளுமன்றில் கூட்டம்

கொழும்பு, நவ.5
சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் முக்கிய முடிவு எடுப்பதற்காகப் பிரதமர் தலைமையில் இன்று மாலை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் விசேட கூட்டம் நடைபெறவுள்ளது.
இந்தக் கூட்டத்துக்கு அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்படுமெனத் தேசிய கலந்துரையாடல்கள் அமைச்சர் மனோ கணேசன் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,
சிறைகளில் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்,அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் நவம்பர் 7ஆம் திகதிக்கு முன்

பக். 24

## பிள்ளையானை தடுத்து வைத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதி

கொழும்பு, நவ.5
கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனை, அடுத்த மாதம் 10ஆம் திகதி வரை தடுத்து வைத்து விசாரணை நடத்தக் கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியது.
2005ஆம் ஆண்டு டிசெம்பர் 25ஆம் திகதி அதிகாலை மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் நடைபெற்ற நத்தார் ஆராதனையில் வைத்து, நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் சுட்டுக் கொல்லப்பட்டார்.
இந்தச் சம்பவம் தொடர்பாக, பிள்ளையானின் முன்னாள் சகாக்களான பிரதீப் மாஸ்டர் மற்றும் கஜன் மாமா ஆகியோர் கைது செய்யப்பட்டதையடுத்துப் பிள்ளையானும் கைதானார்.
அவரைத் தடுத்து வைத்து விசாரிக்கக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர், கடந்த 14ஆம் திகதி கொழும்பு

பக். 24

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# எரிபொருள் விநியோகத்தை சீர் செய்வதற்கு நடவடிக்கை

## யாழ்ப்பாணத்தில் அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.5

நாட்டின் சகல பகுதிகளுக்கும் பெற்றோலிய எரிபொருள்கள் மற்றும் பெற்றோலிய வாயுக்களை விநியோகிப்பது தொடர்பில் சகல மட்டங்களிலும் பலதரப்பட்ட சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்றன. எனவே இந்த விடயங்களை இனம்கண்டு அவற்றுக்கான தீர்வுகளை வழங்குவதற்கான செயற்றிட்டம் ஒன்றை அமைப்பதற்கு பெற்றோலியத்துறை அமைச்சு முடிவுசெய்துள்ளது. அதற்கான முதற் கட்டப் பணிகள் இன்று(நேற்று) வடபகுதியில் இருந்து ஆரம்பிக்கவுள்ளன. - இவ்வாறு பெற்றோலிய மற்றும் பெற்றோலிய வாயு பற்றிய அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

வடபிராந்திய பெற்றோலியத்துறையின் செயற்பாடுகளில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்காக நேற்று யாழ். மாவட்டத்துக்குத் திடீர் பயணம் ஒன்றை பெற்றோலிய மற்றும் பெற்றோலிய வாயு பற்றிய அமைச்சர் சந்திம வீரக்கொடி மேற்கொண்டிருந்தார்.

இதன்போது வட பிராந்திய பெற்றோலியத்துறை நிலையத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த கலந்துரையாடலில் கலந்துகொண்ட பின்னர் பத்திரிகையாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: -

மேற்குறித்த செயற்றிட்டத்துக்காகவே இந்த திடீர்ச் சந்திப்பும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த சந்திப்பில் நடைமுறை ரீதியாக வட பிராந்திய பெற்றோலிய எரிபொருள் விநியோகத்தில் எதிர் நோக்கப்படும் பல தரப்பட்ட சிரமம், சிக்கல்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக அமைச்சு மட்டத்தில் உரிய மற்றும் அவசியமான நடவடிக்கைகள் தொடர்பில் கலந்தாலோசித்து, இந்த விடயத்தில் இலகுவான நன்மைபயக்கவல்ல நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம். - என்றார்.

முன்னதாக குறித்த கலந்துரையாடலில் வட பிராந்திய முகாமையாளர் சி. சிவதரன் இதுவரையான காலப் பகுதியில் வடபிராந்தியத்தின் பெற்றோலிய எரிபொருள் பாவனை தொடர்பான புள்ளி விவரங்களை முன்வைத்து, பெற்றோலியத் துறையின் வளர்ச்சி தொடர்பிலும் இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள பிரதான திட்டங்கள் தொடர்பான தற்போதைய நிலைமைகள் பற்றியும் அமைச்சருக்கு எடுத்துரைத்தார்.

இவற்றில் புதிதாக யாழில் அமைக்கப்படவுள்ள மூன்று பெற்றோலிய நிலையங்கள் தொடர்பாகவும், மற்றைய நான்கு மாவட்டங்களிலும் சீர்செய்யப்பட வேண்டிய நிலைமைகள், பிராந்திய நிலையத்தின் நிவர்த்தி செய்யப்படவேண்டிய குறைகள், பெற்றோலிய நிரப்பு நிலையங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய விசேடதேவைகள், ஆளணிப் பற்றாக் குறைகள் தொடர்பான விடயங்கள் மிகமுக்கியமாக எடுத்துரைக்கப்பட்டன.

இந்த சந்திப்பின் பின்னர் அமைச்சர் காங்கேசந்துறை டிப்போவில் அமைந்துள்ள நிரப்பு நிலையத்தைப் பார்வையிட்டு, அதன் நிர்மாணப் பணிகள் தொடர்பிலும் ஆராய்ந்தார். இந்தப் பயணத்தில் பெற்றோலிய மற்றும் பெற்றோலிய வாயு பற்றிய அமைச்சின் பிரதி அமைச்சர், அமைச்சின் செயலாளர்கள், பெற்றோலிய வளத்துறை பணிப்பாளர் ஆகியோரும் உடனிருந்தனர். (ற-ரி5)





தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வலிகாமம் பிரதேச சபையினால் ஆனைக்கோட்டை பொது நூலகத்தில் கடந்த 31ஆம் திகதியில் இருந்து நேற்றுமுன்தினம் வரை புத்தகக் கண்காட்சி ஒன்று நடத்தப்பட்டது. (ம)

# நுளம்பு, இலையான்கள் யாழ்.நகரில் பெருக்கம்

## கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.4

யாழ்.நகரிலும் நகரை அண்டிய கரையோரப் பிரதேசங்களிலும் நுளம்பு மற்றும் இலையான்களின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

தற்போது மாரி மழை ஆரம்பமாகியதை அடுத்தே இந்த நுளம்பு மற்றும் இலையான்களின் பெருக்கம் அதிகரித்துள்ளதோடு அதன் தொல்லையால் மக்கள் சிரமப்பட்டும் வருகின்றனர்.

குறிப்பாக யாழ்.நகரிலும் மற்றும் நகரை அண்டிய குருநகர், பாசையூர், நாவாந்துறை, கொழும்புத்துறை, கொட்டடி, பண்ணை போன்ற கரையோரப் பிரதேசங்களிலும் இந்த நுளம்பு, இலையான்களின் தொலை அதிகரித்துள்ளது.

இந்தப் பகுதியில் உள்ள கழிவுநீர் ஓடும் கால்வாய்கள் மற்றும் வெள்ளம் தேங்கி நிற்கும் இடங்களில் இருந்து நுளம்பு, இலையான்கள் பெருகி வருகின்றன. இவை மக்கள் இடையே தொற்று நோய்கள் பரவக் காரணமாக இருக்கலாம் என்ற அபாயமும் ஏற்பட்டுள்ளது என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக வடிகால்கள் வெள்ளம் வழிந்தோடுவதற்கு வசதியாக துப்புரவு செய்யப்படவில்லை. ஆஸ்பத்திரி வீதி, முற்றவெளி, புல்லுக்குளம் வீதி, கந்தப்பசேகரம் வீதி மற்றும் கரையோரப் பகுதிகளில் உள்ள வடிகால்கள் போதிய துப்புரவு இன்றிக் காணப்படுகின்றன. அதனைவிட இந்த வடிகால்களில் வெள்ளம் வழிந்தோட முடியாது தேங்கியும் காணப்படுகின்றன.

இந்த வடிகால் போதியளவு துப்புரவு இன்றி காணப்படுவதாலேயே அதில் இருந்து நுளம்பு குடம்பிகள் பெருகி வருகின்றன.

நகரின் கே.கே.எஸ். வீதி, ஆஸ்பத்திரி வீதி போன்றவற்றில் உள்ள வடிகால்களின் மேல் தள பாதுகாப்பு மூடிகள் திறக்கப்பட்டு துப்புரவு செய்யப்படுவதில்லை.

இந்த வடிகால்களில் தேங்கும் கழிவுகளால் மழை நீர் வழிந்தோட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வடிகால்களில் இருந்து துர்நாற்றமும் வீசி வருகின்றது.

இப்படிப்பட்ட சீரான வடிகால் துப்புரவின்மையால் நுளம்பு, இலையான்களின் பெருக்கம் அதிகரித்துள்ளன. இந்த வடி கால்களில் இருந்து பெருகும் நுளம்பு, இலையான்களினால் டெங்கு மற்றும் வயிற்றோட்ட நோய்களின் தாக்கம் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வடிகால்களை உரிய முறையில் துப்புரவு செய்வதற்கு மாநகர சுகாதார பகுதியினர் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ற-17)

### இராமநாதன் கல்லூரி பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ.5

யாழ். இராமநாதன் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நிகழ்வுகள் நாளைமறுதினம் சனிக்கிழமை7ஆம்திகதிகாலை9 மணிக்கு கல்லூரியின் அருணாச்சலம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் கே. கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்தவிழாவில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்துகொள்ளவுள்ளதுடன், மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி பிரதீபா வேதநாயகன் வழங்கவுள்ளார்.

மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (ற-ரி5)



சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எதிரான விழிப்புணர்வுப் போராட்டங்கள் நேற்று வன்னியின் பல பகுதிகளில் பாடசாலை மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டிருந்தன. வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரி, மன்னார் வெள்ளாங்குளம் தேவன்பிட்டி ஆரம்பபாடசாலைகளில் விழிப்புணர்வு பேரணிகள், போராட்டங்கள் இடம்பெற்றன. கடந்த 2 ஆம் திகதி முதல் எதிர்வரும் 9 ஆம் திகதி வரையான ஏழு நாள்களும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான விழிப்புணர்வை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்துதல் என்ற வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயற்றிட்டத்துக்கு அமைவாக இந்த விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. (ற-21)

# தென்மராட்சி பிரதேசத்தில் விசேட டெங்கு கட்டுப்பாட்டுச் செயற்பாடு.

## 18 பேருக்கு சிவப்பு அறிவித்தல்; ஆறு பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல்

சாவகச்சேரி, நவ.5

மீசாலை கிழக்கில் நேற்று முன்தினம் சுகாதாரப் பகுதியினரும் பொலிஸாரும் இணைந்து நடத்திய டெங்கு கட்டுப்பாட்டு பரிசோதனையில் 25க்கும் மேற்பட்ட குடியிருப்புகளுக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளன. ஆறு பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் டெங்கால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதையடுத்து பிரதேசத்தில் விசேட டெங்குக் கட்டுப்பாட்டுப் பரிசோதனைகளை சுகாதாரப் பகுதியினரும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்டனர்.

அண்மையில் மழை பெய்ததையடுத்து முன்னறிவித்தல்கள் வழங்கப்பட்ட பின்னர் நேற்றுமுன்தினம் மீசாலை கிழக்குப் பகுதியில் டெங்குப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. 7 பிரிவினர் ஒவ்வொரு இடத்திலும் தீவிர பரிசோதனைகளை மேற்கொண்டனர். அதன்போது டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய நிலையில் குடியிருப்புகள் காணிகளை வைத்திருந்த ஆறு பேருக்கு எதிராக பொலிஸார் வழக்குப் பதிவுசெய்துள்ளனர். மேலும் பூட்டியிருந்த வீடுகளுக்கும் பற்றைகள் காணப்பட்ட காணிகளுக்கும் சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டு அதனைத் துப்புரவு செய்ய ஒரு வார கால அவகாசம் வழங்கியுள்ளனர்.

கடந்த 15 தினங்களில் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 17 பேர் டெங்கால் பீடிக்கப்பட்டுச் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

கடந்த வாரம் பொலிஸாரால் சங்கத்தானை, அல்லாரை ஆகிய பகுதிகளில் நடத்தப்பட்ட டெங்குப் பரிசோதனையில் 18 பேருக்கு எதிராக பொலிஸாரால் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அனைவருக்கும் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

அடுத்து டெங்கு தொற்று அதிகம் காணப்படும் மட்டுவில் சந்திரபுரம் பகுதியில் விசேட டெங்கு பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது. பிரதேசத்தின் அனைத்துப் பகுதியிலும் தீவிரமாக பரிசோதனைகள் மேற்கொள்ள விருப்பதாலும் பொதுமக்கள் விழிப்புடன் தத்தமது குடியிருப்புகள் மற்றும் காணிகளை துப்புரவாக வைத்திருக்குமாறும் தவறின் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (ற-9)

### கஞ்சாவுடன் இளைஞர் கைது

அனு மதிப்பத்திரமின்றி ஆயிரத்து 40 0 மில்லி கிராம் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கொக்குவில் பகுதியில் வைத்து கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த இளைஞரை பொலிஸார் நேற்றையதினம் யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தினர். அவரை எதிர்வரும் 17ஆம்திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டார். (ற-103)

2015 நவம்பர் 05 வியாழக்கிழமை உதயன்

## வேலணைப் பெண் வன்புணர்வு: ரத்தமாதிரிகளைப் பெற உத்தரவு

யாழ்ப்பாணம் நவ. 5

வேலணையில் நள்ளிரவில் வீடு புகுந்து பெண்ணைக் கடத்தி காட்டுக்குள் வைத்து வன்கொடுமைக்கு உள்ளாக்கியமை மற்றும்கடத்தஉதவியகுற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 2 பேரினதும் ரத்தமாதிரிகளைச் சமர்ப்பிக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

வேலணையில் கடந்த ஓகஸ்ட் மாதம்நள்ளிரவில்ஆயுதங்களுடன் வீடு புகுந்த சந்தேக நபர்கள் 2 பேரும் வீட்டில் கணவனைத் தாக்கிக் காயப்படுத்திவிட்டு அவரின் மனைவியைக் கடத்திச் சென்று காட்டுக்குள் வைத்து வன்கொடுமைக்கு உட்படுத்தியுள்ளனர் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அந்தக் குற்றச்சாட்டில் புங்குடுதீவில் ஒருவர் கைது செய்யப்பட்டதோடு அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் மூலம் மற்றைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்ட சந்தேகநபர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டபோது பாதிக்கப்பட்ட பெண் சந்தேக நபர்களை அடையாளம் காட்டியுள்ளார். அதனையடுத்து அவர்கள் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அதன்போது குறித்த 2 சந்தேக நபர்களினதும் ரத்தமாதிரிகளை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு நீதிவான் எஸ். லெனின்குமார் உத்தரவிட்டார்.

சிறைச்சாலை அத்தியட்சகர் ஊடாக அவர்களை சட்ட மருத்துவ நிபுணரிடம் முற்படுத்தி ரத்த மாதிரிகளைப் பெற்று நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். இந்த வழக்கு எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ற-4)

## உள்நாட்டு விசாரணைகளால் நன்மை என நினைக்கவில்லை

### யப்பானிய தூதுவரிடம் சுட்டிக்காட்டியதாக வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.4

உங்களது சொந்த விடயங்களை நீங்களே பேசித்தீர்க்க வேண்டும். உங்கள் தேவைகள் தொடர்பிலும் மத்திய அரசுடனேயேபேசவேண்டும் என்று யப்பான் தூதுவர் தன்னிடம் கூறினார் என்று தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

அவரின் இந்த கூற்றுகளுக்குப் பதில் அளிக்கும்போது உள்ளூர் விடயம் தொடர்பில் நாம்தான் பேச வேண்டி இருப்பினும் சர்வதேசமும் இங்கு என்ன நடக்கின்றதென்பதை அறிந்திருக்கவேண்டும். உள்ளூர் விசா ரணை தொடர்பில் நன்மை என நினைக்கவில்லை என்று சுட்டிக் காட்டினேன் என்றும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.



யாழ்ப்பாணம் வந்திருந்த யப்பானியத் தூதுவர் கெனிச்சி சுகனுமா நேற்று வட மாகாண முதலமைச்சரை அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். அது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

ஜெயிக்கா நிறுவன வேலைகளைப் பார்வையிட வந்த தூதுவர் என்னையும் சந்தித்தார். இதன்போது வட மாகாணத்தின் பொருளாதாரத்தில் முக்கிய இடம்பிடிக்கும் விவசாயம், மீன்பிடியின் தன்நிறைவுக்கு போதிய களஞ்சிய மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகள் இன்மையே முக்கிய காரணங்கள் என்று அவரிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் அபிவிருத்திகள் தொடர்பில் எமது கருத்தையும் உள்வாங்குமாறும் கோரப்பட்டது. சமாதானம்,நல்லிணக்கம, தொடர்பிலும் கலந்துரையாடினோம்.

நல்லிணக்கம் தொடர்பில் சிறையில் உள்ள 300 கைதிகளைக் கூட விடுவிப்பதற்கு பின்னடிக்கும் நிலையில் எவ்வாறு நல்லிணக்கம் ஏற்பட முடியும் இவற்றில் விட்டுக் கொடுத்தால் தான் நல்லிணக்கத்திற்கு பயன்படும் என்று சுட்டிக்காட்டினேன்.

இவற்றுக்குப் பதிலளித்த தூதுவர் விவசாயம் தொடர்பில் தற்போது கிளிநொச்சியில் ஓர் களஞ்சியம் அமைத்து வருகின்றோம். கடற்றொழில்தொடர்பான ஆராச்சிதொடர்பிலும் ஆய்வுசெய்து வருகின்றோம். வடபகுதியில் மேற்கொள்ளும் திட்டங்கள் தொடர்பிலும் கைதிகள் விடயம் போன்ற அரசியல், உங்கள் சொந்த விடயங்கள் தொடர்பாகவும் நீங்கள்தான் பேசித் தீர்வு காண வேண்டும். உள்ளக விசாரணை தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நன்மையளிக்கும் என்றார்.

அவரின் இந்த கூற்றுகளுக்குப் பதில் அளிக்கும்போது உள்ளூர் விடயம் தொடர்பில் 'நாம்தான் பேச வேண்டி இருப்பினும் சர்வதேசமும் இங்கு என்ன நடக்கின்றதை அறிந்திருக்கவேண்டும். உள்ளூர் விசாரணை தொடர்பில் நன்மை என நினைக்கவில்லை ஏனத் தெரிவித்தேன்.– என்றார். (ற-101)

நெடுந்தீவுச் சிறுமி வழக்கு

## ஏழாவது சாட்சியின் சத்திய கடதாசி நேற்று நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம், ஒக்: 23

நெடுந்தீவில் 13 வயதுச் சிறுமி வன்புணர்வின் பின்னர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில், 7 ஆவது சாட்சியின் சத்தியக் கடதாசி நேற்று நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. மேலதிக விசாரணைக்காக வழக்கு எதிர்வரும் முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஜேசுதாசன் லக்சினி என்ற சிறுமி 2012 ஆம் ஆண்டு மார்ச் 3 ஆம் திகதி அங்குள்ள வெற்றுக் காணி ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார். அந்தச் சிறுமி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் தலையில் கல்லால் குத்திக் கொலை செய்யப்பட்டார் என்று உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கந்தசாமி ஜெகதீஸ்வரன் (வயது 31) என்பவர் கைது செய்யப்பட்டார். அவர் பூரண உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். சில வருடங்களின் பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டபோதும் அவரைப் பிணை எடுக்க எவருமே முன்வரவில்லை. அதனால் அவர் 3 வருடங்களுக்கு மேலாக இன்னும் சிறையிலேயே உள்ளார்.

அவர் கைது செய்யப்பட்ட பின்னர் பரிசோதனைக்காக அவரது ரத்த மாதிரி பெறப்பட்டு மரபணுப் பரிசோதனை அறிக்கை நீதிமன்றுக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது. இந்நிலையில் அந்த வழக்கின் 7 ஆவது சாட்சி தனது சத்தியக் கூற்றுக் கடதாசியை நேற்று நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளார். அந்த வழக்கு மேலதிக விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(ற-4)



விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் பலவவுனியா இந்து மயானத்தில் புதைத்து வைக்கப்ட்டுள்ளன என்று தெரிவித்து வவுனியா பொலிஸாரால் நேற்று தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. வவுனியா பத்தினியார் மகிழங்குளம் இந்து மயானத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் பதுக்கிவைக்கப்பட்டுள்ளன என மானிப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவல் வவுனியா பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டதை அடுத்தே தேடுதல் நடத்தப்பட்டது என்று கூறப்படுகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகள் வவுனியாவில் செயற்பட்டபோது குறித்த மயானத்தின் மூன்று இடங்களில் வெடிபொருள், தங்க ஆபரணங்கள் புதைக்கப்பட்டன என்றே பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது. ஆயினும் தேடுதலில் அவ்வாறு எதுவும் மீட்கப்படவில்லை. (ற-2)

## ரூ.20 லட்சம் கடன் வாங்கிக் கொண்டு வெளிநாடு பறந்த தம்பதி சிக்கியது

### 2 ஆண்டுகளின் பின்னர் திருப்பி அனுப்பப்பட்டபோது

யாழ்ப்பாணம், நவ. 4

2 வருடங்களுக்கு முன்னர் 20 லட்சம் ரூபா பணத்தைக் கடனாகப் பெற்றுக்கொண்டு சட்டவிரோதமாக வெளிநாட்டுக்குத் தப்பியோடிய குடும்பத்தினர் மலேசியாவில் பிடிபட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட பின்னர் திருப்பி அனுப்பப்பட்டனர். அவர்கள் இலங்கை விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டு மன்னார் நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மன்னாரைச்சேர்ந்தகணவன்மனைவியான குறித்த குடும்பத்தினர் அங்குள்ள ஒருவரிடமிருந்து 8 லட்சத்து 80 ஆயிரம்ரூபா பணத்தைப் பெற்ற நிலையில் சட்டவிரோதமாக மலேசியாவுக்குத் தப்பிச் சென்றுள்ளனர். 2013 ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மன்னார் விசேட குற்றத் தடுப்புப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டது. பொலிஸார் குறித்த முறைப்பாட்டுக்கு ஏற்ப மன்னார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

எதிரிகள் இருவரும் வெளிநாட்டில் உள்ளதால் அவர்கள் கைது செய்யப்படவோ அவர்களை நீதிமன்றில் முற்படுத்தவோ முடியவில்லை. அதனால் வழக்குத் திகதியும் நீண்ட தவணையிடப்பட்டு வந்தது. தவிர அவர்களுக்கு எதிராக மன்னார் நீதிமன்று பிடியாணையும் பிறப்பித்திருந்தது. அதனால் அவர்கள் பற்றிய தகவல் இலங்கை விமான நிலையத்துக்கும் மன்னார் நீதிமன்றால் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

ஆயினும் குறித்த குடும்பத்தினர் சட்டவிரோதமாக மலேசியாவுக்குச் சென்றிருந்த காரணத்தால் அங்கு கைது செய்யப்பட்டனர். அங்கு சில மாதங்கள் அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். பின்னர் இலங்கைக்குத் திரும்பிப் போகுமாறுகூறி அவர்களை மலேசிய அரசு விடுவித்திருந்தது. திரும்பிச் செல்லும் வரைக்கும் மலேசியாவில் தங்கி நின்று உரிய ஆயத்தங்களைச் செய்யவும் மலேசிய அரசு அனுமதி வழங்கிருந்தது. ஆனால் அவர்கள் அதுவரை இருந்த இடத்திலிருந்து தப்பி வேறு ஒரு இடத்தில் மறைந்து வாழ்ந்திருந்துள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது. அந்நிலையில் அவர்களை பொலிஸார் மீண்டும் கைது செய்துள்ளனர்.

அவர்களை உடனடியாகவே இலங்கைக்கு அனுப்பிவைத்தது மலேசிய அரசு. அவர்கள் இலங்கை விமான நிலையத்தில் 23 ஆம் திகதி வந்திறங்கியபோது பிடியாணை உத்தரவு இருந்ததால் அவர்கள் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டனர். பின்னர் அவர்கள் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்கள் மன்னார் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது அவர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. அவர்கள் மீதான வழக்கு நேற்றுமுன்தினம் நீதிவான் ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்போது குறித்த குடும்பத்தினர் ஏற்கனவே மற்றொருவரிடமும் 11 லட்சம் ரூபா பணம் பெற்றுக்கொண்டு தப்பியிருந்தமை தெரியவந்துள்ளது. அந்தப் பணத்தைக் கொடுத்த நபரும் அவர்களுக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். அதையடுத்து குறித்த குடும்பத்தினருக்கு எதிராக மற்றொரு வழக்கையும் பொலிஸார் நீதிமன்றில் தாக்கல் செய்தனர். அதன்போது அவர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் குறித்த இருவரையும் பிணையில் விடுவிக்குமாறு கோரி பிணை விண்ணப்பம் செய்திருந்தனர்.

அவர்களது பிணை விண்ணப்பத்தைப் பரிசீலித்த நீதிவான் அவர்களைக் கடும் நிபந்தனையுடன் பிணையில் செல்ல அனுமதி வழங்கினார். அதன்படி 8 லட்சம் ரூபா பணம் பெற்ற வழக்கில் இருவரும் தலா 5 லட்சம் ரூபா பெறுமதியான தலா 4 ஆள் பிணைகளில் விடுவிக்கப்பட்டனர். மற்றைய வழக்கில் தலா 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தலா 2 ஆள் பிணைகளில் விடுவிக்கப்பட்டனர். அதன்படி அவர்கள் இரண்டு வழக்கிலுமாக 12 பேரின் ஆள்பிணைகளில் மாத்திரமே பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தவிர மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் மன்னார் விசேட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸில் கையொப்பம் இடவேண்டும் என்றும் நீதிவான் உத்தரவிட்டார். முதல் வழக்கு எதிர்வரும் டிசெம்பர் 7 ஆம் திகதிக்கும் இரண்டாவது வழக்கான 11 லட்சம் ரூபா தொடர்பான வழக்கு எதிர்வரும் 9 ஆம் திகதிக்கும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(ற-4,104)

# குருநகர் இறங்குதுறை விரைவில் நவீனமாகும்

## கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.5

குருநகர் இறங்கு துறை விரைவில் நவீன வசதிகளுடன் மீன்பிடித் துறை முகமாக நிர்மாணம் செய்யப்படும். ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் இந்தத் துறைமுகம் நவீனப்படுத்துவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. – இவ்வாறு கடற்றொழில்நீரியல்வளதிணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். குடாப்பரப்பு கடற்பகுதியில் முக்கிய இறங்குதுறையாக விளங்கும் இந்த இறங்கு துறையில் தமது படகுகளை நங்கூரமிட்டு பின்னர் மீனவர்கள் மீன்பிடித் தொழிலுக்குச் சென்று வருகின்றனர். இந்த இறங்கு துறைமுகம் சேதப்பட்டு தூர்ந்து செல்கின்றது.

குருநகர் பிரதேச மீனவர்களின் முக்கிய இறங்கு துறையாக விளங்கும் இந்தத் துறைமுகம் போதிய வசதிகள் இன்றியும் காணப்படுகின்றன.

இறங்குதுறையில் படகுகளை உரிய முறையில் நங்கூரமிட்டுச் செல்வதிலும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்த இறங்குதுறை போதியளவு ஆழமாக்கப்படாததால்கரைப்பகுதியில்கோடை காலங்களில் கடல் நீர்வற்றிச் செல்கின்றது. இதன் காரணத்தால் மீனவர்கள் தமது படகுகளை நங்கூரமிட்டுத் தரிப்பதில் சிரமப்பட்டும் வருகின்றனர்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்தபோதே குறித்த அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: –

குருநகர் பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதார மையமாகவிளங்கும்இந்த இறங்குதுறையை விரைவில் புனரமைக்கவும் உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தத் இறங்குதுறை நவீன முறையில் மீன்பிடித் துறைமுகமாக மாற்றியமைக்கப்படவுள்ளது.

இந்த மீன்பிடித் துறைமுகமானது மாற்றியமைக்கப்படும் போது அதில் இளைப்பாற்று மண்டபம், மீன்கள் விற்பனை நிலையம், ஐஸ் உற்பத்தி நிலையம், எரிபொருள் விற்பனை நிலையம் போன்றவையும் துறைமுகப்பகுதியில் அமைக்கப்படும். – என்றார். (ற-17)

## முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டோருக்கு விசேட போக்குவரத்து ஒழுங்குகள்

கிளிநொச்சி, நவ.5

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட – கழுத்துக்கு கீழ், இடுப்புக்கு கீழ் உணர்வற்றவர்கள் சிகிச்சை மேற்கோள்ள விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கோள்ளப்படவுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு இயன் மருத்துவச் செயற்பாடுகளுக்கோ அல்லது மாதாந்த மருத்துவப் பரிசோதனைக்கோ மருத்துவரின் உறுதிப்படுத்தலுடன் வந்து செல்வதற்கான இலவச போக்குவரத்து நோயாளர் காவு வண்டி சேவையை அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி வரை பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று மனிதாபிமான புனர்வாழ்வு செயற்பாடுகளுக்கான தேசிய சங்கத்தின் செயலாளர் கௌரிதாசன் தெரிவித்துள்ளார்.

மாதத்தின் முதல் வாரம் கண்டாவளைப் பிரதேசம், இரண்டாம் வாரம் பூநகரிப் பிரதேசம், மூன்றாம் வாரம் பச்சிலைப்பள்ளிப் பிரதேசம், நான்காம் வாரம் கரைச்சிப் பிரதேசம் என்ற அடிப்படையிலே வாகன ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் சேவையைப் பெற்றுக்கொள்ள விரும்பும் பயனாளிகள் 021-228-3659 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பதிவை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-ரி2)

## சிசு விற்பனை; சந்தேக நபர்களுக்கு பிணை

மட்டக்களப்பு, நவ.5

ஆண் சிசுவை விற்பனை செய்ய முயன்ற குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்ட இரண்டு பெண்கள் உட்பட மூன்று பேரையும் தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் செல்வதற்கு வாழைச்சேனை மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.எல்.எம். முனாஸ் அனுமதியளித்தார்.

எதிர்வரும் திங்கட்கிழமை அடுத்த வழக்குத் தவணைக்கு திகதி குறிக்கப்பட்டுள்ளது என்றும் அன்றையதினம் சந்தேக நபர்களை முன்னிலை யாகுமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

பிறந்து 29 நாள்களேயான ஆண் சிசுவை விற்பனை செய்ய முயன்ற சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய வாழைச்சேனைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவலடிக் கிராமத்தில் வாழைச்சேனை பொலிஸாரால் இந்தச் சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

சிசுவின் தாய், சிசுவை வாங்க முற்பட்ட பெண் மற்றும் தரகர் ஆகியோரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர். 20 ஆயிரம் ரூபாவுக்கு குறித்த சிசுவை விற்பனை செய்ய முயன்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)



வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் நேற்று சாவகச்சேரியில் இருந்து தனங்களப்பு வரையான வீதியோரத்தில் பனம் விதைகள் நடப்பட்டன. சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்களும், தென்மராட்சி தெற்கு கமக்கார அமைப்புகளும் இணைந்து பனம் விதைகள் நடுகையில் ஈடுபட்டனர். பனம் விதைகளை சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் வழங்கியிருந்தனர். நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் மற்றும க.அருந்தவபாலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-9)

# ஆர்ப்பாட்டம் செய்தோரை உடன் இடம் மாற்றுக

## இ.போ.ச. யாழ். சாலை அதிகாரிகளும் ஊழியர்களும் போர்க்கொடி

யாழ்ப்பாணம், நவ.5

இலங்கை போக்குவரத்துச் சபையின் வடமாகாண நிர்வாகத்துக்கு எதிராகவும் தற்போது வடமாகாணத்தில் நடைபெற்றுவரும் சீரான போக்குவரத்து நடவடிக்கைகளை குழப்பும் விதத்திலும் கடந்த செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதி யாழ். சாலையின் முன்னாள் சாரதி ஒருவர் உட்பட 18 அங்கத்தவர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டமானது ஏற்றுக்கொள்ளமுடியாதது. எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பாக இவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட வேண்டும். இல்லாவிடில் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி அமைதியான முறையிலே தொடர்ச்சியான போராட்டங்கள் முன்னெடுக்கப்படும். – இவ்வாறு தெரிவித்துள்ளனர் யாழ்.சாலையின் அதிகாரிகளும், ஊழியர்களும்

வடக்கின் போக்குவரத்து செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்காக நியமிக்கப்பட்ட நிறைவேற்று அத்தியட்சகருக்கு அவர்கள் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: –

கடந்த மே மாதம் வடக்குப் போக்குவரத்து செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்கான நிறைவேற்று அத்தியட்சகர் நியமிக்கப்பட்டதன் பின்னர் காணப்படும் சீரான நிர்வாகச் செயற்பாடுகளை விரும்பாமலும் – தற்போதைய நிர்வாகச் செயற்பாடுகள் மற்றும் சாலை முகாமையாளர் ஆகியோரின் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்கும் விதமாகவும் செயற்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அவர்களைத் தொடர்ந்தும் யாழ். சாலையில் பணியாற்ற இடமளித்தல் என்பது சீரான சேவை மற்றும் நிர்வாகச் செயற்பாடுகளில் இடையூறுகளை ஏற்படுத்தும். எனவே அவர்கள் ஒருவர் ஒருவராக மாற்றம் செய்யப்பட வேண்டும். அப்பொழுதுதான் குழுவாக மீண்டும் இணைதல் மற்றும் செயற்படுதல் என்பது தவிர்க்கப்படும்.

தமிழ்ப் பிரதேசத்தில் சிங்கள நிர்வாகி ஒருவர் நியமிக்கப்பட்டமையும் போராட்டத்துக்கான காரணமாக கூறப்பட்டாலும் தாங்கள் வடபகுதியிலே பொறுப்புக்களை ஏற்றதன் பின்னர் இருந்து வருகின்ற சீரான நிர்வாகச் செயற்பாடுகளையும் வடபகுதியின் அனைத்து சாலைகளிலும் கொண்டுவரப்பட்ட நிர்வாக ரீதியான ஒழுக்க நடைமுறைகளையும் செயற்பாடுகளையும் நாங்கள் எப்போதுமே மதிக்கின்றோம். மனதார ஏற்றுக்கொள்கின்றோம். – என்றுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் போக்குவரத்து அமைச்சர், பிரதிப் போக்குவரத்து அமைச்சர் மற்றும் வடமாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ற-ரி2)

# கடற்கரைப் பகுதிகளைப் பாதுகாக்கும் மரநடுகை கிழக்கில் ஆரம்பம்

திருகோணமலை, நவ.5

கடற்கரைப் பிரதேசத்தைப் பாதுகாத்தல் மற்றும் மண்ணரிப்பை தடுக்கும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் (வனரோபா) தேசிய மரநடுகைத் திட்டம் கிழக்கிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேசசெயலகப்பிரிவின் கீழுள்ள முனை முருகன் ஆலயத்தை அண்மித்த நிலப்பரப்பில் நேற்றுமுன்தினம் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.



பிரதேச செயலாளர் தட்ணகௌரி தினேஷ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் நிருபா பிருந்தன், கடற்படை அதிகாரிகள், கல்குடா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, கரையோரம் பேணல் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

கடலரிப்பை தடுத்து கடற்பிரதேசத்தை பாதுகாக்கும் நோக்குடன் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்தத் திட்டமானது, வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (ற)

# தமிழர் – முஸ்லிம்களை மோதவிடுவது பெரும்பான்மையினரின் ஒரு கருவி

## அமைச்சர் ரிஷாத் பதியுதீன் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், நவ.5
தமிழ் மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைக்காமல் தொடர்ந்தும் ஏமாற்றுவதற்கு சிங்கள பெரும்பான்மையினர் பயன்படுத்தும் கருவி தமிழ், முஸ்லிம் மக்களைப் பிரித்து எங்களுக்கிடையில் மோதல்களை உருவாக்குவதே என்று தெரிவித்தார் கைத்தொழில் வணிகதுறை அமைச்சர் ரிஷாத் பதியுதீன்.

வவுனியா வர்த்தக சங்கத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்கான கௌரவிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

ஐந்து ஆண்டுகள் புனர்வாழ்வு அமைச்சராக இருந்தீர்கள். ஏன் முஸ்லிம் மக்களைக் குடியமர்த்தவில்லை என்று என்னிடம் கேட்கின்றனர். அந்த ஐந்து ஆண்டுகளில் நான்கரை ஆண்டுகள் நாட்டில் சமாதானம் இருக்கவில்லை. ஆறு மாதங்கள்தான் சமாதானம் மிக்கதாக இருந்தது. மூன்றரை லட்சம் தமிழ் மக்கள் கொட்டிலிலும், வெயிலிலும், மழையிலும் தத் தளித்துக் கொண்டிருக்க நான் ஒரு முஸ்லிம் என்பதற்காக 35 ஆயிரம் முஸ்லிகளைக் குடியேற்றியிருந்தால் என்னை ஒரு மனிதனாகக் கருத முடியாது. அதனால் முதல் ஆறு மாதங்களும் தமிழ் மக்களுடைய குடியேற்றத்தைச் செய்தோம். பின்பு ஆறுமாதத்திலே அந்த அமைச்சு என்னுடைய கைகளிலிருந்து எடுக்கப்பட்டுவிட்டது. பிறகு சட்டமும் இல்லை. திட்டமும் இல்லை. எல்லா அமைச்சர்களும் அமைச்சுக்காக வந்தார்கள். எதுவும் நடக்கவில்லை.

தமிழ் மக்களுடைய மீள் குடியேற்றம் முற்றுப் பெறவில்லை. இன்னமும் ஒழுங்கான வீடுகள் இல்லை. பாதைகள் இல்லை. அவர்களுக்கு வாழ்வதற்கு வாழ்வாதாரம் இல்லை.

அதைச் செய்து கொடுக்க வேண்டிய கடமை எனக்கும் இருக்கின்றது. மாகாண சபைக்கும் இருக்கின்றது. மைத்திரிக்கும் இருக்கின்றது. ரணிலுக்கும் இருக்கின்றது. அதேபோல் துரத்தப்பட்ட ஒரு லட்சம் முஸ்லிம்களையும் அவர்களுடைய மண்ணிலே குடியேற்றுவதற்கு மக்களிடத்திலே ஏதும் கருத்து வேறுபாடுகள் இருந்தால் பேசித் தீர்த்து வைக்கின்ற பொறுப்பும் எனக்கு இருக்கின்றது. வடமாகாண சபையிலே இருக்கின்ற அத்தனை பேருக்கும் இருக்கின்றது என்பதையும் மனச்சாட்சி உள்ள அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள்.

ஒரு தீர்வு நிச்சயமாகத் தேவை. முப்பது வருடப் போர் சாதாரண போரல்ல. இங்கு இருக்கின்ற பலர் ஆயுதங்களை ஏந்திப் போராடியவர்கள்.

உயிரை மாய்க்கத் துணிந்தவர்கள். அதேபோல பல கஷ்டங்களை அனுபவித்தவர்கள். ஆனால், எந்தத் தீர்வும் தராமல் சிங்களப் பெரும்பான்மை எங்களை ஏமாற்ற முயற்சிக்கலாம். அதற்கு அவர்கள் பயன்படுத்தும் கருவி தமிழர்களையும் முஸ்லிம்களையும் பிரித்து பரஸ்பரம் மோதவிடுவதே.

தமிழ்த் தலைமைகள், தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மாகாணசபை உறுப்பினர்கள் சிந்திக்கவேண்டும். எங்களுடன் பேச வேண்டும். நாங்கள் உங்களுடைய எதிரிகள் அல்ல. ஒருபோதும் தமிழ் மக்களுக்கான நல்ல தீர்வுக்குக் குறுக்கே நிற்கமாட்டோம். ஒருபோதும் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்வதைப்பார்த்து பொறாமைப்படமாட்டோம். எனவே புரிந்து கொள்ளுங்கள். ஒன்றுபடுவோம், எங்களுடைய உரிமைகளுக்காக; எங்களுடைய அடிப்படை வசதிகளுக்காக. அனைத்து விடயங்களுக்களுக்காகவும் உங்களுடன் சேர்ந்து கைகொடுக்க நாங்களும் தயார் – என்றார். (ஐ-21)



## ஊழல் மோசடியைத் தடுக்க அரசு பெரும் நடவடிக்கை

### பிரதி அமைச்சர் ஹர்ச டி சில்வா தெரிவிப்பு

கொழும்பு, நவ.5
இலங்கையில், ஊழல் மோசடிகளை தடுக்க நல்லாட்சி அரசு பெரும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது என்று பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் சென். பீற்றர்ஸ்பர்க் நகரில் நடைபெற்ற ஊழல் மோசடிகளுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரகடனம் குறித்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–
புதிய அரசு நாட்டில் ஊழல் மோசடிகளை தடுத்து நிறுத்த முனைப்புக் காட்டி வருகின்றது. லஞ்ச ஊழல் மோசடிகளைக் கட்டுப்படுத்தவும், இல்லாதொழிக்கவும் காத்திரமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

அத்துடன் சர்வதேச தர நிர்ணயங்களுக்கு அமைவான வகையில் வெளிப்படைத் தன்மையுடன் கூடிய விசாரணைப் பொறிமுறைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அரசமைப்புக்கான 19ஆம் திருத்தச் சட்டத்தின் அறிமுகத்துடன் சுயாதீன ஆணைக்குழுக்கள் நிறுவப்பட் டுள்ளன. இதன் ஊடாக ஊழல் மோசடிகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட முடியும்.

இதனை பிரதிபலிக்கும் வகையில், ஊழல் மோசடிகளுக்கு எதிராக ஐக்கிய நாடுகளின் சில பிரகடனங்கள் இலங்கையில் நடைமுறைப்படுத்தப் படுவதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன்– என்றார். (ஐ)


தீபத்திருநாளாம் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு 10% முதல் 40% வரையான விசேட விலைக்கழிவு

ABI Fashion World
அபி பஷன் வேல்ட்

அதிகாலை
வானத்தில் என்னென்ன "வண்ணம்"
அதில் இல்லாத வண்ணங்கள்
எங்களிடம் "மின்னும்"



பாரம்பரிய பட்டுச்சேலைகள் முதல் லெஹங்கா, வண்ணச்சேலைகள், திருமண பட்டுச்சேலைகள், ஆடவர் மற்றும் சிறுவர்களுக்கான ஆயிரமாயிரம் ஆடை வகைகள் ஏராளம் எம்மிடம்

இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட பாரம்பரிய பட்டுக்கள் நேரடியாக உங்கள் கைகளில் - வண்ண ஓவியமாய்

புதுமையரான அழகிய கனவு

இன்பத்தின் தருணங்கள் எங்குண்டோ
அபியின் ஆடைகள் அங்குண்டு

112, காங்கேசன்துறை வீதி,
(H.S.B.C. வங்கிக்கு முன்பாக) யாழ்ப்பாணம்.
abifashionworld 021 222 3738, 077 324 6503

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



தருபவர்: வித்யா

**மேடம்:** செயலில் கவனச் சிதறல் ஏற்படலாம், கவனம். நண்பரின் ஆலோசனையை ஏற்பது நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் மிதமான, தீர்வு கிடைக்கும். .

**இடபம்:** நல்லோரின் அறிமுகத்தால் நன்மை அடைவீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி பெருகும். தீர்வு அதிகரிக்கும். பெண்கள் சுப நிகழ்ச்சிகளில் பங்கேற்று மகிழ்வர்.

**மிதுனம்:** உங்களுக்கு எதிராக சிலர் செயல்படலாம்; கவனம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாரான அளவில் இருக்கும். பண விடயத்தில் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. உடல்நலம் பெற மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம்.

**கடகம்:** தாமதமான பணி ஒன்றை எளிதாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். மனைவி விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். உறவினர் வருகையால், வீட்டில் மகிழ்ச்சி நிலைக்கும்.

**சிங்கம்:** எதிலும் விடாமுயற்சியுடன் இருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி வந்து சேரும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பது அவசியம்.

**கன்னி:** இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் படிப்படியாகக்கூடும். பெண்கள், பிள்ளைகளின் நலனுக்காகப் பாடுபடுவர். மாணவர்கள் படிப்பில் நல்ல தரத்தில் தேர்ச்சி பெறுவர்.

**துலாம்:** அன்றாடப் பணிகளில் பொறுப்புடன் இருப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் அமோக வெற்றி கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு நீண்டநாள் கனவு நிறைவேறும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர்.

**விருச்சிகம்:** பரிகாசம் செய்பவரை பொருட்படுத்த வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான தீர்வு கிடைக்கும். வாகன பயணத்தில் மித வேகம் கடைபிடிப்பது நல்லது.

**தனுசு:** குடும்ப வியியத்தைப் பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் முயற்சிக்கேற்ப வருமானம் கிடைக்கும். தாயின் தேவை அறிந்து நிறைவேற்றி மகிழ்வீர்கள்.

**மகரம்:** குடும்பத்தினரிடம் பாசம் காட்டி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய சாதனை படைப்பீர்கள். அரசியல்வாதிகளுக்குப் புதிய பதவி கிடைக்க வாய்ப்புண்டு. மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

**கும்பம்:** அன்றாடப் பணிகளில் சுறுசுறுப்புடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் பன்மடங்கு உயரும். பெண்கள் உறவினர் மத்தியில் செல்வாக்குடன் திகழ்வர். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும்.

**மீனம்:** மற்றவர் விடயத்தில் கருத்துச் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான தீர்வு கிடைக்கும். பெண்கள் சிக்கனத்தைக் கடைபிடித்து சேமிக்க முயல்வர்.

# செல்லப் பிராணியை ஒப்படைக்க மறுப்பு

செல்லப் பிராணிகளைப் பிடிக்காதவர்கள் என்று எவருமே இருக்க இயலாது. தமது செல்லப் பிராணிகளை எதற்காகவும் இழக்க விரும்பாதவர்களே அதிகம். ஆனால், செல்லப் பிராணியாக வைத்திருந்த சிங்கம் ஒன்றை ஒப்படைக்க பிரான்ஸிலுள்ள நபர் ஒருவர் மறுத்து வருகிறார். அதிகாரிகள் தொடர்ந்து எச்சரித்து வந்தும், ஆண்டனி கார்பெட் எனும் அந்த நபர், 'சியாம்' என்று பெயருடைய அந்தச் செல்லச் சிங்கத்தை ஒப்படைக்க மறுக்கிறாராம். சில காலத்துக்கு முன்னர் சகாச விளையாட்டில் ஈடுபட்டுவந்த நண்பர் ஒருவர் ஆண்டனி கார்பெட்டுக்கு அந்தச் சிங்கத்தைப் பரிசாக அளித்துள்ளார். இதன் பிறகு 14 மாதங்களாக அந்தச் சிங்கம் கார்பெட் குடும்பத்துடனேயே இருந்து வந்துள்ளது. அந்தச் சிங்கத்தை மீட்க அதிகாரிகள் பெரிய அளவில் முயற்சி செய்தாலும் சிங்கத்தை இழக்க நேர்ந்தால், தான் தற்கொலை செய்துகொள்ளப்போவதாக கார்பெட் அச்சுறுத்தியதால் அந்த முயற்சியை கைவிட்டுள்ளனர். அந்தச் சிங்கத்தை செல்லப் பிராணியாக அவர் வைத்துக்கொள்வதில் சர்ச்சை இல்லை, ஆனால் அதற்கு கார்பெட்டிடம் உரிய ஆவணங்கள் இல்லை என்பதே பிரச்சினையாகக் கருதப்படுகிறது.

# தனி ஒருவன் தெலுங்கில்



ஜெயம் ராஜாவின் இயக்கத்தில் தமிழில் ஜெயம் ரவியும் நயன்தாராவும் நடித்து வெளியான 'தனி ஒருவன்' படம் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது. வசூலிலும் சாதனை படைத்திருக்கிறது. இதையடுத்து இந்தப் படம் தற்போது தெலுங்கிலும் 'ரீமேக்' ஆகவுள்ளது. இந்தப் படத்தில் ஜெயம் ரவி வேடத்தில் ராம்சரண் நடிக்கிறார். இதில் வில்லனாக மாதவன் நடிப்பார் என்று கூறப்பட்டது. அதை மாதவன் மறுத்து விட்டாராம் 'தனி ஒருவன்' பட வெற்றிக்கு அதில் அமைதியான வில்லனாக வந்து நடிப்பில் அட்டகாசப்படுத்திய அரவிந்த்சாமியும் காரணம் என்று பரவலாகக் கருத்தும் தெரிவிக்கப்பட்டது. எனவே, தெலுங்கு ரீமேக் படத்திலும் அரவிந்த்சாமியை வில்லனாக நடிக்க வைக்க முயற்சி நடந்து வந்தது. முதலில் அவர் தயக்கம் காட்டினார்.

என்றாலும் தெலுங்கில் தனி ஒருவன் படத்தைத் தயாரிக்கும் படக்குழுவினர் அரவிந்த்சாமியிடம் தொடர்ந்து வற்புறுத்தினர். இதையடுத்து ராம்சரண் நடிக்கும் இந்தப் படத்திலும், அரவிந்த்சாமி நடிப்பதற்கு ஒப்புக் கொண்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. சுரேந்தர் ரெட்டி, அல்லு அரவிந்த் ஆகியோர் தயாரிக்கும் இந்தப் படத்தைச் சுரேந்தர் ரெட்டி இயக்குகிறார். அரவிந்த்சாமியின் ஒப்புதல் கிடைத்துவிட்டதால் படக் குழுவினர் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதுபற்றிய அதிகாரபூர்வ அறிவிப்பு ஜனவரியில் வெளியாகும் எனக் கூறப்படுகிறது.

# பேஸ் புக்கில் பிடித்தவை...












## வணக்கம் - கும்பிடுவதில் மறைந்திருக்கும் அறிவியல்




ஒரு பொண்ணு வண்டியில் இருந்து கீழ விழுந்தா....



ஒரு பையன் வண்டியில் இருந்து கீழ விழுந்தா.....



# கிட்டுப் பூங்காவில் மலர்க் கண்காட்சி

யாழ்ப்பாணம், நவ.5

வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மலர்க் கண்காட்சி இன்று வியாழக் கிழமை நல்லூர் கிட்டுப் பூங்காவில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் மரநடுகை மாதம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. அதன் ஒரு அங்கமாக, வடமாகாண தாவர உற்பத்தியாளர்கள் சங்கம் பங்கேற்கும் மலர்க் கண்காட்சி கிட்டுப் பூங்காவில் இன்று பி.ப. 2 மணிக்கு கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்தக் கண்காட்சியில் நல்லின பழ மரக்கன்றுகள், நிழல் மரக் கன்றுகள், வெட்டு மரக்கன்றுகள், அலங்காரத் தாவரங்கள் காட்சிப்படுத்தப்பட இருப்பதோடு விற்பனையும் செய்யப்படவுள்ளன.

இன்று பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் இந்தக் கண்காட்சி எதிர்வரும் புதன்கிழமைவரை ஒருவார காலத்துக்குத் தினமும் காலை 9 மணியில் இருந்து மாலை 7 மணிவரை நடைபெற உள்ளது. இந்தக் கண்காட்சியைப் பார்வையிட வரும் மாணவர்களுக்கு இலவசமாக மரக் கன்றுகள் வழங்கப்பட உள்ளன என்று அந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

# அனுமதியின்றி மணல் கொண்டு சென்றவருக்கு அபராதம்

அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச்சென்ற யாழ்ப்பாணம், கொழும்புத்துறைப் பகுதியைச் சேர்ந்த இளைஞரொருவர், யாழ்ப்பாணப் பொலிஸாரால் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டு நேற்று யாழ். நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார்.

அவரை ஐம்பதாயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும் தவறின் ஆறுமாதகால சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் நீதவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டார். மணல் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்டது டன் வாகனமும் தடுத்துவைக்கப்பட்டது. (ற-103)

### வவுனியா வடக்கு பிரதேச சபை,நெடுங்கேணி

## 2016 ஆம் ஆண்டுக்கான கேள்விஅறிவித்தல்


வவுனியா வடக்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சந்தைகள்,கடைகள் என்பவற்றை 01.01.2016ம் திகதி தொடக்கம் - 31.12.2016ம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| | தொ. இல | விபரம் | வைப்புமீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடியஆகக் குறைந்தகேள்வித் தொகை |
|---|---|---|---|---|---|
| கனகராயன்குளம், நெடுங்கேணி | 01 | நெடுங்கேணி மீன் சந்தை | 2000.00 | 5000.00 | 70000.00 |
| | 02 | நெடுங்கேணி மரக்கறி சந்தை | 2000.00 | 5000.00 | 100,000.00 |
| | 03 | நெடுங்கேணி கோழிக்கடை | 2000.00 | 5000.00 | 132000.00 |
| | 04 | கனகராயன்குளம் கோழிக்கடை | 2000.00 | 5000.00 | 35000.00 |
| | 05 | கனகராயன்குளம் மரக்கறிச்சந்தை | 2000.00 | 5000.00 | 30000.00 |
| | 06 | கனகராயன்குளம் மீன் சந்தை | 2000.00 | 5000.00 | 35000.00 |
| | 07 | கனகராயன்குளம் மாட்டிறைச்சிகடை | 2000.00 | 5000.00 | 170000.00 |
| | 08 | நெடுங்கேணி மாட்டிறைச்சிகடை | 2000.00 | 5000.00 | 225000.00 |
| | 09 | நெடுங்கேணி வாகன தரிப்பிடம் | 2000.00 | 5000.00 | 50000.00 |

1. கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் 06.11.2015 - 19.11.2015
2. கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளுதல் 19.11.2015 ந.ப 12.00மணி வரை
   கேள்விப் பத்திரம் திறக்கப்படும் 19.11.2015 - பி.ப 01.30 மணிக்கு
3. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை"செயலாளர்,வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி"என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், பூங்கா வீதி, வவுனியா" என முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.
4. கேள்விப் பத்திரம் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் அடையாளஅட்டையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டுவருதல் வேண்டும்.
5. உள்ளூராட்சிமன்றங்களினால் "தவறுனராகக்"கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
6. தெரிவு செய்யப்படும் கடைகள், சந்தைகளுக்கான சித்தி தரக்கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 2/3 பங்குத்தொகையை 16.11.2015 ஆம் திகதி செலுத்தி அன்றைய தினமே ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். மிகுதி 1/3 தொகையினை 30.08.2016 இற்குமுன்னர் மாதாந்தம் சம தொகைகளாக 05 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும்.
7. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியும் காரணம் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ செயலாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
8. கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புபணமும் மீளளிக்கப்படமாட்டாது.
9. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோஅவரது எழுத்து மூல சம்மதம் பெற்ற பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
10. மரக்கறி சந்தை மண்டபம் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர் கொண்டுவரும் பொருள்களின் விற்பனைவிலையில் 4% இற்குமேல் வரிஅறவிடக்கூடாது
11. கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது தலைமை அலுவலகத்ததில் அலுவலகநேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்
12. கடை, சந்தைகளின் தூய்மைக்குபொறுப்பாக இருப்பதுடன் கழிவுகளை சேகரித்து அப்புறப்படுத்துவதற்கு தாங்கள் முழுப் பொறுப்பாளியாவீர்கள்.
13. மரக்கறிசந்தைக்கு உற்பத்தியாளரால் விற்பனைக்கு கொண்டுவரப்படும் உற்பத்திபொருட்களின் நிறையில் கழிவுகள் எதனையும் குத்தகையாளரால் விதிக்கமுடியாது.

பா.பிரபாகரன்
செயலாளர்,
வவுனியா வடக்கு பிரதேசசபை
நெடுங்கேணி.





பரிசுத்த பாப்பரசரின் கண்காணிப்பில் இயங்கி வரும் திருப்பாலத்துவ சபையின் பேசாலை பங்குச் சிறார்களுக்கு சின்னம் சூட்டும் விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை பேசாலை புனித.வெற்றிநாயகி ஆலயத்தில் இடம்பெற்றது. திருப்பலி வேளையில் மன்னார் மறைமாவட்ட இயக்குநர் அருட்பணி யூட் குரூஸ் அடிகளும் பேசாலை பங்குத் தந்தை செபமாலை அடிகளும் சிறுவர்களுக்கு சின்னம் சூட்டினர். (ற)

# வடமராட்சி வடக்கு கலாசார பேரவையின் கண்காட்சி

கரணவாய், நவ.5

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள அனுசரணையுடன் வடமராட்சி வடக்கு பிரதேச கலா சாரப் பேரவை நடத்தும் பண் பாட்டுப் பெருவிழா கண்காட்சி நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நெல்லண்டை அம்மன் ஆலயதிரு மணமண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

வடமராட்சி வடக்கும் பிரதேச செயலரும், கலாசாரபேரவைத் தலைவருமான இ.த ஜெயசீலன் தலைமையில் இடம் பெறும் இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராகவடமாகாண முதலமைச்சரின் செயலாளர் இ.வரதீஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாகவடமாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி செ.வனஜா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் அரங்கத் திறப்புரையை கலாசாரப் பேரவை உறுப்பினர் ந.அனந்தராஜும் சிறப்புரையை செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் 'பருத்தித்துறை கலைப்பாரம்பரியம்' என்ற தலைப்பிலும் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து வல்வெட்டித்துறை ஆதிசக்தி கலாமன்றத்தின் கரகாட்டம், பொலிகை சிந்து தாசனின் கவிதை, நுண்கலைமாணி அன்ரனி சூசைப்பிள்ளையின் அபிநய நடனம் என்பன இடம்பெற்று, கலைஞர் கௌர விப்பும் பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறும்.

இந்நிகழ்வில் செபமாலை பிரான்சிஸ் சேவியர்(சிற்பம்) கற்கண்டு.சபரத்தினம் (நாடகம்), செல்லத்துரை -பரஞ்சோதி(சிந்து நடைக் கூத்து), வெள்ளியம் பலம்- முத்துச்சாமி (நாடகம்), சின்னத்தம்பி-நடனகுரு (உடுக் கடிக் கலை) ஆகிய கலை ஞர்கள் பாராட்டிக் கௌரவிக்கப் படவுள்ளதுடன், சதுரங் காசான் சுப்பிரமணியன் -திருச்செல்வம்சிறப்புகலைஞராகக்கௌரவிக்கப்படவுள்ளார். (ற-108)

# சிறுமியைத் தாக்கிய பெண்ணுக்கு மறியல்

சாவகச்சேரி, நவ.5

12 வயதுச் சிறுமியை தாக்கிக் காயப்படுத்திய குடும்பப் பெண்ணொருவரை விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

மீசாலைப் பகுதியில் குறித்த குடும்பப் பெண்ணால் மோசமாகத் தாக்கப்பட்டு 12 வயது சிறுமி காயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். இந்தச் சம்பவம் தொடர் பாக சிறுமி செய்த முறைப் பாட்டையடுத்து சாவகச்சேரி பொலிஸார் அந்தப் பகுதியைச் சேர்ந்த குறித்த பெண்ணைக் கைது செய்து நேற்று நீதிமன்றில் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதவான் பெண்ணை எதிர்வரும் 12 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும், இக்காலப் பகுதியில் குறித்த பெண்ணை தெல்லிப்பழை மனநல சிகிச்சைப் பிரிவில் மருத்துவ பரிசோத னைக்கு உட்படுத்துமாறும் உத்தரவிட்டார். (ற-9)

# வாசிப்பு மாதத்தை முன்னிட்டு போட்டிகள்

கரணவாய், நவ.5

தேசிய வாசிப்பு மாதத்தை முன் னிட்டு வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம் தனது எல்லைக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக் கிடையில் பல்வேறு போட்டிகளை நடத்தவுள்ளது. கீழ்ப் பிரிவு (தரம் 3-5) மாண வர்களுக்கான குறுக்கெழுத்துப் போட்டியும், இடை நிலைப் பிரிவு (தரம் 6-8) மாணவர்களுக் கான பொது அறிவுப்போட்டியும், மத்திய பிரிவு (தரம் 9-11) மாணவர்களுக்கான துண்டுப்பிரசுர வெளியீடும், மேற்பிரிவு (தரம்12-13) மாணவர்களுக்கான கவிதை எழுதுதல் போட்டியும் நடத்தப்படவுள்ளன.

இந்தப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் ஒவ்வொருபிரிவுக்கும்2மாணவர்கள் என்ற ஒழுங்கில் பெயர்விவரங்களை எதிர்வரும் 8ஆம் திகதிக்கு முன் னர் அனுப்பிவைக்குமாறு நகராட்சி மன்றச் செய லாளர் திருமதி ஜி.வாசு தேவன் கேட்டுள்ளார். (ற-108)

## பயிர்களை அழித்த மாடுகள் பிடிக்கப்பட்டன

சாவகச்சேரி, நவ.5

தென்மராட்சி தெற்கு கோவி லாக்கண்டிப் பகுதியில் நெற் பயிர்களைஅழித்த இருமாடுகள் அந்தப் பகுதி கமக்கார அமைப் பால் பிடிக்கப்பட்டு, 15 தினங்களாக கட்டப்பட்டு உரிமை கோரப்படாத நிலையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த மாடுகளை அவற்றின் உரிமையாளர்கள் அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளாவிடில் ஏலத்தில் விற்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)


# மரண அறிவித்தல்கள்

## பொன்னையா அழகரத்தினம்



பிறப்பு :20.03.1946
இறப்பு :03.11.2015

பச்சிலைப்பள்ளி, புலோப்பளையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா அழகரத்தினம் 03.11.2015 செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - தங்கம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - பாக்கியம் தம்பதியரின் மூத்த மருமகனும், பத்மாவதியின் அன்புக் கணவரும், ஜெயக்குமார் (கனடா), உதயகுமார் (கனடா), ஜெயறஞ்சினி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குறிப்பு:- அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை சனி, ஞாயிறு (07.11.2015, 08.11.2015) ஆகிய தினங்களில் புலோப்பளையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

ஜெயக்குமார்
(மகன்-கனடா, ·1416 9944 098)
உதயகுமார்
(மகன்-கனடா·· 141 699 49568)
விஜி
(சகோதரன்- கனடா+141 6356 8805) (65776)(11,15)

தகவல்:
கி.பாலசுந்தரம்
(மைத்துனர் · யாழ். 077 078 5235),
க.யோகநாதன்
(மருமகன் -கொழும்பு, 077 728 4657),
இராமலிங்கம் (மைத்துனர் - 076 787 3532).

## பூபாலசிங்கம் பரமேஸ்வரன்



காரைநகர், களபூமியைப் பிறப்பிடமாக வும் வளாக வீதி, திரு நெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு (வையாபுரி) பூபாலசிங்கம் பரமேஸ்வரன் 03.11.2015 செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற பூபாலசிங்கம் மற்றும் சிவஞானம் தம்பதியினரின் அன்பு மகனும் காந்தினியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கந்த சாமி மற்றும் குக நேசமலர் (லீலா அக்கா) தம்பதியினரின் அன்பு மருமகனும் பிரியந்தி, ரகுராம் , டிலக்ஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கனக லிங்கம்(லண்டன்), மகாதேவி(கொழும்பு), நிர்மலாதேவி (கனடா), அருள்ராஜா (அருள்), ஞானச்சந்திரன்( ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு சகோதரனும் விஜயரட்ணம் , யோகராசா,ஜெயராணி, செல்வரஜனி, மாலினி, கணேச மூர்த்தி(கனடா),ராகினி, சாந்தரூபி (சுவிஸ்), பாஸ்கரன்(கனடா), சத்திய மூர்த்தி(கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் நிலானி, கஜனி ஆகியோரின் சிறிய தந்தையும் ஹம்சாயினி, ஹம்சாலினி, மதுசூதனன், வைஷ்ணவி, சங்கவி ஆகியோரின் அன்புப் பெரிய தந்தையும் அபர்ணா,மாதுமை, கர்னன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2015) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ,அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

வளாக வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
077 1744 025

(65772)(12.15.)

தகவல்:
குடும்பத்தினர்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்



## பொன்னையா கனகலிங்கம்

(முன்னாள் முகாமையாளர் - கொழும்பு ஈரோஸ் திரையரங்கு)

சங்கானை நாகலிங்க சுவாமிகள் வீதியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தை, பாமன்கடை 2/1, சொலமன் அவனியூவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா கனகலிங்கம் 02.11.2015 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகனும், ஆசைப்பிள்ளை - இராசம்மா தம்பதிகளின் அருமை மருமகனும், காலஞ்சென்ற பத்மராசாவின் அன்புச் சகோதரனும், மகாலட்சுமி (சரஸ்வதி) யின் அன்புக் கணவரும், மணிவண்ணன் (கண்ணன் - சுவிஸ்), சுபாசினி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வத்சலா (இராஜி - சுவிஸ்), சுபாஸ்கர் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும், விதுர்சன், வினுர்சன், வர்சனன், சௌமியா, தாரபி, துசாரா, பிரகாசனா ஆகி யோரின் அன்புப் பேரனும், ஞானசேகரம் (அவுஸ்திரேலியா), சுந்தரமூர்த்தி, ஜெயலட்சுமி, பத்மநாதன், ஜெகதீசன், சந்திரசேகரம் (ஜேர்மனி), குணசேகரம் (ஆசைப்பிள்ளை அன்சன் நகைமாடம்), ராகினி ஆகியோரின் அருமை மைத்துனரும், கவிதா, தனுபா (மலேசியா) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (05.11.2015) வியாழக்கிழமை சங்கானை நாகலிங்க சுவாமிகள் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் மு.ப. 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் சங்கானை கரச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
077 757 8883,
சங்கானை.

(65779)(11,15,17)

ஆ.குணசேகரம்
(ஆசைப்பிள்ளை நகைமாடம்)

# அரசியல் கைதிகள் விடுதலையை மறுப்பது மனிதாபிமானமற்றது

## சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.5

கடந்த முப்பது வருடகாலப் போரின் போது இயக்கங்களில் இணைந்து போராடியவர்களும், அவற்றுக்கு தலைமை தாங்கியோரும் இன்று ஜனநாயக நீரோட்டத்தில் இணைந் தவர்களாக இருக்கின்றனர். இவர்களில் சிலர் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் அமைச் சர்களாகவும் இருந்துள்ளனர்.

அப்படி இருக்கும்போது, சிறை களில் விசாரணையின்றி நீண்ட காலம் இருந்து வருபவர்களை மட் டும் பயங்கரவாதிகளாகக் காட்டி அவர்களின் விடுதலையை மறுப் பது எந்த வகையிலும் மனிதாபிமா னமாகாது. அவர்கள் நிபந்தனை யின்றி விடுவிக்கப்படுவதன் மூலமே அவர்களது உடல் - உள - நிலைமைகள் பாதுகாக்கப்பட்டு நீண்டகாலமாகக் குடும்பங்களில் இருந்து பிரிந்தமைக்கு தீர்வுகாண இயலும். - இவ்வாறு சமூக நீதிக் கான வெகுஜன அமைப்பின் தலைவர் க.ஆனந்தகுமாரசாமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வால் வாக்குறுதி அளிக்கப்பட்டதன் பிரகாரம் தமிழ் அரசியல் கைதி களின் விடுதலை பற்றிய விடயம் சாதகமான முடிவுக்கு வருமா என்பது கேள்விக்குரியதாகவே உள்ளது. முக்கிய அமைச்சர் களினதும் உயரதிகாரிகளினதும் நிலைப்பாடே இதற்கு காரணமா கும். அதேவேளை அனைத்து அரசியல் கைதிகளையும் நிபந் தனையின்றி விடுதலை செய்யாது விட்டால் தங்களது உணவு தவிர்ப்பு போராட்டம் மீண்டும் தொடரும் என்று சிறையில் உள்ள அரசியல்கைதிகள் கூறியுள்ளனர். இந்த நிலைப்பாடு நியாயமான தாகும்.

இவ்வாறு அவர்களின் போராட்டம் தொடருமாயின் அவர்களுக்கு ஆதரவாக அனைத்து மக்க ளினதும் பரந்துபட்ட வெகுஜனப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று எமது கட்சி வேண்டுகோள் விடுக்கிறது. அத்தகைய போராட்டத்தை அர சியல் இன - மத, வேறுபாடின்றி சகலரும் முன்னெடுக்க முன்வர வேண்டும்.

எமது நாட்டில் சகல மக்களையும் சமத்துவமாக வாழவைக்க முடி யாத பேரினவாத ஆட்சிகளின் இனவாத போக்குகளினாலும், அடக்கு முறைகளினாலும் தமிழ் மக்களும் இளைஞர்களும் போராட நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். பேச்சு மூலமான அரசியல் தீர்வுக்கும், இனங்களுக்கிடையிலான இணக் கப்பாட்டுக்கும் பதிலாக அரச பயங் கரவாதம் முன்னெடுக்கப்பட்டது.

அதற்கு உலக வல்லாதிக்க நாடு கள் பல்வேறு உதவிகள் புரிந்து நின்றன. அதனாலேயே போர் இழப்புக்களும் மனித உரிமை மீறல்களும் இடம்பெற்றன. பல் லாயிரக்கணக்கான மக்கள் பாதிக் கப்பட்டனர். இவற்றுக்கு காரணமான எவரும் சிறைவைக்கப்படவோ தண்டிக்கப்படவோ இல்லை. ஆனால் ஒடுக்கப்பட்ட தமிழ் மக் களின் போராட்டம் சார்பாக செயற் பட்டவர்களே நீண்டகால சிறை வாழ்வுக்கு ஆளாக்கப்பட்டனர்.

எனவே ஜனாதிபதியின் வாக்குறு திக்கு அமைவாக நல்லாட்சியின் பெயரால் எதிர்வரும் ஏழாம் திகதிக்கு முன்பாக தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்ட வேண்டும் என்று சமூகநீதிக்கானவெகுஜனஅமைப்பு கேட்டுக் கொள்கின் றது.- என் றுள் ளது. (ற-5,ரி6)

# பெண் தலைமைக் குடும்பங்களுக்கு தற்காலிக வீட்டுத் திட்டம் விரைவில்

## சம்பூரில் அமைக்கப்படவுள்ளன

திருகோணமலை, நவ.5

சம்பூரில் மீள் குடியேற்றப்பட்டுள்ள பெண்கள் தலைமைத்துவக் குடும் பங்களுக்கு தற்காலிக வீடுகள் அமைத்துகொடுக்கும் பணி விரைவில் ஆரம்பிக்கப்படவுள் ளது. இதற்கான உதவிகளை கன டாவில் வாழும் தமிழர்கள் மற்றும் கனேடிய திருமலை நலன்புரி சங்கத்தினர் வழங்கவுள்ளனர். அத்துடன் இந்த வீட்டுத்திட்டம் கிழக்கு மாகாண மீள்குடியேற்ற அமைச்சின் நேரடி வழிகாட்டல் மூலம் இடம்பெறவுள்ளது.

இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை சம்பூரில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி மற் றும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கு.நாகேஸ்வரன், கனேடிய திருமலை நலன்புரி சங்கத்தின் செயலாளர் ஆர்.கைலை வாசன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இதுதொடர்பில் கனேடிய திருமலை நலன்புரிச் சங்கத்தின் செயலாளர் ஆர்.கைலைவாசன் தெரிவித் ததாவது:-

முதற்கட்டமாக 21 பெண் தலைமைத் துவக்குடும்பங்களுக்கு வழங்கப்பட வுள்ள இந்தத் தற்காலிக வீட்டுத் திட் டம், தலா இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியானதாக அமையும். 16க்கு 20 எனும் அளவுத் திட் டத்தில் அமைக்கப்படவுள்ள இந்த வீட்டுத்திட்டத்தில் ஒரு படுக் கையறை மற்றும் ஒரு சமையலறை என்பவற்றுடன் ஒருவரவேற்பு அறை யும் அமையவுள்ளது. 7 அடி உய ரத்துக்கு சுவர் உள்ளவாறு சிறந்த தரமான ஒரு தற்காலிக வீடாக இது அமையும் - என்றார்.

தற்போது சம்பூரில் விடுவிக்கப்பட்ட பகுதியில் பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் 62 பேர் உள்ள நிலையில் அவர்களில் சிலரை யு என் எச்.சீ.ஆர். மற்றும் ஏ.ஆர். ஆர். போன்ற நிறுவனங்கள் பெறுப்பேற்று வீட்டுத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளன. 49 பேருக் கான வீட்டுத்திட்டம் அமைக்கும் பெயர்விவரத்தைகனேடியதிருமலை நலன்புரி சங்கத்தினர் கோரிய போதும், முதற்கட்டமாகமூதூர்பிரதேச செயலகத்தால் 21 பேரின் விவ ரங் கள் வழங்கப்பட்டுள்ளன. இதற் கான அடிக்கல் நடும் நிகழ்வு எதிர் வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (ற-10,40)

# நிறுவுநர் நாளும் பரிசளிப்பு விழாவும்

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் கல்லூரி மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கு.விமலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிர தம விருந்தின ராகவடம ாக ரண முதலமை ச்சர் க.வி. விக்னேஸ் வரனும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக்கல்வி பணிப்பாளர் செ.சந்திர ராசாவும், கௌரவ விருந்தி னராக முன்னாள் அதிபர் ச.சிவனேஸ்வரனும் கலந்து கொள்ள வுள்ளனர். நினைவுப் பேருரையை யாழ்.பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன் நிகழ்த்தவுள்ளார். இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கல்லூரி சமூகத்தி னர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ற)







**வாகனம் விற்பனைக்கு**

TATA Exnon நல்ல நிலையிலுள்ள NP PY - XXXX புதிய வாகனம் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
077 670 4364,077 835 0478


# சாவகச்சேரி மத்தியஸ்தர் சபை அமர்வு 8ஆம் திகதி

சாவகச்சேரி, நவ.5

சாவகச்சேரி மத்தியஸ்தர் சபையின்அமர்வு எதிர்வரும் 8ஆம் திகதி நுணாவில் கிழக்கு அமிர் தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறும் என்று சபையின் தவிசாளர் அறிவித்துள்ளார்.

வழமையாக அமர்வுகள் இடம்பெறும். சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் அன்றைய தினம் பொதுப் பரீட்சையொன்று நடைபெறவுள்ளதால் குறித்த அமர்வு நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தி யாலயத்துக்கு மாற்றப்பட்டுள்ளது எனத் தெரிவித் தார். (ற-9)


**விற்பனைக்கு**



170அடி அலங்காரப் பந்தல் (சொக்கட்டான்) ) விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 021 205 4734, 077 985 0270

ந.முரளிதரன், உடுப்பிட்டி வடக்கு,உடுப்பிட்டி.





# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ.5
யாழ். உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை பி.ப ஒரு மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன. பாடசாலை அதிபர் இரா. ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் பிரதம விருந்தினராக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுலகுமாரன் கலந்து கொள்ளவுள்ளார்.
இந்த நிகழ்வில் மாணவத் தலைவர்கள், வகுப்புத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டல் வைபவமும் நடைபெறவுள்ளது. (ரு-ரி5)


## நீங்காத நினைவுகள்

27 ஆம் ஆண்டு | 3 ஆம் ஆண்டு





**பேதுறுப்பிள்ளை ஜேம்ஸ் அமிர்தநாயகம்**
(ஆசிரியர் யாழ்.பத்திரிசியார் கல்லூரி)
மண்ணில் 22.02.1912 விண்ணில் 05.11.1988

**அலெக்சாந்திரா அமிர்தநாயகம்**
(ஆசிரியை- யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்)
மண்ணில் 26.02.1924 விண்ணில் 05.11.2012

"ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டவரே பேறுபெற்றவர்"

காலங்கள் கடந்தவரை
காலம் எல்லாம் கல்வியினால் கற்று
கற்றதனைத்தையும் வாழ்வாக்கி
தம் வாழ்வினையே கல்வியாக்கி
கல்வியோடு கருணை, பக்தி பண்புகளைப் புகட்டி
எம் வாழ்வில் நாம் முன்செல்ல
முன்னுதாரணம் காட்டினீர்கள்
காலங்கள் பல கடந்தாலும்
இறைவழி நடந்து செபத்தால்
உம்மை நினைத்து உங்கள் ஆன்மா
சாந்தியடைய வேண்டி நிற்கின்றோம்.

பாசமுடன் நினைவு கூரும்
பிள்ளைகள், உறவுகள்.

யாழ்ப்பாணம் (65745) (13.15)



## நினைவஞ்சலி



**அமரர் பத்மாசினி அம்மா சிவபாதசுந்தரம்**
வையத்துள் 08.06.1944 வானுலகில் 16.11.2014
திதி: அபரபக்கநவமி
05.11.2015

**அமரர் கோணேசபிள்ளை சிவபாதசுந்தரம்**
(ஓய்வுபெற்ற அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் யாழ். மாநகரசபை)
வையத்துள் 09.02.1932 வானுலகில் 04.06.2003
திதி: பூர்வபக்க பஞ்சமி

சூரிய சந்திரராய் விண்ணகத்தில் மறைந்தாலும்
உங்களை நினைக்கையிலே விழிநீர் சொரிகிறதே
கண் விழித்து எமைத்தாங்கி விருட்சங்கள் ஆக்கினீர்
அதன் நிழலில் உங்களை ஆற்றிட நம்மால் முடியலையே
உங்கள் செல்வங்கள் நாமென்றீர் செல்வங்கள் கூடமுன்னே
செல்வங்கள் கூடிடிச்சு பெற்றகடன் தீர்க்க வழியில்லையே
உங்கள் வாழ்வும் வழிகாட்டலும் என்றும் நினைவுகளாய்
ஆயுள் உள்ளவரை மனதில் சுடரேற்றி சுமந்திருப்போம்.

118/4, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் நீங்கா நினைவுடன்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(65775) (13.15)


# கூட்டுறவுப் பணியாளர்களது சம்பள அதிகரிப்பு தொடர்பில் சுற்றறிக்கை

யாழ்ப்பாணம், நவ.5
கூட்டுறவுப் பணியர்ளர்களுக்கான முப்பது வீத சம்பள அதிகரிப்புக் கொடுப்பனவை அடிப்படைச் சம்பளத்துடன் இணைப்பதற்கான புதிய சுற்றறிக்கை இந்த வாரத்தில் வெளியிடப்படும் என்று வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவின் பதில் செயலாளரும், யாழ்.மாநகர ஆணையாளருமான பொ.வாகீசன் தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
இந்தக் கொடுப்பனவை கூட்டுறவுப் பணியாளர்களின் அடிப்படைச் சம்பளத்துடன் இணைப்பதற்கான ஆணைக்குழுவின் சுற்றறிக்கைக்கு வடமாகாண கூட்டுறவு அமைச்சர் அங்கீகாரம் வழங்கியுள்ளார்.
அமைச்சரின் அனுமதியை அடுத்து இந்த வாரத்தில் புதிய சுற்றறிக்கை ஒன்று சகல சங்கங்களுக்கும் அனுப்பிவைக்கப்படும். அதன்படி புதிய சுற்றறிக்கைக்கு அமைவாக இந்த முப்பது வீத சம்பள அதிகரிப்புக் கொடுப்பனவு அடிப்படைச் சம்பளத்துடன் இணைக்கப்பட்டே பணியாளர்களுக்கு வழங்கப்படும்.
வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் வெளியிடப் பட்ட இந்தச் சுற்றறிக்கைக்கு அமைவாக அனேகமான சங் கங்கள் முப்பது வீத அதிகரித்த சம்பளக் கொடுப்பனவை வழங்கி வருகின்றன.
இந்தக் கொடுப்பனவை வழங் குவதற்கு கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுமதி பெறப்படத் தேவையில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.
தற்போது வெளியிடப்படும் புதிய சுற்றறிக்கைக்கு அமைவாகவே சங்கங்கள் இந்த முப்பது வீத கொடுப்பனவை அடிப்படைச் சம்பளத்துடன் இணைத்தே வழங்க வேண்டும் - என்றார். (ரு-17)

# அமெரிக்காவில் காலமானார் கலாநிதி ஆ.வேலுப்பிள்ளை

யாழ்ப்பாணம், நவ.5
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி ஆ.வேலுப்பிள்ளை அமெரிக்காவில் காலமானார். கடந்த செவ்வாய்க்கிழமை சான்பிரான்சிக்கோ நகரில் தனது 79ஆவது வயதில் அவர் காலமானார்.
பேராசிரியர் வேலுப்பிள்ளை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவராவார். இவர் 1960ஆம் ஆண்டு தமிழ்த்துறையில் முதல் தரத்தில் சித்தியடைந்து துணை விரிவுரையாளரானார். தனது 28ஆவது வயதில் தமிழ்ச் சங்கங்களின் மொழி தொடர்பில் ஆய்வு செய்து, இரட்டைக் கலாநிதி ஆனார். பேராதனை மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகங்களில் பல ஆண்டுகள் காலமாக பேராசிரியராகவும் தமிழ்த் துறைத் தலைவராகவும் பணிபுரிந்த பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை, அதன் பின்னர் சுவீடன், உப்சாலா மற்றும் அமெரிக்கா, வேர்ஜினியப் பல்கலைக் கழகங்களில் பணியாற்றி ஓய்வு பெற்றிருந்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இவர் பணி யாற்றிய காலத்தில் தமிழ் மன்றக் காப்பாளராக இருந்ததுடன், மன்றத்தின் இதழான 'தமிழோசை' சிறப்பாக வெளிவர ஒரு காரணியாகவும் விளங்கியவர்.
இவர் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் பல நூல்களையும், கட்டுரைகளையும் எழுதியுள்ளார். 1996ஆம் ஆண்டில் இவரது ஆய்வொன்றுக்கு உப்சாலா பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட கலாநிதிப் பட்டம் இவர் பெற்ற மூன்றாவது கலாநிதிப் பட்டமாகும். (ரு-10)

## புலமைப்பரிசில் சித்தியடைந்த மாணவர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், நவ.5
வடமராட்சி அல்வாய் சிறிலங்கா வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப் பரிசில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வு இன்று வியாழக்கிழமை பி.ப.1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களும் சித்திபெற்ற மாணவர்களும், கௌரவிக்கப்படவுள்ளனர்.
அதிபர் வீ.இந்திரபாலன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கிளி நொவிவிசி மாவட்ட சமூக சேவைகள் அலுவலரும், பாடசாலை பழைய மாணவனுமாகிய வே.தபேந்திரன் கலந்து கொள்வார்.
பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்ற நான்கு மாணவர்களுக்கு அமரர் வேலுப்பிள்ளை வேதநாயகம் நினைவுப் பதக்கங்களும், பணப்பரிசில்களும் வழங்கப்படவுள் ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ரு-9)


### துயர் பகிர்கின்றோம்

மன்ற உறுப்பினர் ந.சிவசுதன் ( உரிமையாளர்- சாவகச்சேரி சித்திவிநாயகர் களஞ்சியம் ) அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி வாலாம்பிகை நடராஜா**

அவர்கள் 31.10.2015 இயற்கையெய்தியுள்ளார். அவரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு மன்றம் தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

சாவகச்சேரி கைத்தொழில்
வணிகர் மன்றம்.

(சி/19824)(11,15,17)



### கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் பழைய மாணவனும் முன்னாள் அரச அதிபருமான திரு.செ.பத்மநாதன் அவர்களின் துணைவியார்

**திருமதி இராதாதேவி பத்மநாதன்**

அவர்கள் காலமான செய்தி கேட்டு துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்,பிரதி அதிபர், ஆசிரியர்கள்.
யா/அரியாலை ஸ்ரீ பார்வதி
வித்தியாசாலை, யாழ்ப்பாணம்.


## புதிய இயக்குநர் சபை தெரிவு

யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்குப் புதிய இயக்குநர் சபை அமைக்கப்பட்டுள்ளது. முன்னைய இயக்குநர் சபையின் பதவிக்காலம் முடிவடைந்ததையடுத்து புதிய இயக்குநர் சபை தெரிவுக்கான பொதுச் சபைக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அதில் சமாசத்தின் புதிய தலைவராக சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் சி.குமரவேல் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். உப தலைவராக மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த மா.செல்வராசா மற்றும் சமாச இயக்குநர்களாக யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த மு.ஜெ.சுஜிந்திரன், தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த எஸ்.தனபாலசிங்கம், புங்குடுதீவு, நயினாதீவு பல நோக்குக் கூட் டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த ந.சிவநேசன், புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த சி.ரகுராஜா, கைதடி பலநோக்குக்கூட்டுறவுச்சங்கத்தைச்சேர்ந்த கோ.கௌரிதாசன், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட் டுறவுச் சங்கத்தைச்சேர்ந்த எம்.அமிர்தலிங்கம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ-17)

## அலைபேசி விற்பனையில் சரித்திரம் படைத்த சம்சுங்




அலைபேசிச் சாதன உற்பத்தியில் தற்போது சம்சுங் நிறுவனமே தொடர்ச்சியாக பல்வேறு வகையான தொடுபேசிகளை அறிமுகம் செய்து வருகின்றது.
இந்த நிறுவனம் இந்த வருடத்தில் முதல் மூன்று காலாண்டுப் பகுதிகளில் சுமார் 83.8 மில்லியன் தொடுபேசிகளை விற்பனை செய்து சாதனை படைத்துள்ளது.
இதேவேளை-இந்தக் காலப் பகுதியில் அப்பிள் நிறுவனம் 38 மில்லியன் வரையான அலைபேசிகளையே விற்பனை செய்துள்ளது.
மேலும், அலைபேசிகளுக்கான உலக சந்தையில் சம்சுங் நிறுவனம் 23.7 சதவீதத்தையும், அப்பிள் நிறுவனம் 13.6 சதவீதத்தையும் ஆக்கிரமித்துள்ளன.
அத்துடன் ஏனைய தொடுபேசி வடிவமைப்பு நிறுவனங்களான ஹுவாயி (Huawei) 26.7 மில்லியன் அலைபேசிகளையும்,லெனோவோ (Lenovo) 18.8 மில்லியன் அலை பேசிகளையும், சியா ஓமி (Xiaomi) 17.8 மில்லியன் அலைபேசிகளையும் மேற்குறித்த காலப்பகுதியில் விற்பனை செய்துள்ளன.

## ஐ போன் (iPhone) க்கு சவால் விடும் வண் பிளஸ் எக்ஸ் (OnePlus X)



அப்பிள் நிறுவனத்தின் ஐ போன் 6 (iPhone 6) போன்ற வடிவமைப்பை ஒத்ததாகக் காணப்படும். வண்பிளஸ்எக்ஸ் (OnePlus X) தொடுபேசிஎதிர்வரும் நவம்பர் மாதம் 19 ஆம் திகதி அறிமுகமாக வுள்ளது. 5 அங்குல அளவு, 1920 x 1080 Pixel Resolution உடையதும், நுஸிசிம் தொழில் நுட்பத்தைக் கொண்டதுமான தொடுதிரையை உடைய இந்தக் அலைபேசி, Quad Core Qualcomm Sna pdragon 801 Processor, பிரதான நினைவகமாக 3GB RAM மற்றும் 16GB சேமிப்பு நினைவகம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.இவை தவிர 13 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமரா, 8 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்பை ஏற்படுத்துவதற்கான கமரா, 2525 mAh மின்கலம் என்பவற்றையும் கொண்டுள்ள இந்த அலைபேசியின் விலை, 250 அமெரிக்க டொலர்கள் ஆகும்.

## மர நடுகை மாதம்

## நிலமும் நலமும்

*“ஒரு மனிதன் தனக்காக இல்லாவிட்டாலும் தனது எதிர்கால சந்ததியினருக்காக மரங்களை நடவேண்டும்”*
*-அலெக்சாண்டர் சிமித், ஸ்கொட்லாந்து*

பூகோளம் வெப்பமாகி வருகின்றது. பல வழிகளிலும் அதற்கு நாம் துணை போகின்றோமோ என எண்ணத் தோன்றுகின்றது. யாழ்ப்பாணத்தில் பல வீடுகளின் முற்றத்திலும் நிலத்தைக் காணமுடியவில்லை. நன்மண்ணுக்கு மேலாக கொங்கிரீட் இட்டு அதன்மேல் சிமெந்து நில ஓடு பதித்துள்ளமையையே காணமுடிகின்றது. பார்ப்பதற்கு அழகாகத்தான் உள்ளது. ஆனாலும், வளமான மண்ணுக்குச் சமாதி கட்டப்பட்டமையையே அங்கு காண முடிகின்றது. உயிருள்ள மண் கொங்கிரீட் பூச்சின் கீழ் உயிர் ஊசலாடிக்கொண்டு இருக் கின்றது. உங்களது முற்றத்து மண்ணை ஒரு 6 - 10 அங்குலங்கள் வரை தோண்டிச் சென்றால், அங்கு பல்வேறு சிறிய, நடுத்தர உயிரினங்களை அவதானிக்க முடியுமாயின் அது வளமான மண், எமது வாழ்வுக்கு நலமான மண். ஏனெனில் அங்கு தாவரங்கள் வளர்வதற்கான சூழல் உண்டு. இதனை மூடி - மறைத்து - முற்றத்து அழகுக்காக - கொங்கிரீட் கலவையைக் கொட்டிச் சிமெந்துக் கல் பதிக்கலாமா என ஒரு தடவைக்கு இரு தடவை சிந்திக்க வேண்டும். இவ்வாறு உள்ள வீடுகளில் கோடை வெயில் தாங்கிக் கொள்ள முடியாததாகவே இருக்கும் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. நிலத்தைப் பண்படுத்துவதில் மண் புழுக்களும் முக்கிய இடத்தை வகிக்கின்றன. முன்பெல்லாம் எங்கு மண்ணைத் தோண்டினாலும் மண்புழுக்களைக் காணக்கூடியதாக இருந்தது. இன்று அந்த இனமும் அருகிவிட்டது. ஓரிடத்தில் நாற்று மேடையமைக்கும் போது, அந்த மேடையில் 3 முதல் 4 மண்புழுக்கள் காணப்பட்டால் நீங்கள் அதிர்ஷ்டசாலி. 5 -6 மண் புழுக்கள் காணப்பட்டால் நன்று, மிக நன்று. மண்புழு ஒன்றையேனும் காணமுடியாதுவிட்டால், நிச்சயம் நீங்கள் துரஅதிர்ஷ்டசாலிதான். என்ன செய்வது இப்போதாவது மண் நலம் கெடாது பாதுகாக்கத் தொடங்குவோம். மரங்கள் உதிர்க்கும் இலைகள் சருகுகள் அல்ல. அது மண்ணுக்கு வளம் தரும் உரம். மண்வளம் பற்றிய சிறுவர் பாடல்கள் நிறைய வெளிவர வேண்டும். சின்னஞ் சிறுசுகளின் மனதிலும் மண் நலம், மரநடுகை பற்றிய விதைகள் ஊன்றப்பட வேண்டும்.

-செ.செல்வராசா, அரியாலை-

Social Media
Photo Sharing க்கு நல்லது.
ஆனா, தற்காலிகமானது.

JAMPHOTO Books
ரொம்ப நல்லது...
அது நிரந்தரமானது!



ரொம்ப யோசிக்காதீங்க...
மிகவும் இலகுவாக மூன்றே படிமுறைகளில் உங்கள் நினைவுகளை நிரந்தரமாக்கிக் கொள்ள
www.jamphotobooks.com க்கு log in செய்யுங்கள்.

1 பதிவிறக்கம் செய்யக்கூடிய இலவச மென்பொருள்
2 உங்கள் விருப்பப்படி வடிவமைக்கப்படும்
3 order online உங்கள் வீட்டுக்கே விநியோகிக்கப்படும்.

ரூ. 2950/= முதல்

ஜாம் போட்டோ பிரைவட் லிமிடட், இல. 91, காலி வீதி, கொழும்பு 4, இலங்கை.
தொடர்பு இல: தொ.பே. +9411 7389721 ; பக்ஸ்: +9411 2055129 கைபேசி: +9477 2871212

JAMPHOTO
EVERLASTING BEAUTIFUL STORIES

# நேபாளத்தில் பஸ் விபத்து

## 30 பேர் சாவு: 35 பேர் காயம்

ராம்சே, நவ.5
நேபாளத்தில் ராம்சே கிராமத்தில் பயணித்த பஸ் ஒன்று மலையிலிருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 30 பேர் உயிரிழந்ததோடு 35பேர்படுகாயம் அடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக அருகிலிருந்த மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்து நடந்த பகுதி, நேபாள தலைநகர் காத்மாண்டுவில் இருந்து 80 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது.

இந்த விபத்துக் குறித்து கருத்து வெளியிட்ட நேபாள அரசின் உயர் அதிகாரி சிவராம் கேலால்-

கிழக்கு நேபாளத்தில் ராம்சே கிராமத்தில் அளவுக்கு அதிகமாக பயணிகளை ஏற்றிக்கொண்டு மலைப் பாதையில் சென்ற பஸ் மலையிலிருந்து கவிழ்ந்து 500 அடி பள்ளத்தில் விழுந்துள்ளது. அதில் பயணித்த 30 பயணிகள் உயிரிழந்துள்ளனர். 35 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். கிராம மக்கள் பொலிஸாருடன் சேர்ந்து மீட்பு பணிகளில் ஈடுப்பட்டு வருகிறார்கள் - என்றார்.

நேபாளத்தில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகப் பொது மக்



கள் பஸ்ஸின் கூரை மீது அமர்ந்து பயணித்தமையே பஸ் சமநிலையை இழக்கக் காரணமாக அமைந்துள்ளது என்று ஆரம்பக் கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. அதேவேளை, நேபாளத்தில் ஏற்படும் பெரும்பாலான விபத்துகளுக்கு காரணம் தரமற்ற நிலையில் இருக்கும் வாகனங்களும், வீதிகளுமே என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)



நேபாளம் மற்றும் பஞ்சாப் எல்லையில் கலகம் அடக்கும் பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் மோதல் இடம் பெற்று கொண்டு வர முடியாதவாறு குறித்த எல்லையை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கலைப்பதற்கு பொலிஸார் முற்பட்டபோது எல்லை மறிப்பால் நேபாளத்தில் எரிபொருளுக்கான தட்டுப்பாடு, நிலவுவதோடு மாத்திரமல்லாமல், இந்தியாவுடனான நேபாளத்தின் உறவி நேபாளத்தில் கொண்டு வரப்பட்ட புதிய அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கடந்த ஒரு மாதத்துக்கும் மேலா போராட்டம் இடம்பெற்று வருகின்றது.

# கண்ணீர்ப் புகை குண்டால் பலஸ்தீன குழந்தை சாவு

ஜெருசலேம், நவ.5
பலஸ்தீன இளைஞர்களுக்கும் இஸ்ரேலியப் படையினருக்கும் இடையே நடந்த மோதலில் இஸ்ரேலியப் படையினர் வீசிய கண்ணீர் புகைக் குண்டால் எழுந்த வாயுவைச் சுவாசித்த எட்டு மாத ஆண் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது என்று பலஸ்தீன சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பெத்லஹேமுக்குத் தெற்கே உள்ள ஒரு கிராமத்தில் இஸ்ரேலியர்கள் வீசிய கண்ணீர் புகைக் குண்டால் எழுந்த வாயு ஒரு வீட்டுக்குள் பரவி அங்கு இருந்த குழந்தை உயிரிழந்துள்ளது என்று கூறப்படுகின்றது. இது குறித்து இஸ்ரேலிய இராணுவம் விசாரணையை மேற்கொண்டு வருகின்றது என்று இஸ்ரேலிய இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

ரமதான் தாவப்தெ என்ற இந்தக் குழந்தையின் மரணத்துடன், இந்த மாதம் நில்விக்கொண்டிருக்கும் பரவலான அமைதியின்மையில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்களின் எண்ணிக்கை 60ஐத் தாண்டியுள்ளதோடு, இதே காலகட்டத்தில் பலஸ்தீனத் தாக்குதல்களில் குறைந்தது 9 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். (ற)

# அணு ஆயுதத் த நிறுத்த வேண்டு

## அமெரிக்க மற்றும் தென்கொரிய பாதுகாப்பு தலைமைகள் வலியுறுத்து

சியோல், நவ.5
வடகொரியா தனது அணு ஆயுதத் திட்டங்களுடன் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்த வேண்டும் என அமெரிக்க மற்றும் தென்கொரிய பாதுகாப்பு தலைமைகள் வலியுறுத்தியுள்ளன.

நீண்ட தூர ஏவுகணைகளை அந்த நாடு பரிசோதித்து வருகின்றமை குறித்தும், அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் ஆஷ் கார்டர் மற்றும் தென்கொரிய பாதுகாப்பு அமைச்சர் ஹன் மின்-கூ ஆகியோர் தங்களது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். வடகொரியாவுக்கு எதிரான அமெரிக்கா மற்றும் தென்கொரிய கூட்டுப்படைகளின் வருடாந்த ஆய்வுக் கூட்டம் தென்கொரிய தலை[illegible]ர் சியோலில் நடைபெற்று வருகிறது. இதன்போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இதுகுறித்து ஆஷ்டன் கார்ட்டர் கூறும்போது,

கொரிய தீபகற்ப பாதுகாப்புக்கு ஆபத்தை விளைவிப்பதாகவும்

தொ விப் வரு



கடந்த சனிக்கிழமை ரஷ்ய பயணிகள் விமானம் விபத்துக்குள்ளானது. அதில் குழந்தைகள், பெரியவர்கள் என 224 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் ரஷ்யர்களாவர். உயிரிழந்தவர்களுக்கு ரஷ்யாவின் புல்கோவோ விமான நிலையத்தில் [illegible]க்களைக் கொண்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. (ற)

# ஜேர்மனியில் குவியும் அ

சம்தி, நவ.5
ஜேர்மனியில் குவியும் புகலிடக் கோரிக்கையாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதை அடுத்து, அகதிகள் விவகாரத்தில் ஜேர்மனியின் ஜனாதிபதி ஏஞ்சல் மெர்கல் உள் நாட்டு மக்களின் நலனைப் பற்றி கவலைப்படுவதில்லை என்று எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.

ஐரோப்பியாவிலேயே அதிக அளவு அகதிகளுக்கு அடைக்கலம் அளிக்கும் நாடாக ஜேர்மனி விளங்கி வருகிறது. அங்குள்ள சம்தி என்ற கிராமத்தில் 750 அகதிகள் தங்கும் விதத்தில் முகாம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் முதல் கட்டமாக தற்போது 100 அகதிகள் வந்துள்ளனர்.

இந்நிலையில், இன்னும் சில நாள்களில் அந்தப் பகுதியில் வசிக்கும் குடிமக்களின் எண்ணிக்கையை விட அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்து விடும் என் பகுதியை சேர்ந்த 102 குடியிருப் அச்சமடைந்துள்ளனர்.

அகதிகளின் வருகையால் குற் கள் அதிகரிக்கக் கூடும் என்றும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அ[illegible] கிராம ஹொல்ஜெர் நெய்மென் தெரி தாவது-

750 பேர் என்ற இந்த எண் விரைவில் ஆயிரமாக அ[illegible]கரிக் ஜேர்மனியின் 3 மில்[illegible]யன் வேலையில்லாமல் இ[illegible]கின் லட்சம் மக்கள் வீடுகள் இல்லா கின்றனர்.

ஆனால், அவர்களைப் பற்றிச் சி அகதிகள் நலனில் மட்டுமே அக்கறை செலுத்துகிறார்.



...ம் பெற்றுள்ளது. இந்தியாவிலிருந்து நேபாளத்துக்குள் எரிபொருளைக் ...ட்டபோது இந்த மோதல் ஏற்பட்டுள்ளது. ஆர்ப்பாட்டக்காரர்களின் இந்த ...தின் உறவிலும் விரிசல் ஏற்படலாம் என்ற அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. ...தம் மேலாக நேபாளத்தில் எல்லை மறித்து பொருளாதார முற்றுகைப் (ற)

# ரஷ்ய விமான விபத்துக்கு ஐ.எஸ். காரணம் இல்லை

## பொய்ப் பரப்புரை என்கிறார் எகிப்திய ஜனாதிபதி

கெய்ரோ, நவ.5

ரஷ்ய விமானத்தை ஐ.எஸ். தீவிரவாதிகள் சுட்டு வீழ்த்தினர் என்று கூறுவது பொய்ப் பரப்புரை என எகிப்து ஜனாதிபதி அப்துல் பத்தா அல் சிசி தெரிவித்துள்ளார்.

ரஷ்ய விமானத்தை ஐ.எஸ். தீவிரவாதிகள் சுட்டு வீழ்த்தியதாகக் கூறுகின்றனர். இது ஒருபொய்ப்பரப்புரை. எகிப்தின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் நோக்கத்துடனும், நாட்டின்பாதுகாப்பை சீர்குலைக்கும் விதத்திலும் மேற்கொள்ளப்படும் ஒரு பரப்புரையே இது. குறித்த விமானம் விபத்துக்குள்ளானசினாய்ப்பகுதி முழுவதும் எமது கட்டுப்பட்டில்தான் உள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் அமெரிக்காவின் தேசிய புலனாய்வு அமைப்பின் இயக்குநர் ஜேம்ஸ் தெரிவிக்கையில், விமானத்தை ஐ.எஸ். தீவிரவாதிகள் சுட்டு வீழ்த்தியதற்கான நேரடியான ஆதாரங்கள் எதுவும் இல்லை. அதேவேளை குறித்த செயலை அவர்கள் செய்திருப்பதற்கு வாய்ப்பு மிகவும் குறைவு என தெரிவித்துள்ளார்.

அதேவேளை, விமானம்நடுவானில் இரண்டாக உடைந்த பின்னரே தரையில் விழுந்து நொறுங்கியுள்ளது என்று ரஷ்ய அதிகாரிகளை சுட்டிக்காட்டிச் செய்திகள் வெளியாகியுள்ளன.



விபத்துக்குள்ளான ரஷ்ய விமானத்தின் கறுப்புப் பெட்டியை ஆய்வு செய்யும் பணி தொடங்கியுள்ளது. அதில் பதிவான விவரங்கள், சில வாரங்களிலோ ஒருமாதத்திலோ தெரியவரும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனை ரஷ்ய விசாரணைக் குழு ஆய்வு செய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை, 224 பேருடன் எகிப்தின் ரம் எல் கே் நகரில் இருந்து ரஷ்யாவின் செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் நகருக்கு புறப்பட்டுச் சென்ற மெட்ரோஜெட் எயார்லைன்ஸ் விமானம் தனது பயணத்தை ஆரம்பித்து, சில நிமிடங்களில் சினாய் பகுதியில் விழுந்து நொறுங்கியது. இந்த விபத்தில் விமானத்தில் பயணித்த அனைவரும் உயிரிழந்தனர். (ற)

# டொமினிக்கோவிலிருந்து தப்பிய விமானிகள் பிரான்ஸில் கைது

பரிஸ், நவ.5

டொமினிக்கோ குடியரசில் 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் அங்கிருந்த தப்பித்துச் சொந்த நாட்டுக்கு வந்த பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 2 விமானிகளை அந்த நாட்டுப் பொலிஸார் கைது செய்து விசாரணையை தொடங்கியுள்ளனர்.



பிரான்ஸ்நாட்டைச்சேர்ந்த பஸ்கல் பியூரட் (வயது-55) என்ற விமானியும் புருனோ ஓடஸ் (வயது-56) என்ற துணை விமானியும் டொமினிக்கோ குடியரசில் போதைப் பொருள் கடத்தினர் என்று குற்றச்சாட்டில் 2013ஆம் ஆண்டு மார்ச் மாதம் கைது செய்யப்பட்டனர். இரண்டு விமானிகளும் 26 பெட்டிகளில் சுமார் 680 கிலோ எடையுள்ள கொக்கேன் வகை போதைப் பொருளைக் கடத்தி வந்தனர் என்று குற்றஞ் சாட்டப்பட்டது. இருவரின் மீதான குற்றத்துக்காக அந்த நாட்டு நீதிமன்றம் 20 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்திருந்தது.

எனினும், அங்கிருந்து தப்பித்த இருவரும் பிரான்ஸில் உள்ள லியோன் நகரில் உள்ள தங்களது வீடுகளில் தலைமறைவாக இருந்துள்ளனர். இந்த நிலையில், நேற்றுமுன்தினம் காலை நீதிபதி உத்தரவு பெற்ற பொலிஸார் விமானிகளின் வீடுகளுக்குச் சென்று அவர்களைக் கைது செய்துள்ளனர்.

தற்போது இரண்டு விமானிகளிடமும் ரகசிய விசாரணையை பொலிஸார் தொடங்கியுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

பொலிஸாரின் இந்த நடவடிக்கை தேவையற்றது என விமானிகளின் வழக்கறிஞர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

போதை பொருள் விமானத்தில் இருந்ததை தாங்கள் கவனிக்கவில்லை என்றும், அதனைக் கடத்தவும் முயற்சி செய்யவில்லை எனவும் இரு விமானிகளும் மறுத்த நிலையில், தற்போது பிரான்ஸ் நாட்டு பொலிஸார் அவர்களைக் கைது செய்துள்ளனர். நீதிமன்றம் விடுத்துள்ள இந்த உத்தரவை சட்டரீதியாக எதிர்க்கொள்வோம் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். (ற)



# பனியால் உறைகிறது சீனாவின் வடமேற்கு

பீஜிங், நவ.5

சீனாவில் பனிப்பொழிவு தீவிரம் அடைந்துள்ளது. அதனால் முக்கிய சாலைகள் பனியால் மூடப்பட்டுள்ளதையடுத்து உள்ளூர் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

அந்த நாட்டின் தன்னாட்சிமாகாணமான சிஞ்சியாங் யூகர் பகுதியில் அதிகளவு பனிப்பொழிவு பதிவாகியிருக்கிறது. வீதிகள் முற்றாக பனியால் மூடப்பட்டுள்ளன. அதனால் வாகனச் சாரதிகள் பெரும் சிரமங்களை சந்தித்து வருகின்றனர். கனரக வாகனங்கள் மெதுவாக ஊர்ந்து செல்வதால் போக்குவரத்தும் ஸ்தம்பிதமடைந்துள்ளது.

கடுங்குளிர் வாட்டி வதைப்பதால் மாகாண மக்கள் வீடுகளுக்குள்ளேயே முடங்கியிருப்பதுடன் அவர்களது இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. வீதிகளிலுள்ள பனிகளை அகற்றும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். அதேவேளை, பனிப்புயல் உருவாகும் வாய்ப்புள்ளதால் குளிர் மேலும் அதிகரிக்கக் கூடும் என மாகாணத்தின் வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# ...தயாரிப்புக்களை ...டும் வடகொரியா



...தொடர்ந்து அச்சுறுத்தல் விளைவிப்பதாகவும் வடகொரியா விளங்கி வருகிறது. அந்த நாடு தனது அணு ஆயுதத் திட்டங்களை உடனே நிறுத்த வேண்டும்– என்று தெரிவித்தார். (ற)

# ...ம் அகதிகள்; எதிர்ப்பு வலுக்கிறது மெர்கலுக்கு

...விடும் என்று அந்தப் ...2 குடியிருப்பு வாசிகள் ...ர்.

...யால் குற்றச் செயல் ...ம் என்றும் அவர்கள்

...க் கிராம... மேயர் ...மன் தெரிவித்துள்ள

இந்... எண்ணிக்கை ...க அ...கரிக்கக்கூடும். ...மில்லியன் மக்கள் இரு...கின்றனர். 3 ...ள் இல்லாமல் இருக்

...ப்பற்றிச் சிந்திக்காமல் ...மட்டுமே ஜனாதிபதி ...றார்.

ஜேர்மனிக்கு வருபவர்கள் அனைவரும் அகதிகள் அல்லர். சிரியாவின் போர் சூழலைப்பயன்படுத்தி ஆபிரிக்கா, பால்கன்ஸ் மற்றும் ஆசியாவைச் சேர்ந்தவர்களும் ஜேர்மனிக்குள் அகதிகளை போல் வந்துவிடுகின்றனர். அகதிகளில் பெரும்பாலானோர் அகதிகளுக்கு மாதமாதம் கிடைக்கும் 500 யூரோ பணத்தை பெறவே விரும்புகின்றனர் - என்றார்.

அந்தப் பகுதியில் நிலவும் அமைதியான சூழல் விரைவில் மாறக்கூடும் என்றும் அங்குள்ளவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (ற)



# இன்றைய இளம் பராயத்தினர் விரதத்தை அனுஷ்டிக்கலாமா?

சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள்.



ஆன்மிகத்தில் நாட்டம் குறைந்து, விரும்பத்தகாதவற்றில் ஆர்வம் காட்டி தமது வாழ்வைச் சீர்குலைத்து பெற்றோர்களையும் மற்றும் அனைவரையும் இளம் சமூகத்தினர் கவலையடையச் செய்யும் இன்றைய காலத்தில் சில மாணவச் செல்வங்கள் பெரு விருப்புடன் விரதம் இருக்க முற்பட்டிருப்பது உண்மையில் பாராட்டத்தக்க விடயமாகும். இருந்த போதிலும் மாணவர்கள், சிறார்கள் விரதம் இருப்பதை எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளவும் அனுமதிக்கவும் முடியாது. ஆனால் அவர்களது ஆன்மிக நாட்டத்தை விருப்பைப் புறம் தள்ளாது அவர்களது மனம் துன்பம் அடையாத வண்ணம் அவர்களுக்கு விரதம் பற்றியதான தாற்பரியங்களை போதித்து அவர்களை கல்வியின்பால் ஈடுபாடு கொள்ள வைக்க சமய பாட ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் குருமார்கள், ஆலய பரிபாலகர்கள், சமயத் தலைவர்கள் முன் வருதல் வேண்டும். விரத அனுஷ்டானம் என்பது வாழ்வியற் பண்பாடு அல்லது வாழ்வியல் ஒழுங்கமைப்பு எனலாம். வாழ்வைச் செம்மைப் படுத்த கைக்கொள்ளப்படுவது தான் விரதங்கள் ஆகும். மாணவர்களுக்கு கல்வியின் அவசியத்தை முதன்மைப்படுத்தி வழிப்படுத்துதல் வேண்டும்.

**சமய போதனையில் கல்விச்சமூகத்தினரின் பங்கு**

யாழ்மண்ணில் இளையவர்கள், மாணவர்கள் மத்தியில் ஆன்மிக நாட்டம் குறைந்து வருவதனால்தான் ஒழுக்கம், பண்பாடு குறைந்து வருகின்றன என்பதை கல்விச்சமூகத்தினர் சுட்டிக்காட்டியிருப்பது கவனிக்கத்தக்கதாகும். விரதம் இருக்கும் மாணவர்களை ஆசிரியர்கள் தண்டிப்ப தும் குருமார்களை அதற்காக குறை கூறு வதும் ஏற்றுக்கொள்ள முடியாதது. பாடசாலைகளில் இருந்து எமக்கு முறைப் பாடு கள் வருகின்றன. பாடவேளைகளில் பிள்ளைகள் சோர் வுற்று இருப்பதாகவும், மதியபோசனம் எடுப்பதில்லை என்றும் முறைப்பாடு செய்கின்றார்கள். எனவே மாணவர்களே விரதத்தினால் கல்வி பாதிப்படைவதும், நோய் ஏற்படுவதும் விரத்தின் பயனாக இருக்கலாகாது. எனவே மாணவர்கள் தமக்குரிய நிலையில் இருந்து கற்றலை மேற்கொள்ள வேண் டும். அதற்குக் கல்விச் சமூகத்தினரும் ஒத்துழைப்பு வழங்கல் வேண்டும். பாடசாலைகளில் இன்று பாடவிதானத்திலும் கூட்டங்களிலும் ஆன்மிகத்தோடு இணைந்த கல்விச் செயற்பாடுதான் சமூக பிறழ்வுகளுக்குத் தீர்வு என்று எழுதி வைத்துவிட்டு, அதற்கு மாறான நடவடிக்கைகளே இடம் பெறுகின்றன.

விளையாட்டு மைதானங்களில், காலைப் பிரார்த்தனைகளும் இந்துக்களின் மிகப் பிரதானமான நாள்களில் கூட ஆசிரியர்கள், அதிபர், மாணவர்களுக்கான கலந்துரையாடல்கள் கருத்தரங்குகளும், நடாத்தப் படுவதைக் காணலாம். பாடசாலைகளில் மாணவர்களுக்கு கல்விச் சமூகத்தினரால் மட்டுமல்லாது சமய குருமார்கள் சமயத்தலைவர்கள் மூலமாகவும் போதனைகள் நடத்தப்படவேண்டும்.

**ஆலய சமூகத்தினரின் பங்கு**

ஆலயங்களில் இன்று போட்டி மனப்பாங்குடனான பூசை வழிபாடுகளைத்தான் காணமுடிகின்றது. எல்லா ஆலயங்களிலும் எல்லா விழாக்களும் கொண்டாடப்படுகின்றன. கௌரி பூசையும் காலை, மதியம், மாலை என நடை பெறுகின்றது. பூசை வழிபாடுகள் ஒலிபெருக்கி மூலம் நடத்தப் படுகின்றன. இதனால் கல்விச்சமூகம் மிகவும் பாதிப் படைகின்றது. கோவில் காப்பணியும் அடியார்கள் எண் ணிக்கை எண்ணப்பட்டு கோவிலுக்குக் கோவில் போட்டி போட்டு நடத் தப்படுகின்றன. இவ்வாறு இருக்கையில் காப் பணியும் பக்தர் நீளக் காற்சட்டை அணிந்து வந்தால் என்ன, பஞ் சாபி போட்டு வந்தால் என்ன பற்றுச்சீட்டு எடுத் தால் சரி, குருக்களிடம்கையைநீட்டினால் அவர் நூல் கட்ட வேண்டியது தான் அவர் கடமை. சிறுவர் முதல் நோயாளி கர்ப்பிணித் தாய்மார்கள் எவராக இருந்தாலும் கட்டவேண்டியது தான். அதைப் பற்றி கதைத்தால் எண்ணிக்கை குறைந்து வருமானம் குறைந்து விடும் எனகண்டிப்பாக இருக்கின்றார்கள் பரிபாலகர்கள். ஆலய பரிபாலகர்களும் சமய விழிப்புண ர்வை ஏற்படுத்த முன்வருதல் வேண்டும். வருமானத்தை மட்டும் கருத்தில் கொள்ளாது, ஆலயப் பணிகளது நோக் கங்களை நிறைவேற்ற முன்வருதல் வேண்டும்.

**பெற்றோர்கள் பங்கு**

அன்புப் பெற்றோர்களே, உங்களது நேர்த்திக்காக பிள்ளைகளை விரதம் இருக்கச் செய்து பாவத்தைத் தேடாதீர்கள். தாம் விரதம் இருந்து தமது பிள்ளைகளை வாழ வைப்பதுதான் ஒவ்வொரு பெற்றோருடைய கடமையாகும். குருமார்கள் நூல் தர மாட்டார்கள் என்றால் பெயர் நட்சத்திரம் கூறி நூலை எடுத்து வீடுகளில் வைத்து நூலைக்கட்டி விடுகின்றீர்கள். இதுவும் மிகப்பெரிய தவறாகும். பெற்றோர்களே நீங்கள் விரதம் இருந்து உங் கள் பிள்ளைகளது கல்விச்செயற்பாடுகள் பாதிப்படையாத வண்ணம் விரத காலங்களில் ஆலயங்களுக்கு அழைத்துச் செல்லுங்கள். தொண்டுகள் புரியவையுங்கள், அது அவர்களை நல்வழிப்படுத்தும்.

*கட்டுரையாளர் மூத்த குருக்களும் வீணாகான குருபீடம் ஸ்தாபகரும், அமைப்பாளருமாவார்.*




## வீதிச் சீர்கேடும், குப்பை கூளக் கழிவு வீதியும் யாழ். மாநகர சபைக்கு ஒரு வேண்டுகோள்

யாழ்ப்பாணம் கண்டிவீதியில் கச்சேரியைத் தாண்டியுள்ள பெண்டிக்கோஸ்ரல் ஒழுங்கை மிகவும் சீர்கேடான நிலையில் காணப்படுகின்றது.

நூற்றுக்கணக்கான மக்களின் போக்குவரத்துக்கும், புங்கன்குளம் ரயில் நிலையத்துக்குமான வீதியாகவும் இது அமைந்துள்ளது.

குறிப்பிட்ட பாதை நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமையால் மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நின்று, நூற்றுக்கணக்கான மக்களின் போக்குவரத்து மற்றும் வாகனப் போக்குவரத்துக்கும் மிகவும் இடையூறாக அமைகின்றது.

இது தவிர வெள்ளம் தேங்கி நிற்கும் பகுதிக்கு அண்மையாக அயலிலுள்ள மக்கள் குப்பை கூளங்களை அதிகம் குவிப்பதால் அவை மழை நீருடன் சேர்ந்து பெரியளவில் சுற்றுப் புறச் சூழலைப் பாதிப்பதற்கும், நோய்கள் பரவுவதற்குமான சூழலும் பெரிதும் காணப்படுகின்றது.

இதனால், நூற்றுக்கணக்கான இந்தப் பகுதிக் குடும்பங்கள் மிகவும் சுகாதாரச் சீர்கேட்டு நிலையிலும் போக்குவரத்தில் அதீத சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலையிலும் காணப்படுகின்றன.

இது தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்களிடம் முறையிட்டும் பயன் ஏதும் எட்டப்படவில்லை.

தயவு செய்து சம்பந்தப்பட்ட யாழ்.மாநகர சபையினர் நேரில் வந்து பார்வையிட்டு, உடனடியாகப் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வீதிப் பாவனையாளர் சார்பில் பணிவான வேண்டுதலை விடுக்கின்றேன்.

பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில்
- க.ரட்ணேஸ்வரன்

## தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையும் கௌரவிப்பு விழாக்களும்

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்தவுடன் பாடசாலைகள் நடத்தும் திருவிழாக்களாக வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று தகுதியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வுகள் நடைபெறுகின்றன. இதிலுள்ள விந்தை யாதெனில் இந்த நிகழ்வுக்கு செலவு செய்யப்படும் பெருந்தொகைப் பணமும் இந்த மாணவர்களிடமிருந்தே அறவிடப்படுகின்றது. மாணவர்களிடமிருந்தோ அல்லது அவர்களது பெற்றோர்களிடமிருந்தோ பணத்தை வசூலித்து அந்த மாணவர்களைக் கௌரவிப்பது என்பது எந்தளவுக்கு தார்மீக ரீதியாக நியாயமானது என்பதை விளங்கிக் கொள்ள முடியாதுள்ளது. இது தங்களைத் தாங்களே கௌரவிப்பதற்கு நிகரானது.





மிகப்பெரும் விருந்து வைப்புக்கள், வீடியோ எடுத்தல், புகைப்படம் எடுத்தல், பதக்கம் அணிவித்தல், பரிசில்கள் வழங்கல், பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா போன்று தலைப் பாகை மற்றும் கோட்சூட் போன்றவற்றுக்கே பெரும் தொகைப் பணம் செலவு செய்யப்படுகின்றது. ஒவ்வொரு பெற்றோரிடமும் இருந்து 5,000 ரூபா தொடக்கம் 15,000 ரூபா வரை அறவிடப்படுகின்றது. விவரம் தெரியாத மாணவர்களையும் பாமரப் பெற்றோர்களையும், பகட்டு வாழ்வை விரும் பும் பணம் படைத்த மற்றும் படித்த பெற்றோர்களையும் ஏதோ ஒரு வகையில் மூளைச் சலவை செய்தே இந்தக் கௌரவிப்பு விழாக்கள் மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்படுகின்றன. இதிலுள்ள வேடிக்கை யாதெனில் கல்வித் திணைக்கள அதிகாரிகளையே பிரதம மற்றும் சிறப்பு விருந்தினர்களாக அழைத்து, விருந்து படைத்தே இந்த விழாவை நடத்துகின்றனர். அவர்கள்கூட இந்தப்பணம் எவ்வாறு பெறப்பட்டது என்பது குறித்தோ செலவு விவரங்களையோ கண்டுகொள்வதில்லை.

இங்கு மாணவர்களை ஊக்குவித்தல் என்ற போர்வையில் ஒருதொகை மாணவர்களை கௌரவிக்கின்ற அதேவேளை, வெட்டுப்புள்ளியை அடையத் தவறிய பெரும்தொகை மாணவர்கள் சோர்வடைந்தவர்களாகவும் தோல்வியடைந்த மாணவர்கள் என்ற மன நிலைக்கும் உள்ளாகின்றனர். சில பாடசாலைகள் 70 புள்ளிகளுக்குமேல் பெற்ற சகல மாணவர்களையும் கௌரவிக்கின்றோம் என்ற போர்வையில் ஏனைய மாணவர்களிடமும் இருந்து பணத்தைப்பெற்று அவர்களைப் பற்றி பொதுவாகவும், வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள் பற்றியும், அவர்களது சாதனைகள் பற்றியுமேவிதந்துபோற்றிபுகழப்படுகின்ற அதேவேளை அவர்களுக்கே விசேட விருதுகளும், பதக்கங்களும் வழங்கப்படுகின்றன. இதனால் ஏனைய மாணவர்களும் பெற்றோர்களும் மனமுடைந்து காணப்படுகின்றனர். பத்து வயதேயான இந்தப் பாலன்களின் உள்ளங்களை பாடசாலை நிர்வாகங்கள் உணர மறுப்பது ஏனோ தெரியவில்லை. இந்த விடயத்தில் கல்வித் திணைக்கள அதிகாரிகள் கவனமெடுத்தல் வேண்டும். இந்த நிகழ்வுகளை பெருவிழாக்களாகக் கொண்டாடுவதைத் தவிர்த்து வருடமுடிவில் நடை பெறும் பாடசாலைப் பரிசளிப்பு விழாக்களின்போது கௌரவித்தலே சிறப்பானதாகும். அதன்போது பொதுப் பரீட்சைப் பெறுபேறுகள் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் பாடசாலை, கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம், தேசிய ரீதியில் வெற்றி பெற்றவர்களையும் சேர்த்து கௌரவிக்கின்றபோது, அதனுடன் சேர்த்து இந்த மாணவர்களையும் கௌர வித்தலே சிறப்பானதாகும். தனியே தரம் ஐந்து புலமைச் சித்திபெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் போது ஏனைய சகமாணவர்கள் மனத்தாக்கத்துக்கு உள்ளாகின்றனர். எனவே இந்த விடயத்தில் கல்விப் புலத்தில் உள்ளவர்கள் கவனமெடுப்பார்களா?

- வன்னிவாணன், வவுனியா.

### கேலிச் சித்திரம்



நன்றி: லங்காதீப

## எல்லை மீறிய பொலிஸ்

கணக்கியல் தேசிய உயர் டிப்ளோமா மாணவர்கள் தமது பாடநெறியைத் தரம் உயர்த்தக் கோரி கடந்த வியாழக்கிழமை கொழும்பில் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது அமைதியை நிலைநாட்ட பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கை கடுமையான விமர்சனங்களுக்குள்ளாகி இருக்கிறது. ஆஜானுபாகுவான பொலிஸ்காரர் ஒருவர் உடல் மெலிந்த மாணவி ஒருவரைத் துரத்தித் துரத்தித் தாக்குவது உட்படப் பொலிஸாரின் நடவடிக்கைகள் தொடர்பான காட்சிகள் அடுத்தநாள் பத்திரிகைகளிலும் தொலைக்காட்சிகளிலும் வெளியாகிய போது பலரும் அதிர்ச்சியடைந்தனர். பொலிஸார் வரம்பு மீறிச் செயற்பட்டுள்ளனர் என்று குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

புதிதாக இயங்க ஆரம்பித்துள்ள பொலிஸ் ஆணைக்குழு இந்த விவகாரத்தில் எப்படி நடந்து கொள்ளப்போகிறது என்பதை அனைவரும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும், பாதிக்கப்பட்ட மாணவர்களும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிலும் மனித உரிமை ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்துள்ளனர். இது குறித்து விசாரணை செய்ய தேசிய பொலிஸ் ஆணைக்குழு மூவர் அடங்கிய சுயாதீனக் குழுவை நியமித்துள்ளது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் விசேட குழு ஒன்றை நியமித்துள்ளார். அமைதியாக எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டிய மாணவர்கள் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனரா? அவர்களைக் கட்டுப்படுத்த பொலிஸார் வரம்பு மீறிச் செயற்பட்டனரா? இவை குறித்து விசாரணை செய்யப்பட்டு உண்மை கண்டறியப்படவேண்டும். கருத்துச் சுதந்திரம் அனைவருக்கும் இருக்கவேண்டும். அது சட்டத்தையும் அமைதியையும் சீர்குலைக்காத விதத்தில் இருக்கவேண்டும். பொலிஸாரின் வீதித் தடையை மாணவர்கள் ஆக்ரோசத்துடன் உடைத்துக்கொண்டு முன்னேறும்போது பொலிஸார் அமைதியாக இருப்பார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. பொலிஸார் தடியடிப் பிரயோகம் செய்ததே, அவர்கள் தங்களது அதிகார வரம்பை மீறிவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டுக்குக் காரணமாகும். மாணவர்கள் ஆக்ரோசத்துடன் நடந்துகொண்டபோது பயங்கரவாதிகளுடன் மோதுவது போன்று பொலிஸார் செயற்பட்டுள்ளனர்.

தற்பொழுது அமைக்கப்பட்டுள்ள குழுக்களின் விசாரணைகள், எதிர்காலத்திலும் இப்படியான சம்பவங்கள் நிகழாத விதத்தில் பயனுள்ளவையாக அமையவேண்டும்.

கடந்த பொதுத் தேர்தலில் மகிந்த அரசின் காட்டாட்சியை முடிவுக்குக்கொண்டுவருவோம் என்ற கோசத்துடனேயே ரணில் தலைமையிலான ஐ.தே.க. தேர்தலில் குதித்தது. ஆனால் தற்பொழுது இடம்பெற்றுள்ள சம்பவங்கள் மகிந்த ஆட்சியை நினைவுபடுத்தக்கூடியவை என்றெல்லாம் விமர்சிக்கப்படுகிறது. ஆனால், இங்கு பொலிஸார் அதிகபட்சம் தடியடிப் பிரயோகமே செய்துள்ளனர்.

மஹிந்தவின் ஆட்சியின்போது கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய தொழிலாளர்களின் ஆர்ப்பாட்டம், வெலிவேரியவில் குடிதண்ணீர் கோரி நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம், சிலாபத்தில் எரிபொருள் மானியம் கோரி மீனவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம் ஆகியவற்றின்போது பொலிஸார் எப்படி நடந்துகொண்டனர் என்பது அனைவருக்கும் தெரியும். துப்பாக்கிப் பிரயோகம் செய்து பொலிஸார் மிகவும் மோசமான முறையில் நடந்துகொண்டனர்.

இந்தச் சம்பவங்கள் குறித்து முறையான விசாரணைகள் கூட நடத்தப்படவில்லை. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் நியமிக் கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கையிலும் வெலிவேரிய சம்பவம் சுட்டிக்காட்டப்பட்டு பொறுப்புக்கூறல் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, கடந்த வியாழக்கிழமை கொழும்பு வார்ட் பிளேஸில் இடம்பெற்ற சம்பவத்தை விமர்சிப்பதற்கு முன்னைய ஆட்சியாளர்களுக்கு அருகதை கிடையாது. அதேசமயம் பொலிஸார் வரம்பு மீறிச் செயற்பட்டுள்ளனரா என்பது கண்டறியப்பட்டு எதிர்காலத்தில் இப்படியான சம்பவங்கள் இடம் பெறாதவாறு செயற்படுவது அவசியமாகும்.

பத்தி எழுத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021-492 7474, 021-492 7475,
021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மாணவர் உயர் கல்வியை கிள்ளுக் கீரை ஆக்குவதா..?

கணக்கியல் உயர் டிப்ளோமாதுறை மாணவர்கள் மீது கடந்த 29 ஆம் திகதி பொலிஸாரால் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் குறித்து ஆராய்வதற்கு இரண்டு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவால் ஒன்றும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் மற்றொரு குழுவும் நியமிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு வார்ட் பிளேஸில் அமைந்துள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அலுவலகத்தின் முன்னால் வைத்து சில கோரிக்கைகளை முன்வைத்து ஆயிரக்கணக்கான மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், வைத்திய பீட மாணவர் ஒன்றியம் ஆகிய இரண்டு அமைப்புக்களையும் சேர்ந்த மாணவர்கள் குறித்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

எனினும் மாணவர்கள் மீது பொலிஸார் நடத்திய கண்ணீர்ப் புகைப் பிரயோகமும், தடியடியும் எதிர்க்கட்சித் தரப்பினருக்கு, வெறும் வாய் மெல்பவர்களுக்கு, அவல் கிடைத்தது போலாகி விட்டது.

சட்டவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும்போது, குய்யோ, முறையோ என்று கூச்சலிடும் "பாரம்பரியத்தைக்" கொண்ட முன்னாள் ஆட்சியாளர்களுக்கு, மாணவர்களின் ஜனநாயகரீதியான போராட்டத்தின் மீதான தாக்குதல், வெறுவாய்க்கு அவல் கிடைத்தது போலாகியுள்ளது எனலாம்.

எனினும், மற்றொரு வகையில் மாணவர் மீதான பொலிஸாரின்தாக்குதலைக்கண்டித்து நேற்றுமுன்தினம் (மூன்றாம் திகதியன்று) நடத்தப்பட்ட அமைதியான பேரணியைக் கையாண்டமைபோன்று, முன்னைய ஆர்ப்பாட்டத்தையும் அதே பாணியில் கையாண்டு இருக்காதது ஏன் என்ற நியாயமான வினாவும் எழுகிறது இல்லையா?

எவ்வாறெனினும், மாணவர் மீதான தாக்குதல் குறித்து விசாரணை செய்வதற்கு இரண்டு விசாரணைக் குழுக்கள் தேவையா? என்ற வினா மேலெழுவதையும் தவிர்க்க இயலாது.

இது போன்ற சம்பவங்கள் இனிமேல் நடைபெறும் பட்சத்தில், இரட்டை விசாரணை நடத்தும் முன்னுதாரணம் ஒன்று இதன்மூலம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அது பொருத்தம் உடையது அன்று.

இந்த ஏற்பாட்டின் மறுபக்கத்தை நோக்கின், புதிய அரசிடம் ஆளும் திறமைக்குப் பஞ்சம் உண்டோ என்ற தர்க்க ரீதியான வினா மேலெழுவதைத் தவிர்க்க இயலாதே!

இதேவேளை-

நீதிமன்றத்தின் தடையை மீறி, கணக்கியல் உயர் கல்வி (எச்.என்.டி.ஏ) மாணவர்கள் கடந்த மாதம் இருபத்தொன்பதாம் திகதி நடத்திய ஆர்ப்பாட்டம், வெளிச்சக்திகளால் தூண்டப்பட்ட ஒன்றென, உயர் கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல நேற்றுமுன்தினம் செவ்வாயன்று, நாடாளுமன்றத்தில் தெரிவித்த தகவலும் இங்கே கருத்தில் கொள்ளப்பட வேண்டியதே.

கணக்கியல் உயர்கல்வி பாடநெறியை பட்டதாரி நெறிக்குச் சமனாக உயர்த்துவதற்கு அரசு முடிவு செய்தமை மாணவர்கள் அறிந்த ஒன்றே--

அவ்வாறு தெரிந்திருந்தும் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியமை பகிடிக்கு உரிய ஒன்றாகும்-என்று அவர் எடுத்துரைத்து இருந்தார்.

ஆனால், அதனை மறுத்த, எதிர்க்கட்சியின் பிரதம கொறடா அனுரா திஸாநாயக்க, மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தின் பின்னரே அந்த மாற்றம் அரசால் மேற்கொள்ளப்பட்டது என்று சுட்டிக்காட்டினார்.

இதன் மத்தியில்--

உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா பாடநெறி மாணவர்கள் தாக்கப்பட்டமை தொடர்பான சர்ச்சை நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் காரசாரமாகச் 'சூடு' பிடித்திருந்தமையும்சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

மொத்தத்தில், பல்கலைக்கழக மற்றும் உயர் கல்வித்துறைசார் மாணவர்களின் நியாயமான கோரிக்கைகளை நல்லாட்சி அரசு தட்டிக் கழிக்கக்கூடாது. அவை பரிவுடன் கையாளப்பட வேண்டும்.

மைத்திரியின் நல்லாட்சி அரசால் அது மனமூன்றிக் கையாளப்பட வேண்டியதும் அவசியம் ஆகும்.

# அரசியல் கைதிகளின் விடுதலையில் அரசுக்குள் இழுபறி நிலை

**வந்தியத்தேவர்**

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அறிவிப்பை அடுத்து தமது உணவுத்தவிர்ப்புப் போராட்டத்தைக் கைவிட்ட தமிழ் அரசியல் கைதிகள் மீண்டும் தமது போராட்டத்தைத் தொடரப் போவதாக முடிவு செய்துள்ளனர். நவம்பர் மாதம் 7 ஆம் திகதிக்குள் அரசியல் கைதிகளில் அனேகர் விடுதலை செய்யப்படுவார்கள் என ஜனாதிபதி ஏற்கனவே எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனிடம் உறுதியளித்திருந்தார். இந்த உறுதிமொழியை அவர் சிறைச்சாலை ஆணையாளருக்குத் தெரிவித்ததையடுத்து தம்மை விடுதலை செய்யக்கோரி உணவு தவிர்ப்பில் ஈடுபட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் தமது போராட்டத்தைக் கைவிட்டு தமது நன்றியையும் தெரிவித்திருந்தனர்.



இப்போது தமிழ் அரசியல் கைதிகளுக்குப்பொதுமன்னிப்புவழங்க முடியாதெனவும், தடுப்பிலுள்ள கைதிகளுக்கு இந்த மாதம் முதல் வாரத்துக்குள் சட்டபூர்வமான பிணை வழங்கப்படும் எனவும் அலரிமாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கஅறிவித்துள்ளார்.

நீண்டகாலம் விசாரணைகள் எதுவுமின்றி குற்றப்பத்திரிகை கூட தாக்கல் செய்ய முடியாத நிலையில் அரசு இவர்களைச் சிறையில் வைத்துள்ளது. சுமார் இருநூறுக்கும் அதிகமான தமிழ் அரசியல் கைதிகள் நாடு முழுவதிலுமுள்ள பதின்நான்கு சிறைக் கூடங்களில் காரணமின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் இருந்து தமக்கு நீதி கேட்டு பல தடவைகள் சிறைக் கம்பிகளின் பின் இருந்து தொடர் போராட்டங்களை முன்னெடுத்தபோதும், அவர்களது விடயத்தில் மகிந்த அரசு மெத்தனப் போக்கையே கொண்டிருந்தது.

**மகிந்தவின் அராஜகங்களில் இருந்து நாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்கானது மட்டுமல்ல. மகிந்தவால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு முடிவு கட்டவேண்டும் என்பதே அவர்களது குறிக்கோளாகும்.**

தமிழ்நாடாளுமன்றஉறுப்பினர்கள் இவர்கள் விடயத்தில் கவனம் செலுத்திய வேளைகளிலும்கூட முன்னைய மகிந்த அரசு அவர்களைவிடுவிக்க எந்த ஒரு நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை.

மைத்திரிபால சிறிசேனவுக்கு தமிழ் மக்கள் வழங்கிய ஆதரவு என்பது, மகிந்தவின் அராஜகங்களில் இருந்து நாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்கானது மட்டுமல்ல. மகிந்தவால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு முடிவு கட்ட வேண்டும் என்பதே அவர்களது குறிக்கோளாகும். அவற்றில் ஒன்று அரசியல் கைதிகளின் விடுதலை, இதை எவரும் மறுப்பதற்கில்லை. நல்லாட்சியின் கீழ் அரசியல் கைதிகளுக்கான பொதுமன்னிப்பு நீதி கிடைக்கும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், தமிழ் மக்களும்கூட மிகுந்த எதிர்பார்ப்புடன் இருந்துள்ளனர். அதற்கு அமைவாக எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் ஜனாதிபதி பிரதமர் ஆகியோருடன் பேச்சுக்களை முன்னெடுத்ததில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நவம்பர் மாதம் 07 ஆம் திகதிக்குள் பெரும்பாலான அரசியல் கைதிகளைப் பொதுமன்னிப்பின் கீழ் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க உறுதியளித்திருந்தார்.

இந்த உறுதிமொழி, தமது விடுதலைக்காக நாடு முழுவதிலுமுள்ள சிறைக்கைதிகளின் சுமார் 6 நாள்கள் வரையான உணவு தவிர்ப்புப் போராட்டத்தைத் தற்காலிகமாக ஒத்திப்போடச் செய்தது. இந்த நிலையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தும், தற்போது வழங்கப்பட்ட உறுதிமொழிகள் நிறைவேற்றப்படுவதற்கான சாத்தியம் எதுவும் தற்சமயம் இல்லை என்பதை அலரிமாளிகையில் இடம்பெற்ற விசேட கூட்டத்தின் தீர்மானங்களில்இருந்துஅறியக்கூடியதாக உள்ளது. தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் பொதுமன்னிப்புக்கானவாய்ப்புக்கள் இல்லை எனக் கூறும் தேசிய கலந்துரையாடல் அமைச்சர் மனோ கணேசன், பிணை அனுமதி வழங்க சந்தர்ப்பம் உள்ளது எனக் கூறுகின்றார். அரசின் செயற்பாடுகள் நல்லாட்சி எனக் கூறப்பட்ட போதிலும், ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையில்கருத்தொற்றுமை இல்லாத கண்துடைப்புக்கான ஒரு தேசிய அரசாகவே இந்த அரசு உள்ளதுபோல் தென்படுகின்றது. தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தில் ஒத்துப்போக முடியாத ஜனாதிபதியும் பிரதமரும் தமிழ் மக்களது பிரச்சினைகளில் ஒரு சுமுகமான தீர்வை எட்ட ஒன்றுபடுவார்களா என்பது கேள்விக்குரியதே.

தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கமுடியாது, சட்டபூர்வமானபிணையேவழங்குவது என்ற தீர்மானத்தினால் மீண்டும் ஜனாதிபதி பிரதமர் ஆகியோருடன் பேசவேண்டிய நிலை எதிர்க்கட்சித் தலைவருக்கு ஏற்பட்டுள்ளது. ஏனெனில் ஏற்கனவே ஜனாதிபதி வழங்கிய உறுதிமொழி யைச் சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளிடம் தெரிவித்திருந்த அவரே, அதனூடாக அவர்களின் உணவு தவிர்ப்புப் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்படக் காரணமாக இருந்தவர் என்பதால், சம்பந்தனின் தலையீடு மீண்டும் அவசியமாகிறது. அவர் அரசியல் கைதிகளுக்குப் பொது மன்னிப்புத்தான் தேவை என்பதை ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் மீண்டும் வலியுறுத்தப் போவதாகக் கூறியுள்ளார்.

அரசியல் கைதிகள் என்று எவருமே இல்லை என்று எவர்தான் கூறினாலும்கூட, சிறையில் தமிழ் அரசியல் கைதிகள் உள்ளனர் என்பதையும் அவர்கள் இனவாத அரசு ஒன்றின் கீழ் பலவந்தமாகத் தடுத்து வைக் கப்பட்டிருந்தனர் என்பதையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒன்றும் அறியாத ஒருவரல்ல. மகிந்த அரசில் அவரும் ஒரு பங்காளியாக இருந்துள்ளார் என்பதால், தமிழ் அரசியல் கைதிகள் மீது முன்னைய அரசு கொண்டிருந்த பாராமுகம் குறித்து அவர் நன்கு தெரிந்து வைத்திருந்தார் என்பதும் மறுக்க முடியாது. இந்த நிலையில் நாட்டைப் படுகுழிக்குள் வீழ்த்திய பிரச்சினைகள் எது என்பதை இனங்கண்டு அவற்றை முற்றாகக் களைந்து, நாட்டில் ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்க விரும்பும் ஜனாதிபதிக்கு கோயில் இடம்கொடுத்தாலும் பூசாரி இடம்கொடாத கதையாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பூசாரியாகி விடக்கூடாது என்பதே நல்லாட்சியை எதிர்பார்ப்பவர்களின் விருப்பாகும்.





# நல்லாட்சிக் காலத்திலாவது முன்னாள் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்களா?

மு.ஈழத்தமிழ்மணி

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச காலத்தில் நாட்டில் இடம்பெற்றிருந்த அரசியல் படுகொலைகள் எண்ணற்றவை. சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் சபை என சர்வதேசத்தின் பல்வேறு அமைப்புக்கள் இலங்கைப் போரின் போது நடைபெற்ற படுகொலைச் சம்பவங்களை பலதடவை கண்டித்ததுடன் உண்மைகள் கண்டறியப்பட வேண்டும் எனவும் குரல் கொடுத்திருந்தன.

பல படுகொலைகளில் அரசபடைகள் சம்பந்தப்பட்டிருந்தனர் என்பது தற்போதைய ஆட்சியாளர்களின் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நடத்தி வருகின்ற விசாரணைகளிலிருந்து அறியக்கூடியதாக உள் ளது. மகிந்த அரசுக் காலத்தில் நீதி கிடைக்காது, உண்மைகள் கண்டறியப்படாது, வெளிச்சத்துக்கு வராத உண்மைச் சம்பவங்கள் மைத்திரி ஆட்சியில் தொடர்ந்து வெளிவர வேண்டும். இது, நல்லாட்சிக்குரிய பண்பாகவும், ஒழுக்கமாகவும் இருக்கும் என்ற எதிர்பார்ப்பு நாட்டு மக்களிடம் இருந்து வருகின்றது.

மெல்ல மெல்ல வெளிவந்து கொண்டிருக்கின்ற மறைக்கப்பட்ட உண்மைகள் யாவும் இலகுவில் வெளிவந்து விடுவதில்லை. குறிப்பாக மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்களை வெளிப்படுத்துகின்ற ஆதாரங்கள், படங்கள், வீடியோக்கள் போன்றவை இதுவரை வெளியாகியுள்ள நிலையில், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ந.ரவிராஜ் படுகொலை, பிரபல ஊடகவியலாளர் எக்னெலிகொட கடத்தப்பட்டமை, முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கம் மீதான படுகொலை என்பவை தொடர்பான விசாரணைகள் நாட்டில் பல உண்மைகளை வெளிக் கொண்டு வரவுள்ளன.


மகிந்த ஆட்சிக் காலத்தில் மட்டுமன்றி, ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியிலும், முன்னாள் ஜனாதிபதியான சந்திரிகா ஆட்சியிலும் 40க்கு மேற்பட்ட தமிழ், சிங்கள, முஸ்லிம் ஊடகவியலாளர்கள் படுகாலை செய்யப்பட்டுள்ளனர். இரண்டு முஸ்லிம் ஊடகவியலாளர்கள், 5 சிங்கள ஊடகவியலாளர்கள், 34 தமிழ் ஊடகவியலாளர்கள் வரையில் நீதி, நியாயமான கருத்துக்களை வெளியிட்ட நிலையில் இவர்களது குரலை அடக்க வேண்டும் என்பதற்காகவே இந்தப் படுகொலைச் செயற்பாடுகளை முன்னெடுத்தார்கள். நியாயத்தை பேனாவால் வெளிப்படுத்திய சில ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டார்கள். வடக்கு-கிழக்கு மாகாணங்களிலேயே பெரும் தொகையான ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதியான பிரேமதாச ஆட்சியின் போதும் 2 ஊடகவியலாளர்கள், செய்யப்பட்டுமுள்ளமை மட்டுமன்றி, சிலர் கடத்தப்பட்டுள்ளனர். இவர்களில் சிலர் காணாமற்போனோர் பட்டியலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

அரச படையினரால் ஊடகவியலாளர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டதுபோல் சில தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். அரச படைகளோடு சேர்ந்தியங்கிய துணை ஆயுதக் குழுவினரும் சேர்ந்து மேற்கொண்ட படுகொலைச் சம்பவங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரான யோசப் பரராஜசிங்கம், அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்திருந்த சந்திர நேரு அரியநாயகம், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவிராஜ், சிவனேசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சிவமகாராசா, திருகோணமலை மாவட்டத்தில் தேசியப் பட்டியலில் நியமிக்கப்பட இருந்தவரான வ.விக்கினேஸ்வரன் ஆகியோருடன்-ஐக்கியதேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான மகேஸ்வரனும் அடங்குவர். சந்திரிகா ஆட்சியில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சித் தலைவராக விளங்கியவரான குமார் பொன்னம்பலமும் அவர் சென்ற வாகனத்தில் வைத்து சுட்டுப்படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்தக் கொலைகளைக் கையாண்டவர்கள், அவற்றைத் தெரிந்து கொண்டவர்கள், கடந்த கால அரசின்போது பாதுகாக்கப்பட்டவர்கள், வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றவர்கள், ஆகியோருக்கு இந்தக் கொலைகள் சம்பந்தமாக அரசினது பாதுகாப்பும், ஆசீர்வாதமும் மறைமுகமாக இருந்துள்ளன என்பதையே ரவிராஜ், யோசப் பரராஜ சிங்கம், ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட ஆகி யோர்களின் கொலைச் சம்பவங்கள் தெளிவுபடுத்துகின்றன.


போர் இடம்பெற்ற கால கட்டத்தில் பிரபலமான ஊடகவியலாளர்களான லசந்த விக்கிரமதுங்க, உதயன்-சுடரொளியின் ஊடகவியலாளரான சுகிர்தராஜன், மட்டக்களப்பு ஊடகவியலாளர் நடேசன், ஊடகவியலாளர் நிமலராஜன், தராக்கி சிவராம், ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட ஆகியோர்கள் அரசினது படுகொலைச் சம்பவங்களையும் கடத்தல்களையும் மனித உரிமை மீறல்களையும் ஊடகங்களூடாக சர்வதேசத்துக்கு எடுத்துக் கூறியவர்களாவர். ஆகவே இவர்களது படுகொலைகள் சர்வதேச அரங்கில் அரசுக்கு பெரும் எதிர்ப்பலை களைத் தோற்று வித்திருந்தன.



சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் 13 ஊடகவியலாளர்கள், மகிந்த ஆட்சிக் காலத்தில் 24 ஊடகவியலாளர்களும் படுகொலை

மைத்திரி அரசால்பதவிக்கு வந்த 10 மாதங் களில் ஜோசப் பரராஜ சிங்கம், ரவிராஜ், பிரகீத் எக்னெலிகொட ஆகியோர்களது படுகொலைகள், தொடர்பான விசாரணைகள் தீவிரப்படுத்தப் பட்டிருக்கின்ற இந்த வேளையில், பிரகீத்தின் கடத்தலில் சம்பந்தப்பட்ட படைத்தரப்பு அதிகாரிகள் மீது அரசுக்கு கடுமையான சந்தேகங்கள் வலுத்து வருகின்றன.

கடந்த மாதமளவில் இருந்து ரவிராஜ் படுகாலை சம்பந்தமான விசாரணைகளில் உண்மைகள் ஓரளவு வெளிவந்து கொண்டிருக்கின்றன. நாடாளுமன்ற உறுப்பினரும் தீவிர மனித உரிமைச் செயற்பாட்டாளருமான நடராஜா ரவிராஜ் கொழும்பில் 9 ஆண்டுகளுக்கு முன்னர் படுகாலை செய்யப்பட்டார். இந்தப் படுகாலை தெடர்பாக மூன்று கடற்படை அதிகாரிகள் தடுத்து வைக் கப்பட்டு விசாரணை இடம் பெற்றுவருகின்றது. ரவிராஜ் இராணுவத் துப்பாக்கியால் சுடப்பட்டுள்ளார். கொலைக்குப்பயன்படுத்திய முச்சக்கரவண்டியும் மீட்கப்பட்டதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றில் ஜூலை மாதம் தெரிவித்திருந்தது.



தற்போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான யோசப் பரராஜ சிங்கத்தின் படுகொலை சம்பந்தமாக அண்மையில் அரசால் விசாரணைகள் முடுக்கி விடப்பட்டிருந்தன. அண்மையில் ஜோசப் பரராஜசிங்கம் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளரான பிரதீத் மாஸ் ரர் வழங்கிய தகவலின் அடிப்படையிலே குற்றப் புலனாய்வுத் துறையினர் கடந்த 11 ஆம் திகதி கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரான பிள்ளையான் என



அழைக்கப்படுகின்ற சிவநேசதுரை சந்திரகாந்தன் தீவிர விசாரணைக் குட்படுத்தப்பட்டு அதன் பின்னர் கைது செய்யப்பட்டார். 9 வருடங்கள் கடந்துள்ள நிலையில் மூவர் சிக்கியுள்ளனர்.

பல படுகொலைகளுக்குக் காரணமாக வுள்ள கருணா அம்மான், மகிந்த அரசில் செல்லப் பிள்ளையாக அரச அரசியல் மட்டத்தில் உயர்த்தி வைக்கப்பட்டிருந்தார். இவர் மூலம் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் இன்று வரையில் எதுவும் அம்பலமாகவில்லை. வெளிச்சத்துக்கு வரவுமில்லை.

2006 ஆம் ஆண்டு மூதூரில் இடம்பெற்ற பிரெஞ்சு நாட்டு அக்சன்பாம் என்ற சர்வதேசத் தொண்டு நிறுவனமொன்றின் ஊழியர்கள் 17பேர் படுகொலை செய்யப்பட்ட கொடூரச் சம்பவம், திருகோணமலையில் ஜனவரி இரண்டாம் திகதி இரவு காந்தி சதுக்கத்தில் ஐந்து உயர்தர வகுப்பு மாணவர்கள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் ஆகிய இரண்டு சம்பவங்கள் தொடர்பாக 9 ஆண்டுகள் முடிவடையப் போகின்ற நிலையிலும் எந்தவித விசாரணைகளும் இல்லை. ஐந்து மாணவர்கள் படுகொலை தொர்பாக விசாரணைகள் சம்பந்தமாக படைத்தரப்பில் சிலர் கைது செய்யப்பட்டிருந்தாலும் விசாரணைகள் பின்தள்ளப்பட்டு வருகின்றன.

இந்தப் படுகொலைகள் குறித்த நடவடிக்கையும் நீதிமன்றுக்கு வரவேண்டும். கடந்த கால ஆட்சியாளர்கள் இந்தப் படுகொலைகளுக்கு படையினர் பொறுப்பில்லை. படையினரை குற்றவாளிகளாகக் குற்றம், சுமத்த முடியாது என நியாயத்தை சொல்லி வந்தார்கள்.

அப்போதைய ஆட்சி அதிகாரத்தால் நடத்தப்பட்ட கொலைகள் மெல்ல மெல்ல ஒவ்வொன்றாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. மகிந்த ஆட்சி மக்களால் தூக்கி எறியப்பட்டதன் பின்னர் மைத்திரி - ரணில் தேசிய அரசு ஏனைய படுகொலைகளையும் ஆராய்ந்து இழுத் தடிக்காமல் சந்தேகநபர்களைக் கண்டு பிடிப்பதும் நீதிமன்று முன் நிறுத்தப்பட்டு விசாரணை மேற்கொள்வதும் நல்லாட்சியின் முக்கிய பணியாக உள்ளது.

9 ஆண்டுகளாக மகிந்த ஆட்சியில் நடைபெற்ற படுகொலைகள் மட்டுமன்றி சந்திரிகா, பிரேமதாச ஆட்சியிலும் இடம்பெற்ற படுகொலைகளும் விசாரணைக்கு எடுக்கப்பட வேண்டும். நீதி விசாரணைக் குட்படுத்தப்பட வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற பல படுகொலைகள் குறித்தும் மைத்திரி ஆட்சி கவனத்தில் கொள்வதுடன், கடத்தப்பட்டு காணாமற் போனவர்கள் சம்பந்தமாகவும் உண்மைகள் கண்டறியப்பட வேண்டும்.

ஜோசப் பரராஜசிங்கம், ரவிராஜ், பிரகீத் எக்னெலிகொட ஆகியோர்களது விசாரணைகள் துரிதமாக மைத்திரி அரசால் முன்னெடுக்கப்பட்டு வருவதால், ஏனைய சகல படுகாலைகள் சம்பந்தமாகவும், கடத்தப்பட்டு காணாமற் போனோர்கள் சம்பந்தமாகவும் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். மக்களின் நம்பிக்கை வீண் போகவேகூடாது.

இதுவரை காலங்களில் இலங்கையில் நடந்த படுகொலைகளின் சூத்திரதாரிகள் கண்டுபிடிக்கப்படுவதுமில்லை. விவரங்கள் வெளி வருவதுமில்லை. படையினராலும் அதன் துணை ஆயுதக் குழுக்களாலும் நடத்தப்பட்ட படுகொலைகளை மேற்கொண்ட நபர்கள் யார் என்பதெல்லாம் மக்களுக்கு தெரியாத தல்ல.

மகிந்தவின் ஆட்சியில் கடத்தப்பட்டு காணாமற்போன ஊடகவியலாளர்கள், படுகொலை செய்யப்பட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பற்றியோ பொறுப்புள்ள அரசுத் தலைவர் என்ற வகையில் மகிந்த ராஜபக்ச நடந்து கொள்ளவேயில்லை.

மைத்திரியின் நல்லாட்சி என்று கூறப்படுகின்ற தேசிய அரசில் மனிதப்படுகொலைகள், புதைகுழி விவகாரங்கள், ஆள்கடத்தல்கள் போன்ற சம்பவங்கள் கண்டுபிடிக்கப்பட்டுவருகின்றன. இதனோடு சம்பந்தப்பட்டவர்கள் கனவான்கள் போலவும், நேர்மையானவர்கள் போலவும் சுதந்திரமாக மக்கள் மத்தியில் நடமாடித் திரிகின்றனர். இப்போது ஒவ்வொரு கொலைகளிலும், கடத்தப்பட்டுக் காணாமற் போனோர் விடயத்திலும் அவதார புருஷர்களாக நடந்தவர்கள், சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுகின்ற அதிரடிச் சம்பவங்களை மூவின மக்கள் காண்கின்றனர்.

இப்படியான மனிதகுல விரோத நடவடிக்கைகளில் அரச படைகளும், ஆயுதத் துணைப் படைகளும், அரசியல்வாதிகளும் சம்பந்தப்பட்டுள்ளனர். நல்லாட்சி மூலம் இவர்களை நாட்டுமக்கள் வெளிப்படையாக காணும் நாள் வெகுதூரத்தில் இல்லை. நீதிதேவதை விழித்தெழுந்து விட்டாள்....

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 80 | 40 | 60 | 60 | – | 60 | 40 |
| கத்தரி | 100 | 70 | 120 | 100 | 80 | 100 | 80 | 60 |
| கரட் | 80 | 90 | 60–120 | 100 | 160 | 120 | 100 | 120 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 40 | 40 | 70 | 50 | 30 |
| பயிற்றை | 150 | 120 | 100 | 180 | 160 | 200 | 100 | 170 |
| பாகல் | 200 | 160 | 200 | 120 | 180 | 230 | 110 | 200 |
| கருணைக்கிழங்கு | 80 | 60 | 80 | 80 | 60 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 150 | 140 | 160 | 170 | 140 | 120 | 120 | 120 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 120 | 140 | 130 | 200 | 100 | 130 |
| பூசணி | 40 | 50 | 50 | 60 | 50 | 60 | 50 | 50 |
| தக்காளி | 140 | 120 | 120 | 140 | 120 | 160 | 80 | 100 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 | 50 | 60 | 60 | 60 | 35 |
| கீரை | 40 | 40 | 40 | 10 | 30 | 40 | 30 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 30 | 30 | 30 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 400 | 260 | 450 | 250 | 300 | 240 | 250 | 200 |
| புடோல் | 70 | 80 | 120 | 100 | 70 | 60 | 60 | 90 |
| கோவா | 100 | 100 | 80 | 100 | 100 | 120 | 100 | 80 |
| வெண்டி | 120 | 80 | 100 | 100 | 100 | 80 | 50 | 60 |
| போஞ்சி | 200 | – | 180 | 180 | 200 | 200 | 160 | 180 |
| லீக்ஸ் | 100 | 100 | 80–100 | 100 | 100 | 120 | 80 | 80 |
| தேங்காய் | 50 | 50 | 50 | 65 | 60 | 40 | 35–40 | 35 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 120 | 110 | 140 | 120 | 100 | 120 |
| தேசிக்காய் | 400 | 400 | 400 | 350 | 400 | 400 | 250 | 350 |
| வல்லாரை | 30 | 10 | 10 | 10 | 10 | 20 | 15 | 10 |
| கறிமிளகாய் | 180 | 160 | 150 | 160 | 200 | 70 | 120 | 200 |
| இராசவள்ளி | – | – | – | – | – | – | – | – |
| முருங்கைக்காய் | 200 | 120 | 140 | 80 | 140 | 120 | 120 | 200 |

## தியானத்தின்போது மனதில் ஏற்படும் மாற்றங்கள்

*உயிரோட்டம் உள்ளதா வாழ்க்கையில்? என்பது குறித்து நேற்றைய உதயனில் பார்த்தோம். அவை குறித்து இன்றைய பகுதியில் மேற்கொண்டும் பார்ப்போம்.*

மனக்கட்டுப்பாடு இல்லாததால் சில வார்த்தைகள் கட்டுப்பாட்டை மீறிப்போய் விடுகின்றன. உடம்புக்கும் மனதுக்கும் ஓய்வு தருவதற்காகவே தியானம். தியானம் செய்வதனால் சகிப்புத் தன்மை, பண்பு, கட்டுப்பாடு உண்டாகும். உள்ளத்து அழுக்கைப் போக்கிக் கொள்வதற்கு தியானம் அவசியம். கண்களை திறந்து வைத்துக் கொண்டுதான் வெளியுலகத்தை பார்க்க முடியும் என்பதில்லை. தியானம் பழகிவந்தால் இந்த உண்மை புரியும். கஷ்டங்கள் வரும் போது தியானத்தை மேற்கொள்ள வேண்டும். ஐந்துநிமிடம் மௌனம் இருக்க வேண்டும். அறுகோணம் போல் கால்களை வைத்துக் கொண்டு சின் முத்திரையுடன் தியானம் செய்ய வேண்டும். எப்போதெல்லாம் உனது மனம் குழம்புகிறதோ, அப்போதெல்லாம் ஒரு பத்து நிமிடம் மௌனமும் தியானமும் மேற்கொள். எவ்வளவுதான் ஓடியாடி அலைந்தாலும் சில நிமிட நேரமாவது தனிமையில் அமர்ந்து தியானம் பழகு. தியானத்தில் இரு. தியானம் தான் மனக் கட்டுப்பாட்டுக்கு வழி!

## காய்கறிகளின் விதைகளில் இவ்வளவு நன்மைகளா?

காய்கறிகள் எவ்வாறு எமது ஆரோக்கிய வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறதோ, அதே போன்று அவற்றின் விதைகளும் ஏராளமான சத்துக்களை வழங்குகின்றன. அந்தவகையில், சிலகாய்கறிகளின் விதைகள் தரும் சத்துக்கள் பற்றிப் பார்ப்போம்,

**பூசணிக்காய் விதைகள்**

உடல் நிறையைக் குறைக்க நினைப்பவர்களுக்கு பூசணிக்காய் விதை உகந்தது, ஏனெனில் இதில்கொலஸ்ரோலின் அளவு குறைவாக உள்ளது. எலும்புகளுக்கு வலுவூட்டும், சிறுநீரகக் கற்களைக் கரைக்கக்கூடிய சத்தான இரும்பு உள்ளது மேலும் குடலில் ஏதேனும் ஒட்டுண்ணிகள் இருந்தால், பூசணிக் காயின் விதைகளைச் சாப்பிட்டால் சரியாகி விடும். வயிற்றுப் பிரச்சினைகள்மற்றும் சமிபாட்டுப் பிரச்சினைகள் இருந்தால், அவற்றைப் பூசணிக்காயின் விதைகள் சரி செய்துவிடும்.

**தக்காளி விதைகள்**

சருமத்தை அழகாக்கப் பயன்படும் பொருள்களில் தக்காளியும் ஒன்று. இத்தகைய தக்காளியின் உள்ளே இருக்கும் விதைகளைச் சாப்பிட்டால், குருதிஅழுத்தம் குறைந்து, உடலில் குருதி ஓட்டம் அதிகரிக்கும். மேலும் இவை உடலில் உள்ள நச்சுப் பொருள்களை வெளியேற்றும். அதுமட்டுமல்லாமல் இதயத்தில் எந்த அடைப்பும் ஏற்படாமல் பாதுகாக்கும்.

**பப்பாசி விதைகள்**

பப்பாசியின் விதைகளைச் சாப்பிட்டால், சிறுநீரகத்தில் இருக்கும் நச்சுப் பொருள்கள் அனைத்தும் வெளியேறுவதோடு, சமிபாட்டை அதிகரிக்கிறது. அதிலும் வாயுத் தொல்லையால் பாதிக்கப்பட்டவர்கள், ஒரு கரண்டி பாப்பாசியின் விதையைச் சாப்பிடலாம். காய வைத்து, உணவுப் பொருள்களுடன் பயன்படுத்தலாம்.

# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 600 | 600 | 700 | 700 | 450 |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 300 | 400 |
| கணவாய் | 500 | 600 | 400 | 600 | 700 | - |
| பாரை | 400 | 400 | 350 | 500 | 500 | 300 |
| சுறா | 400 | 500 | 350 | 600 | 800 | - |
| சீலா | 250 | 400 | 300 | 400 | 400 | - |
| விளை | 450 | 400 | 260 | 450 | 500 | 300 |
| முரல் | 250 | 300 | 250 | 300 | 400 | - |
| கும்பிளா | 200 | 300 | 200 | 300 | 300 | 200 |
| கிழாக்கன் | 350 | 800 | - | 400 | - | - |
| ஓரா | 300 | 350 | 220 | 450 | - | - |
| திரளி | 150 | 250 | 150 | 300 | 200 | - |
| நகரை | 150 | 200 | 100 | 300 | 200 | 200 |
| சூடை | 150 | 100 | 50 | 120 | 100 | - |
| ஒட்டி | 200 | 150 | 180 | 300 | 200 | 200 |
| திருக்கை | 150 | 300 | 150 | 250 | 200 | 100 |
| பாலை | 350 | 200 | - | 400 | - | - |
| வாழை | 80 | 100 | 150 | 300 | - | 200 |
| கொய் | 100 | 150 | 40 | 100 | 50 | - |
| மதனம் | 150 | 200 | 130 | 250 | - | 150 |

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



**இலட்சியப் பாதையில் செல்லுங்கள்**

முதலில் நீ செல்ல வேண்டிய பாதையைக் கண்டுபிடி. அதன் பின்னர் செய்யவேண்டியது எதுவும் இல்லை. கைகளைக் குவித்தபடியே கடவுளைச் சரணடைந்துவிடு. அந்தப் பாதையில் பயணித்தே நீ இலட்சியத்தை அடைந்து விடுவாய்.

ஓய்வு ஒழிவில்லாமல் வேலை செய்து கொண்டே இரு. ஆனால், செய்யும் வேலையில் நீ கட்டுப்பட்டு விடாதே. அதற்குள் சிக்கிக் கொள்ளாதே. இதுதான் கீதையின் வழி.

## நாளை

**ஐப்பசி-20**

**வெள்ளிக்கிழமை**

**(06.11.2015)**

திதி:
தசமி பி.ப 1.56 வரை

நட்சத்திரம் :
பூரம் பி.இ.04.36 வரை

சுபநேரம்:
06.05–07.35 வரை

இராகு காலம்:
10.35–12.05 வரை

# சுடோக்கு எண் விளையாட்டு

**நேற்றைய சுடோக்கின் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 1 | 6 | 2 | 9 | 5 | 8 | 4 |
| 5 | 2 | 4 | 7 | 3 | 8 | 1 | 6 | 9 |
| 6 | 9 | 8 | 5 | 4 | 1 | 2 | 3 | 7 |
| 7 | 5 | 9 | 8 | 1 | 6 | 4 | 2 | 3 |
| 8 | 6 | 3 | 2 | 9 | 4 | 7 | 5 | 1 |
| 1 | 4 | 2 | 3 | 5 | 7 | 6 | 9 | 8 |
| 2 | 8 | 7 | 1 | 6 | 3 | 9 | 4 | 5 |
| 4 | 3 | 6 | 9 | 7 | 5 | 8 | 1 | 2 |
| 9 | 1 | 5 | 4 | 8 | 2 | 3 | 7 | 6 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 2 | 6 | | | | | | |
| | 1 | | 9 | 8 | | | | |
| | | | | 1 | | | 6 | |
| | | 5 | | | | | | 1 |
| | 6 | | 4 | | 5 | | 8 | |
| 9 | | | | | | 3 | | |
| | 7 | | | 6 | | | | |
| | | | | 3 | 2 | 6 | 1 | |
| | | | | | | 9 | 2 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## உங்கள் பிறந்த மாத பலன்கள் எப்படி?

*(ஜனவரி, மாதத்தில் பிறந்தவர்களுக்கான பலன்கள் குறித்து நேற்றைய உதயனில் குறிப்பிட்டிருந்தோம். அதன் தொடர்ச்சி கீழே பிரசுரமாகிறது.)*

**பெப்ரவரி**

சூரியன் கும்பராசியில் சஞ்சரிக்கும்போது அக்காலத்தை பெப்ரவரி மாதமென்று அழைக்கின்றோம். இந்த ராசி, சனிக்கு ஆட்சி வீடும், சூரியனுக்குப் பகைவீடும் ஆகும். பஞ்ச தத்துவங்களில் காற்றைக் குறிக்கும் ராசியாகும்.

**தோற்றம்**

பெப்ரவரி மாதத்தில் பிறந் தவர்களில் ஒரு சிலர் நெட்டை யாகவும், ஒரு சிலர் குட்டையாகவும் தோற்றமளித்திடுவர். தலை சிறியதாகவும், மேற்பாகம் குவிந் தும், தாடைகள் உள்ளடங்கியும் காணப்படும். நெற்றியின் நடுப் பாகம் உட்புறம் சாய்ந்திருக்கும். புருவங்கள் அழகாகவும், வளைந் தும்காணப்படும். வாய் அழுத்தமாக மூடப்பட் டிருக்கும். மூக்கு அகன்று விரிந்திருக்கும். கழுத்து சிறியதாகவும், உறுதியாகவும் காணப்படும். பற்கள் அழகு வாய்ந்தவை. ஆனால் உறுதியற்றதாக இருக்கும். புஜங்கள் சதுரமாகவும், உறுதி வாய்ந்தனவாகவும், நுனியில் கூர்மையாகவும் இருக்கும். பாதம் நீண்டும் மெலிந்தும் காணப்படும். பேச்சில் சரளமான போக்கும், அழுத்தம் திருத்தமான குரலும் தொனிக்கும். புன்சிரிப்பான முகத்தோற்றம் உடையவர். அசைந்தாடிக் கொண்டே நடந்து செல்வர். சாதாரணமாக வும், விசேட நிகழ்வுகளில் இவர் உடுத்தும் உடைகள் வினோதமாக விளங்கும். தரிக்கும் உடைகள் அள வுக்கு மீறியும் அல்லது உடலைப் பற்றியும் பற்றாமலும் காணப்படும். நவநாகரிகமுறைக்கு முரண்பட்டதாக இவருடைய உடை தோற்ற மளித்திடும்.

**குணபாவங்கள்**

இவருக்கு ஸ்திரமான விருப்பு வெறுப்புகள் உண்டு. உறவினர்களிடத்திலும், நட்புக்குப் பாத்திரமானவர்களிடத்திலும் ஒரு சிலரிடத்தில் தான் இவர் நெருங்கிப் பழகுவார். இவருடைய அன்புக்குப் பாத்திரமானவர்கள் எதைச் செய்தாலும், எதைச் சொன்னாலும் தாங்கிக் கொள்வார். பிறரை இலகுவில் விடார். சிலர் இவர்களை கிறுக்குப் பேர்வழி என்றும் அழைப்பதுண்டு. அறிமுகமாகாதவர்களிடத்தில் இவர்கள் நடந்துகொள்ளும் முறை சந்தேகத்துக்கு இடந்தரும். பேசுவது ஒன்றும், நடப்பது வேறொன்றுமாக இவருடைய செயல் இருக்கும். ஆத்ம பலமும், மனோதிடமும் உடையவராதலால், பிரபலமான காரியங்களைத் திட சங்கற்பத்துடன் செய்து முடிப்பர். பல்லாயிரக்கணக்கான ஜனங்களை இவருடைய ஆக்ஞையின் கீழ் ஒன்றுபடும்படியாகச் செய்திடுவர். வெகு சீக்கிரத்தில் மன எழுச்சி அடைவர். குடும்ப விவகாரங்களில் பற்றற்றவராக விளங்குவர். ஒரு சிலர் குடும்பத்திலிருந்து தனித்தும் வாழ்வர். விரக்தி மனோபாவமும், தியாக உணர்ச்சியும் இவருடைய இயற்கைச் சுபாவங்களாகும். புரட்சிகரமான செயல்களுக்கும், தீர்மானங்களுக்கும் இவர் ஆதாரமாக விளங்கக்கூடியவர். எத்தகைய உயர்ந்த அந்தஸ்து, பதவி, சேவை, தலைமை ஸ்தானம் வகிக்கக்கூடிய வாய்ப்பிருந்தும் புறக்கணித்து வெளியேறுவர். இவருடைய திட்டங்களுக்கும், செய்கைகளுக்கும் தடை விதிக்க எவராலும் இயலாது. முரட்டுப் பிடிவாதமுடையவரென்றால் மிகையாகாது.

இவரை ஏமாற்றுவது அசாத்தியம். பொறுமைசாலிகள், மற்றவர்களைப் பற்றிக் கவலை கொள்ளார். வாழ்க்கையிலும் பிறர்நலத்தில் இவர் குறுக்கிடார். உயர்ந்த பண்புஉடையவர். நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். மனதை ஒரே நிலையில் கட்டுப்படுத்தக்கூடிய நிலையுடையவர். எளியவர். அன்புஉடையவர், சாந்தமானவர். அமைதியான தோற்ற முடையவர். தத்துவ ஆராய்ச்சியிலும், விஞ்ஞான ஆராய்ச்சியிலும் ஆர்வ முடையவர். பழைய சம்பிரதாயங்கள் இவருக்குப் பிடிக்காது.

கலையார்வம் உடையவர், சங்கீதப் பிரியர், எதையும் விஞ்ஞான ரீதியில் ஆராய்ச்சி செய்து விளக்கம் காண்பவர். எதை யும் ஆழ்ந்து நோக்கும் தன்மை உடையவர். மற்றவர்களை இன்புறச் செய்வதில் அலாதிப் பிரியமுடையவர். தம்முடைய இனத்தைச் சார்ந்தவரையும் உயர்த்திட அக்கறையுடன் பாடுபடுவர். தீர ஆலோசித்து எந்தக் காரியத்திலும் ஈடுபடுவர். இவருக்கு ஞாபக சக்தி அதிகம். இத்தகையோர் தம்முடைய காதல் விவகாரங்களில் ஆரம்பம் முதல் இறுதிவரை ஒரே நெறியுடன் இருந்திடுவர். கற்றறிந்தவற்றை மனதில் பதிய வைத்துத் தக்க தருணத்தில் பயன்படுத்துவர். பொருள் சேர்ப்பதில் கருத்துடையவராயினும் உலோபிகளல்லர். இவர் ஓகஸ்ட் மாதத்தில் பிறந்தவர்களிடத்தில் தொடர்பு கொண்டாராயின் இவருடைய முழுத் திறமையும் வெற்றி பெறுவதோடு செயலிலும் வெற்றி பரிணமித்திடும். இவருடைய உயர்ந்த பண்பும் சீரிய நோக்கங்களும் சமுதாய நலனுக்கு பயன்படும் என்பது தெளிவு.

**நோயும் தீரும் வகையும்**

பெப்ரவரி மாதத்தில் பிறந்தவர்கள் மிகவும் உணர்ச்சி வேகம் உடையவர்கள். பிறர் தம்மை இழிவுபடுத்துவதால் மனவாட்டம் கொள்வர். இதுமட்டுமல்ல, தம்மைப் பற்றிப் பிறர் என்ன நினைப்பார்களோ என்ற சிந்தனையில் ஓயாமல் ஈடுபடுவர். இவர்களுக்கு உடம்புக்கு எவ்விதக் கோளாறும் எளிதில் ஏற்படாது என்பது உறுதி. இழிச்சொல் தாளாமையால் ஓயாக் கவலைக்கு உள்ளாகி மனநோய்க்கு இடம் அளித்திடுவர். மேலும், பிறர் தம்மை அவமதிப்பதாலும், தக்க படி மரியாதை செலுத்தாததாலும் சோர்வு அடைந்திடுவர். இதனால், நாளடைவில் இரத்தக் கொதிப்பு ஏற்படும். இரத்த ஓட்டத்தில் ஏற்றத் தாழ்வுகள் தோன்றிடும். நரம்புத் தளர்ச்சியும் உண்டாகும். இத்தகையோர் பிறர் சொல்லுக்குச் செவி சாய்க்காமல் இருப்பது சிறந்த பரிகாரமாகும். மேலும், நல்ல வெளிப்புறக் காட்சிகளைக் காலை நேரத்திலும், மாலைநேரத்திலும் இவர் கண்டு களிப்பெய்துவதால் அவ்வப்போது இவருக்கு ஏற்படக் கூடிய அதிர்ச்சிகளில் இருந்து விடுவித்துக் கொள்ள நல்ல வழி ஏற்படும். மனத்தூய்மையும், அமைதியும் உண்டாகும். பெரும்பாலும் குருதிப் பரிசுத்தம் கெடுவதாலும், குருதி ஓட்டத்தில் ஏற்றத் தாழ்வுகள் ஏற்படுவதாலும் இவருக்கு உடல் அசதி தோன்றிடும்.



**குறையும் நிறையும்**

உணர்ச்சி வேகமுடையவர். இருப்பினும் மகிழ்ச்சிகரமாகக் காரியத்தைச் சாதிப்பர். (தொடரும்)

# விவாகரத்துக்கு பின்பு பெண்களின் நிலை

மனிதர்களின் குணாதிசயங்களில் இருந்து எவை எல்லாம் காணாமல் போயிருக்கின்றன என்று ஒரு பட்டியல் போட்டால் அதில் நிச்சயம் இடம் பெறுபவை மூன்று! பொறுமை. நிதானம். சகிப்புத்தன்மை. இவை இல்லாமல் போனதால்தான், கணவன்-மனைவியர்களுக்கு இடையே ஏற்படும் எல்லாப் பிரச்சினைகளுக் கும் ஒரே தீர்வு விவாகரத்துத்தான் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. விவாகரத்துக்கு மாற்றீடாக வேறு எதைப் பற்றியும் அவர்கள் சிந்திப்பதில்லை. முறித்துக்கொள்வது மட்டுமே முடிவானது என்று கருதுகிறார்கள். ஆண், பெண் இருவரும் சரிசமம் என்று சொல் லிக் கொண்டு அசுர வேக வளர்ச்சியைக் காட்டும் இன்றைய தலை முறையினரிடம் தங்கள் வாழ்க்கையில் ஏற்படும் எந்த ஒரு சிக்கலுக்கும் சரியான தீர்வு காணும் பொறுமை இல்லை. பொறு மையின்றி, நிதானமின்றி அதிரடியும் ஆவேசமுமாக களத்தில் இறங்கி விவாகரத்து வாங்கிவிடுகிறார்கள். ஆனால் விவாகரத் துக்குப் பிறகு வாழும் வாழ்க்கை மிகவும் கொடுமையானது. அதைப் பற்றி எவரும் யோசிப்பது இல்லை. கையில் பணம் இருந்தால் எதையும் சாதித்து விடலாம் என்ற மனோபாவத்தில் விவாகரத்து முடிவு எடுக்கப்படுகிறது. ஆனால் இழந்த எதையும் பணத்தால் வாங்கமுடியாது என்பதை உணரும்போது மிகுந்த மன உளைச்சலுக்கும், விரக்திக்கும் உள்ளாகிவிடுகிறார்கள்.

தவறுகளே செய்யாத மனிதர்கள் இல்லை. அவற்றைத் திருத்திக் கொள்ளும் முயற்சி தான் வாழ்க்கை. திருமணத்துக்கு முன்பு செய்யும் தவறுகளுக் காக பெற்றோர் பிள்ளைகளைத் தூக்கி எறிவது இல்லை. ஆனால் திருமணத்துக்குப் பிறகு செய்யும் ஒவ்வொரு தவறுக்கும் கணவன், மனைவி இருவரில் யாராவது ஒருவரைத் தூக்கி எறியும் முடிவுக்கு இன்னொருவர் வந்துவிடுகிறார்.

திருமணத்துக்கு முன்பு- திருமணத்துக்கு பின்பு என்று ஒருவருடைய வாழ்க்கையை இரண்டாக பிரித்துப் பார்த்த காலம் போய், இப்போது விவாகரத்துக்கு முன்பு- பின்பு என்று பிரித்துப் பார்க்கிறார்கள். அதில் பிந்தைய காலம் அனேகமாக பெண்களுக்கு இருண்ட காலம் ஆகிவிடுகிறது. ஆண்களும் விவாகரத்துக்கு பிறகு அதிகமான மனநெருக்கடிக்கு உள்ளாகி விடுகிறார்கள். இதனால் அவர்களுடைய தொழில் பாதிப்படைகிறது. 'தன்னைப் பற்றி தனக்கு பின்னால் என்ன பேசிக் கொள்வார்களோ!' என்ற எண்ணம் அவர்களுடைய நட்பு வட்டாரத்தை குறைக்கிறது அல்லது சிதைக்கிறது. அப்போது, தான் செய்யும் சின்னச் சின்ன தவறுகள் கூட, பெரிய வடிவத்தில் தனது கண்முன்னே வந்து நிற்கும்.

அந்த நேரத்தில் தன்மீதே தனக்குக் கோபமும், வருத்தமும் ஏற்பட்டு மனஅழுத்தம் எல்லைமீறும். இத னால் மது அருந்துவது, உறவுகளை புறக்கணிப்பது என்று முரண் பாடான பாதையில் பயணிக்க தொடங்கி விடுவார்கள். அப்போது அவரது மாண்பும், மரியாதையும் சிறிது சிறிதாக அவருடைய வாழ்க்கையில் இருந்து விடைபெற்று சென்றுகொண்டே இருக்கும். இந்த இழப்பை பணத்தாலும், பதவியாலும் ஈடுசெய்ய முடியாது என்பதை உணரும்போது, வாழ்க்கையில் தவறு செய்துவிட்டதை புரிந்துகொள்வார்கள். (தொடரும்)






"திருமணத்துக்கு முன்பு- திருமணத்துக்கு பின்பு என்று ஒருவருடைய வாழ்க்கையை இரண்டாக பிரித்துப் பார்த்த காலம் போய், இப்போது விவாகரத்துக்கு முன்பு- பின்பு என்று பிரித்துப் பார்க்கிறார்கள். அதில் பின்னைய காலம் அனேகமாக பெண்களுக்கு இருண்ட காலம் ஆகிவிடுகிறது. ஆண்களும் விவாகரத்துக்கு பிறகு அதிகமான மனநெருக்கடிக்கு உள்ளாகி விடுகிறார்கள்.


# நண்பனின் சாமர்த்தியம்

பொன்னியூர் என்ற ஊரில் ஜனா, சுருதி என்ற இரு நண்பர்கள் இருந்தனர். அவர்கள் சிறு பிராயத்திலிருந்தே இணை பிரியாத நண்பர்கள். ஜனா திறமையாகச் சம்பாதித்துக் கொண்டு வருவான். சுருதி அதை வாங்கி நிம்மதியாகச் சாப்பிடுவான். உள்ளூரில் பஞ்சம் ஏற்பட்டது. ஆதனால் வெளியூர் சென்று வியாபாரம் செய்து பிழைக்க இருவரும் முடிவு செய்தனர். இருவரும் குதிரையில் ஏறிக் கொண்டு பல ஊர்களையும் கடந்து ஏமலூர் என்ற ஊரை அடைந்தனர். அந்த ஊர் எல்லையில் உள்ள சத்திரம் ஒன்றில் இருவரும் தங்கினர். ஜனா, "சுருதி நான் இங்கே ஓய்வெடுக்கிறேன். நீ ஊருக்குள் சென்று வியாபாரம் செய்து விட்டு வா!" என்று கூறி நண்பனை அனுப்பி வைத்தான். சுருதி மிகவும் வெகுளி. எவர் எதைச் சொன்னாலும் நம்பி ஏமாந்து விடுவான். இக்கட்டில் மாட்டிக் கொண்டு விழிப்பான். இருந்தாலும் அவனிடம் தான் காசு இருந்தது. ஆயிரம் பொற் காசுகளை குதிரையின் சேணத்தில் மறைத்துக் கொண்டு குதிரையில் ஏறி நகரை நோக்கிச் சென்றான். ஊருக்குள் சென்றதும் வீதியில் எதிரே ஒருவன் வந்தான். "இந்தக் குதிரை விலைக்குக் கிடைக்குமா?" என்று கேட்டான். "விலைக்குத் தரத் தயார். விலை மிக அதிகம். உன்னால் கொடுக்க முடியுமா? நீ என்ன தொழில் செய்கிறாய்?" என்று வினவினான் சுருதி. "எனது பெயர் கந்தன். நான் ஆடுகளை வெட்டி இறைச்சி விற்கும் கடை நடத்துகிறேன். விலையைக் கூறு?" என்றான் கந்தன். "இதன் விலை ஐந்நூறு பொற்காசுகள்" என்றான் சுருதி. "உயர்தரமான அரேபியக் குதிரைகளே இருநூறு பொற்காசுகளுக்குக் கிடைக்கின்றன. உனது குதிரை என்ன பெரிய அதிசயக் குதிரையா? சரி பரவாயில்லை. இதோ நீ கேட்ட ஐந்நூறு பொற்காசுகள். குதிரையைக் கொடு" என்றான். ஐந்நூறு பொற்காசுகளை எண்ணியும் கொடுத்தான்.



பொற்காசுகளைப் பெற்றுக் கொள்வதற்காக சுருதி குதிரையை விட்டு இறங்கினான். பின்னர் குதிரையின் சேணத்தில் தான் வைத்திருந்த பணப் பையை எடுக்கச் சென்றான். "இந்தக் குதிரையைப் பணம் கொடுத்து வாங்கிவிட்டேன். இப்போது குதிரை எனக்குச் சொந்தம். குதிரையோடு உள்ள பொருள்கள் யாவும் எனக்கே சொந்தம்" என்று கூறிவிட்டு குதிரைமேல் ஏறிச் சென்று விட்டான் கந்தன். ஆயிரம் பொற்காசுகளை இழந்த சுருதி மிகுந்த ஏமாற்றத்துடன் சத்திரத்துக்கு வந்து சேர்ந்தான். நடந்தவற்றை நண்பனிடம் கூறினான். அவனுடைய சோகக் கதையைக் கேட்ட ஜனா ஏளனமாகச் சிரித்தான். உடனே நண்பனிடம் இருபத்தைந்து பொற் காசுகளை வாங்கிக் கொண்டு கந்தனின் கசாப்புக் கடையின் முன்பாகப் போய் நின்றான். கடையில் நான்கைந்து ஆட்டுத்தலைகள் தொங்கிக் கொண்டிருந்தன. "ஒரு தலையின் விலை என்ன?" என்று கேட்டான். அதற்கு கந்தன் "ஒருதலையின் விலை ஒரு பொற்காசு " என்றான் "இதோ இருபத்தைந்து பொற்காசுகள். இருபத்தைந்து தலைகள் கொடு" - என்றான் ஜனா. "இப்போது இங்கே இருக்கும் தலைகளை எடுத்துப்போ. மீதியை நீ இருக்குமிடத்தைச் சொல். அங்கே அனுப்பி வைக்கிறேன்." என்றான் கந்தன். "அதெல்லாம் முடியாது. இங்கு தொங்கும் தலைகளுடன் உனது குழந்தைகளின் தலைகளையும் வெட்டிக் கொடுக்க வேண்டும். தலைகள் என்று தான் பேசினோம். ஆட்டுத்தலைகள் என்று கூறவே இல்லை. எனக்குக் குழந்தைகளின் தலைகளையும் கொடுக்க வேண்டும்!" என்றான் ஜனா. கந்தன் அதிர்ச்சியில் நடுங்கினான். "ஐயா! ஏதோ முட்டாள்தனமாக வாக்குக் கொடுத்து விட்டேன். மன்னித்துக் கொள்!" என்று கெஞ்சினான். அப்போதுதான் தான் காலையில் குதிரையை ஏமாற்றி வாங்கியது நினைவுக்கு வந்தது. ஏமாந்தவனின் நண்பன் இவன் என்பதை புரிந்து கொண்டான். தான் ஏமாற்றிய குதிரையைத் திருப்பிக் கொடுத்து அவன் ஜனாவிடம் மன்னிப்புக் கேட்டான்.



# உயிரோட்டம் உள்ளதா வாழ்க்கையில்?



**உயிரோட்டம் உள்ளதா வாழ்க்கையில்? என்ற தலைப்பில் நேற்றைய 'இளவல் வட்டம்' பகுதியில் பிரசுரமான ஆக்கத்தின் தொடர்ச்சி.**

செய்யும் செயல் முழுமை பெறும்போது அதனால் அந்தச் செயலை மேற்கொள்பவர் அடையும் சந்தோசம் வார்த்தைகளில் அடங்காதது. அதே நேரத்தில் அது அர்த்தமுள்ளதாகவும் அமைந்து வெற்றியையும் அளித்து விடுகிறது. அந்த அளவு தனித்திறமை இல்லாவிட்டாலும், எத்தனையோ பேர் தங்கள் இயல்புக்கு ஏற்ப உயிரோட்டமான, உபயோகமான வாழ்க்கை வாழ்வதை நாம் பல இடங்களிலும் பார்க்கலாம். மனதுக்குப் பிடித்ததே வேலையாகவோ, தொழிலாகவோ அமையும் பாக்கியம் ஒருசிலருக்கே வாய்க்கிறது. பலருக்கு அப்படி அமைவதில்லை. அமைகின்ற வேலை உற்சாகமாக இல்லாதபோது பொழுது போக்கு ஒன்றையாவது உற்சாகமாகவோ, உபயோகமாகவோ வைத்துக் கொள்வது மிகப் புத்திசாலித்தனமான அணுகு முறையாகும். வருமானத்துக்கு ஒரு தொழிலும், மனதுக்கு பிடித்ததாய் ஒரு நல்ல பொழுது போக்கும் அமைத்துக் கொண்டு, உயிரோட்டம் உள்ள வாழ்க்கை வாழ்பவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். சிலர் சமூக சேவை எதிலாவது முழு மனதுடன் ஈடுபட்டு உயிரோட்டமாய் வாழ்க்கையை வைத்துக் கொள்கிறார்கள். வேலைக்குப் போகாத ஒரு குடும்பத் தலைவி தோட்ட வேலைகளில் மிகவும் ஈடுபாடுடையவர். நடும் செடிகளில் தளிர்க்கும் ஒவ்வொரு இலையிலும், பூக்கும் ஒவ்வொரு பூவிலும் ஆனந்தம் காணும் தன்மை அவரிடம் உண்டு. பலர் தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் பிடித்த ஒன்றில் ஆர்வமாக ஈடுபட்டு வாழ்க்கை இயந்திரமாக மாறிவிடாமல் பார்த்துக் கொள்கிறார்கள். உயிரோட்டமான வாழ்க்கை வாழ்பவர்கள் பெரும்பாலும் உபயோகமான வாழ்க்கை வாழ்கிறார்கள். இல்லா விட்டாலும் கூட மற்றவர்களுக்கு உபத்திரவமாக என்றும் மாறுவதில்லை. தங்கள் வாழ்க்கையில் தங்கள் வழியில் நிறைவு காண்பவர்கள் அடுத்தவர்கள் வாழ்க்கையில் அனாவசியமாகக் குறுக்கிடுவதில்லை. அடுத்தவர்களை நோகடிப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை. தனிப்பட்ட வாழ்க்கையில் ஏற்படும் இழப்புக்களையும், துக்கங்களையும் சமாளித்து சீக்கிரமே மீண்டு விடுகிறார்கள். அப்படி உயிரோட்டமில்லாத வாழ்க்கை வாழ்பவர்களோ அதிகமாக அடுத்தவர்களைப் பார்த்தே வாழ்கிறார்கள். பொருளாதார நிலையே மிக முக்கியம் என்று நம்பி சம்பாதிக்கும் முனைப்பில், தனிப்பட்ட இயல்பான திறமைகளையும், ஆர்வங்களையும் காவு கொடுத்து விடுகிறார் கள். பணம், பொருள், சொத்துக்களைச் சேர்த்துக்கொண்டே போகும், அவர்கள் வாழ்வில் முன்பு சொன்னது போல ஓட்டம் இருக்கிறது. உயிர் இருப்பதில்லை. ஒரு வெறுமை என்றும் இருந்து கொண்டே இருக்கிறது. அந்த வெறுமையை நிரப்பச் சிலர் போதையை நாடுகிறார்கள், சிலர் கேளிக்கைகளில் அதிகம் ஈடுபடுகிறார்கள், சிலர் பதவி அதிகாரம் தேடி அலைகிறார்கள். வெளிப் பார்வைக்கு அந்த வாழ்க்கை வெற்றியாகவும், மகிழ்ச்சியாகவும் தோன்றினாலும், நிரப்ப முடியாத வெறுமையாகவே அப்படிப்பட்ட வாழ்க்கை அமைந்து விடுவதுதான் சோகம். எனவே உங்கள் வாழ்க்கையில் உயிரோட்டம் உள்ளதா என்பதைச் சோதித்துப் பார்த்துக் கொள்ளுங்கள். மாற்றம் தேவையானால் மாற்றிக்கொள்ளுங்கள். அடுத்தவர் பார்வைக்கு வெற்றிகரமான வாழ்க்கையாய்த் தெரிந்து, உள்ளுக்குள் வெறுமையை உணரும் வாழ்க்கையாக இருக்கும் அவலம் மட்டும் வேண்டவே வேண்டாம்.



உதயன்

# விடுதலைப் புலிகளை மீளக்கட்டியெழுப்பும் முயற்சியில் பிள்ளையான்

## ஈடுபட்டாரா என விசாரணை நடைபெறுவதாக நீதிமன்றில் அறிவிப்பு

கொழும்பு, நவ.5

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் என்கிற பிள்ளையான் விடுதலைப் புலிகள் அமைப்பை மீண்டும் கட்டி எழுப்பும் முயற்சிகளில் ஈடுபட் டுள்ளாரா என்பது குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் அறிவித்துள்ளனர்.

இவ்வாறு பிள்ளையான் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணி கசாலி ஹுசேன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பிள்ளையானின் சட்டத்தரணி ஊடகங்களுக்கு தகவல் வெளியிடுகையில்:-

நேற்று பிள்ளையானை கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்திய குற்றப்புலனாய்வுப் பிரிவினர் இதனைத் தெரிவித்தனர்.

பொலிஸாரின் இந்த அறிவித்தல் வேடிக்கையாக இருக்கின்றது. சந்தேக நபர் ஜனாதிபதி உட்பட உயர் பாதுகாப்பு அதிகாரிகளுடன் நெருங்கி செயற்பட்டுள்ளார்.

பிள்ளையான் விடுதலைப் புலிகள் அமைப்பை மீண்டும் உருவாக்குவதற்கு முயற்சிக்கும் ஒரு நபராக இருந்தால் அவருக்கு முதலமைச்சர் பதவி வழங்கப்பட்டது எப்படியென்று கேள்விக்குள்ளாகியுள்ளது. அரசியல் நோக்கத்துடன் இவ்வாறான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

ஜோசப் பரராஜசிங்கம் கொலை சம்பவத்திற்காக பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி மற்றும் வாகனமொன்றை கண்டுபிடிப்பதற்காக சந்தேக நபரிடமிருந்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் மேலும் தெரிவித்தனர்.- என்றார். (வ-5)

# வடக்கில் 6 ஆயிரம் வீடுகள் இன்னமும் முடிவுறா நிலையில்

## விரைந்து கட்டி முடிக்குமாறு இந்திய துணைத்தூதுவர் பணிப்பு

யாழ்ப்பாணம், நவ.5

இந்திய வீட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 5 ஆண்டுகள் நிறைவடையும் நிலையிலும், வடக்குக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளில் 6 ஆயிரத்து 450 வீடுகள் இன்னமும் கட்டி முடிக்கப்படவில்லை. இந்த வீடுகளை விரைந்து கட்டி முடிக்குமாறு யாழிலுள்ள இந்திய துணைத் தூதுவர் அ.நடராஜன் வீட்டுத் திட் டத்தை நடைமுறைப் படுத்தும் நிறுவனங்களைப் பணித்துள்ளார்.

இந்திய வீட்டுத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளை முன்னெடுக்கும் முகவர் நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும், யாழிலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தினருக்கும் இடையில் நேற்று மாலை யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் சந்திப்பு இடம்பெற்றது. இந்தச்சந்திப்பில்கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தின் அதிகாரி ஒருவரும் கலந்து கொண்டார்.

அத்துடன் வீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் 3 முகவர் நிறுவனங்கள் அதன் பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வடக்கு மாகாணத்தில் இந்திய வீட்டுத் திட்டத்தின் முன்னோடிச் செயற்திட்டம் மற்றும் இரண்டாம் கட்ட செயற்திட்டம் என்பவற்றுக்காக 41 ஆயிரத்து 950 வீடுகள் ஒதுக்கப்பட்டன. இவற்றில் 35 ஆயிரத்து 500 வீடுகள் மாத்திரம் இது வரையில் கட்டி முடிக்கப்பட் டுள்ளன. எஞ்சிய 6 ஆயிரத்து 450 வீடுகளின் கட்டுமானப் பணிகள் பல்வேறு கட்டங்களில் இடம்பெற்று வருகின்றன. எஞ்சிய வீட்டுத் திட்டத்தின் பணி களையே விரைந்து முடிக்குமாறு இந்தியத் துணைத் தூதுவர் பணித்துள்ளார்.

இதேவேளை, யாழ்.மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட 2 ஆயிரம் இந்திய வீடுகள் உரிய காலப் பகுதியில் கட்டி முடிக்கப்படவில்லை என்று தெரிவித்து வேறு மாவட்டங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. (ற-5)

# பெற்றோரைப் பிரிந்து சென்ற சிறுமி திருமலையில் மீட்பு

## *அவரை சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்க நீதிமன்று உத்தரவு*

சாவகச்சேரி நவ.5

தந்தை ஏசியதால் வீட்டை விட்டு வெளியேறி வெளிமாவட்டத்திற்குச் சென்ற 15 வயது சிறுமி, திருகோணமலையில் முஸ்லிம் முதியவர் ஒருவரின் பாதுகாப்பில் இருந்தவேளை பொலிஸார் மீட்டு, சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர். குறித்த சிறுமியை திருநெல்வேலி முத்துத்தம்பி சைவச் சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளில் தெரியவருவதாவது:-

கொடிகாமம் பகுதியில் சகோதரனுடன் வாக்குவாதப்பட்ட சிறுமியை தந்தை ஏசியுள்ளார். இதனால் விரக்தியடைந்த சிறுமி, தனது தாயாரின் ஊரான மன்னாருக்குச் செல்வதற்காக பஸ்ஸில் ஏறி வவுனியாவில் இறங்கத் தெரியாமல் திருகோணமலைக்குச் சென்றுள்ளார்.

அங்கு அநாதரவாக அலைந்த சிறுமியை ஒரு முஸ்லிம் முதியவர் அழைத்துச் சென்று தனது பாதுகாப்பில் வைத்திருந்துள்ளார்.

இது தொடர்பில் கிடைத்த தகவலின் அடிப்படையில், கொடிகாமம் பொலிஸார் அங்கு சென்று சிறுமியை மீட்டு வந்துள்ளனர்.

இந்தச் சிறுமியை நேற்று சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர். இதன்போது, குறித்த சிறுமியை திருநெல்வேலி முத்துத்தம்பி சைவச் சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, குறித்த சிறுமி உறவினர்கள் எவருமில்லை என முஸ்லிம் முதியவரிடம் தெரிவித்துள்ளார். இதனால் தமது மதத்துக்கு சிறுமியை மாற்றுவதற்கு குறித்த முஸ்லிம் முதியவர் முயற்சித்தார் என விசாரணைகளில் தெரிய வந்ததாகபொலிஸார்தெரிவித்துள்ளனர். (வ-9)

# வடமராட்சி அபிவிருத்தி குறித்து ஜப்பான், வியட்நாம் பிரதிநிதிகள் ஆராய்வு

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த வியட்நாம் தூதுவரும் ஜப்பானின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியும் நேற்று வடமராட்சிக்குச் சென்று அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் நேரில் ஆராய்ந்தனர்.

வியட்நாம்தூதுவர்பான்கியூதோன் நேற்றுக் கரவை பருத்தித்துறை, கற் கோவளம், குடத்தனை, மணற்காடு மற்றும் நாகர்கோவில் ஆகிய பிரதேசங்களுக்குச் சென்று கரையோரங்களைப் பார்வையிட்டார்.

இதேவேளை ஜப்பானுக்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி கெனிசி சுகனுமா தும்பளை கிழக்குப் பகுதியில் ஜப்பான் நிதி உதவியுடன் பாசிக் நிறுவனத்தால் நடத்தப்படும் பழைய ஆடைகளைக் கொண்டு புதிய ஆடைகளைத் தயாரிக்கும் ஆடைத்தொழிற்சாலையைப் பார்வையிட்டதுடன் பொதுமக்களுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார். (வ-108)

# மாணவர்களுக்கு நியாயத்தை வழங்கி நல்லாட்சியைப் பாதுகாக்க வேண்டும்

## *அரசை வலியுறுத்துகின்றார் மேல்மாகாணசபை உறுப்பினர் சண்.குகவரதன்*

கொழும்பு, நவ. 5

மாணவர்கள் மீது பொலிஸார் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதோடு இது தொடர்பில் நீதியான விசாரணை நடாத்தப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு நியாயத்தைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தும் ஜனநாயக மக்கள் முன்னணியின் உபபொதுச்செயலாளரும் மேல் மாகாணசபை உறுப்பினருமான சண்.குகவரதன். 'ஒரு குடம் பாலில் ஒரு துளி விசம்' போல இந்தச் சம்பவம் நல்லாட்சிக்கு களங்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் சுட்டிக் காட்டினார்.

உயர்தேசியகணக்கீட்டுடிப்ளோமா கற்கைநெறி மாணவர்கள் அண்மையில் கொழும்பில் நடத்திய ஆர்ப்பாட்டப்பேரணி மீதான பொலிஸாரின் தாக்குதலைக் கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே சண்.குகவரதன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்த மாணவர்கள்தமதுடிப்ளோமா கற்கைநெறிக்கு 'பட்டப்படிப்பு' அந்தஸ்தைப் பெற்றுக்கொடுக்குமாறும்வேறு சிலகோரிக்கைகளையும் முன்வைத்து அரசை வலியுறுத்தும் வகையில் போராட்டம் நடத்தியுள்ளனர். கடந்த ஆட்சிக் காலத்தில் இது தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை அந்த அரசே இறுதியில் இரத்துச் செய்தது. எனவே, கடந்த ஆட்சியாளர்கள் செய்த தவறை திருத்துமாறே நியாயமான கோரிக்கையை மாணவர்கள் முன்வைத்துள்ளனர்.

இப்பேரணியால்பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் நிலை தலைதூக்கியிருந்தால் பொலிஸார் அதனை மிதவாதப் போக்குடன் கையாண்டிருக்க வேண்டும். ஏனென்றால் 'பொலிஸார் பொதுமக்களின் நண்பர்கள்' எனக் கூறப்படுகிறது. அதனைப் பொலிஸார் நிலைநாட்டியிருக்க வேண்டும். அதைவிடுத்து மாணவர்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதலை நடத்தியதை ஏற்றுக்கொள்ள முடியாது. இது கண்டிக்கத்தக்கது. நாட்டில் தற்போது இணக்கப்பாட்டு அரசியலுடன் நல்லாட்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் இவ்வாறானசம்பவங்கள் அரசுக்கு 'கரும்புள்ளியாக' உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் அமைந்துவிடும்.

எனவே, இந்தத் தாக்குதலின் பின்னணி தொடர்பில் உண்மையை ஆராய வேண்டும். அரசை அசௌகரியத்தில் தள்ளிவிடுவதற்கு ஏதாவது சக்திகள் முற்படுகின்றதா என்பதை அறியவேண்டும்.

அதேவேளை, உயர்கல்வி அமைச்சு மாணவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு உறுதியளித்துள்ளது. அதனை வரவேற்கின்றோம். ஆனால், உறுதிமொழிகள் நிறைவேற்றப்படுவதை காலம் தாழ்த்தாது நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்று சண்.குகவரதன் தெரிவித்துள்ளார். (த-சி)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அன்னலட்சுமி பொன்னம்பலம்



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி பொன்னம்பலம் 03.11.2015 செவ்வாய்க்கிழமை இந்தியாவில் காலமாகிவிட்டார்

அன்னார் திரு. திருமதி கந்தையா தம்பதிகளின் அன்பு மகளும் பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும், சிறீதரனின் அன்புத் தாயும் கிருபைமலரின் (கிளி) அன்பு மாமியும் தனஞ்ஜெயன், துவாரகா,கார்த்திகா ஆகி யோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04.11.2015) புதன்கிழமை இந்தியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காவி கோவிலடி,
வட்டுக்கோட்டை தெற்கு, வட்டுக்கோட்டை.

தகவல்
பேறாமகன் மு. நடராசா

## தியாகராசா அமிர்தலிங்கம்

(ஓய்வு பெற்ற உப அதிபர், யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம், ஒட்டுவெளி சிராவில் பிள்ளையார் கோயில் தர்மகர்த்தா)



ஒட்டுவெளி மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் இல.77, அரசடி வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா அமிர்தலிங்கம் நேற்று (04. 11.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராசா நாகமுத்து தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தங்கம்மாவின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு, செல்லக்கண்டு ஆகியோரின் அன்புச் சகோதரனும், சதாசிவம், புனிதவதி, புனிதவதனி, சிவானந்தன், புனிதலதா (தாதிய உத்தியோகத்தர் சாவகச்சேரி ஆரதார வைத்தியசாலை) சதானந்தம், ஆனந்தி, ஆனந்தசோதி ஆகியோரின் அன்புத் தந்தையும், பிறேமிளா, பகீரதன் (சுவிஸ்) சிவநாதன், அனுஷா (தாதிய உத்தியோகத்தர் போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்) சுகந்தினி, செந்தூரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் அகீபன், தீபிகன், பானுஜன், சிந்துஜன், கஜாணன், சஞ்சயன், வர்சினி, சிந்துஜா, லக்சன், கபிசன், தருண், ஜினித்தா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2015) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மதியம் 01.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**77, அரசடி வீதி, நல்லூர்.**
**077 716 9064**


**தகவல் :**
**குடும்பத்தினர்**

# மாணவரைத் தாக்கியோரை சட்டத்தின் முன் நிறுத்துங்கள்

## நாடாளுமன்றில் சம்பந்தன் வலியுறுத்தல்

கொழும்பு, நவ. 5

நியாயமான கோரிக்கையை முன்வைத்து, நிராயுதபாணிகளாகவே மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த நிலையில், அவர்கள் மீது பொறுப்பற்ற விதத்தில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் சுட்டிக் காட்டினார்.



பின்நோக்கி நகர்ந்த மாணவர்கள்மீது எதற்காக தாக்குதல் நடத்தப்பட்டது? எனவே, இந்தச் சம்பவத்தில் தவறிழைத்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு, வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்று ஆகியன முடிவடைந்தபின்னர், விசேட கூற்றொன்றை விடுத்து உரையாற்று கையிலேயே சம்பந்தன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு: –

எச்.என்.டி.ஏ. மாணவர்கள் கடந்த 29 ஆம் திகதி கொழும்பு, வார்ட் பிளேஸில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தைக் கலைப்பதற்காக மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மாணவர்கள்மீது எவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டது என்பதை தொலைக் காட்சிகளில் நாம் பார்த்தோம்.

மாணவர்களின் கோரிக்கை நியாயமானதாகும். அதை அடைவதற்காகவே அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர். அவர்கள் ஆயுதம்வைத்திருக்கவில்லை மாணவர்களிடம் பொல்லுகளும் இருக்கவில்லை. நிராயுதபாணியாகவே அவர்கள் இருந்தனர்.

வீதித்தடையை மாணவர்கள் எட்டியபோது, தண்ணீர் பீச்சப்பட்டது. மாணவர்கள் அதையும் தாண்டி முன்நோக்கிச் செல்லவில்லை. அவர்கள் பின்நோக்கியே நகர்ந்தனர்.

இவ்வாறு அவர்கள் பின்நோக்கி வரும்போதுதான் பொல்லுகளால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் சிலருக்குக் காயமும் ஏற்பட்டது. மேலும் சிலர் வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டனர். எனவே, பின்நோக்கி நகர்ந்த மாணவர்கள் எதற்காக தாக்கப்பட்டார்கள்? இது நியாயத்துக்குப் புறம்பான பொலிஸாரின் பொறுப்பற்ற நடவடிக்கையாகும். சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய பொலிஸாரே இவ்வாறு செயற்பட்டுள்ளனர். இதுதான் நல்லாட்சியின் விளைவா?

நாம் ஜனநாயக நாடொன்றிலேயே வாழ்கின்றோம். எனவே, ஜனநாயக வழியில் போராடும்போது, அவர்களின் கோரிக்கைகள் செவிமடுக்கப்படவேண்டும். காலனித்துவ நாட்டில் நாம் வாழவில்லை. உயரதிகாரிகள் உரிய வகையில் செயற்பட்டிருந்தால் தாக்குதலைத் தடுத்திருக்கமுடியும். எனவே, இவர்கள் பற்றியும் விசாரிக்கப்பட்டு, சட்ட நடவடிக்கை எடுக்கப் படவேண்டும். தவறிழைத்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். அதேவேளை, நாட்டில் வேலையில்லாப் பிரச்சினை அதிகரித்துள்ளது. இது தீர்க்கப்படவேண்டும். குறிப்பாக, வடக்கில் படித்த இளைஞர்கள் வேலையின்றி இருக்கின்றனர். எனவே, அங்கு ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு உருவாக்கப்படவேண்டும்–என்றார். (த–சி)

# விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பயனளிக்காது சாவு

யாழ்ப்பாணம், நவ. 5

மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.

கட்டைக்காடு, நித்தியவட்டையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் காயமடைந்த பளை முள்ளியானைச் சேர்ந்த குணசீலன் நிறஞ்சன் (வயது 20) என்பவரே சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தார். அவர் 4 மாதக் குழந்தையின் தந்தை.

மோட்டார் சைக்கிளில் கட்டைக்காட்டிலிருந்து இயக்கச்சி நோக்கிச் சென்றுகொண்டிருக்கும்போது எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதனால் அவற்றில் பயணித்த 3 பேர் காயமடைந்தனர். அவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் ஒருவர் உயிரிழந்துள்ளார். நீதிமன்ற உத்தரவுப்படி திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(த–4,86)

# 30 நாள் அவசரகால நிலையை பிரகடனம் செய்தது மாலைதீவு

மாலே, நவ.5

மாலைதீவில் அவசரகால நிலைமை பிரகடனம் நேற்று முதல் எதிர்வரும் 30 நாள்களுக்கு அவசரகால நடைமுறைப்படுத்தப்படும் என அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது.

மாலைதீவின் சட்ட மா அதிபர் மொஹமட் அனில் இதனை அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி அப்துல்லா யாமீனின் உத்தரவுக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக, அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் ஆயுதங்கள் வெடிபொருள்கள் மீட்கப்பட்டிருந்ததாகவும் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்கள் ஏற்படக் கூடும் என்ற அடிப்படையில் இவ்வாறு அவசரகால நிலைமை அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாகவும் மாலைதீவு சட்டமா அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, ஆபத்தான ஆயுதங்களை பயன்படுத்தும் சூழ்ச்சித் திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மாலைதீவு படை அதிகாரி கூறியுள்ளார். (த–வ)

# சர்வமத தேசிய மாநாட்டில் யாழ். பிரதிநிதிகள் 18 பேர்

யாழ்ப்பாணம், நவ.5

சர்வமத தேசிய மாநாட்டில் யாழ். மாவட்ட சர்வமதப் பேரவையின் 18 உறுப்பினர்கள் கலந்து கொள்ள வுள்ளதாக யாழ். சர்வமதப் பேரவையினர் தெரிவித்துள்ளனர்.

சர்வமத தேசிய மாநாடு இன்று வியாழக்கிழமை ஸ்ரீலங்கா பதனம் மாவத்தை, சுதந்திர சதுக்கம், கொழும்பு 7இல் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகச் சபாநாயகர் கருஜெயசூரிய கலந்து கொள்ளவுள்ளார். மேலும் இந்த மாநாட்டில் யாழ். மாவட்ட சர்வமதப் பேரவையின் செயலாளர், இணைத்தலைவர்கள் உட்பட 18 உறுப்பினர்கள் கலந்துகொள்ள வுள்ளதாகவும் யாழ். மாவட்ட சர்வமத பேரவையினர் தெரிவித்துள்ளனர்.

(த–ரி5)

# வடக்கு சுகாதார விருத்திக்கு 3 வருடத் திட்டம் தயாரிப்பு

யாழ்ப்பாணம், நவ. 5

வடமாகாணத்தில் சுகாதாரத் துறையை அபிவிருத்தி செய்யவென அடுத்துவரும் 3 வருடங்களுக்குரிய திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அது பற்றிய ஆலோசனை நடந்து கொண்டிருக்கிறது என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

அடுத்து வரும் 3 வருடங்களில் என்ன செய்யவேண்டும் என்பது பற்றிய ஆலோசனைக்காக நிறுவனம் ஒன்றிடம் பணி ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவற்றை அந்த நிறுவனம் சீரமைத்து வடமாகாண சுகாதார அமைச்சுக்கு வழங்கும். அந்த 3 வருடத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று யாழ். பண்ணையிலுள்ள சுகாதார அமைச்சில் நேற்றும் இடம்பெற்றது. என்னென்ன செய்யவேண்டும் என்பது பற்றிய விடயங்கள் முடிவாக இன்னும் எடுக்கப்படவில்லை. தொடர்ந்து ஆலோசனை முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த–4)

# இலங்கைத் தமிழரின் புகலிடக் கோரிக்கையை மீளாய்வு செய்ய உத்தரவு

கொழும்பு, நவ.5

இலங்கைத் தமிழர் ஒருவரின் புகலிடக் கோரிக்கை விண்ணப்பம் தொடர்பில் நடைமுறை நேர்மை மீறப்பட்டுள்ளதாக ஆஸ்திரேலிய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவர் 2010ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் தீவுகளைச் சென்றடைந் துள்ளார். இவரது புலிடக் கோரிக்கை விண்ணப்பத்தை மீளாய்வு செய்யுமாறு சுயாதீன ஆய்வாளர் ஒருவரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது.

பின்னர் இரண்டாவது ஆய்வாளர் மீண்டும் நேர்காணல் நடத்தாமல் முதல் தடவை செய்யப்பட்ட நேர்காணல் மற்றும் குரல் பதிவு களின் அடிப்படையில் அவரது புகலிடக் கோரிக்கையை நிராகரித்துள்ளதாக நீதிமன்றில் சுட்டிக் காட்டப்பட்டது.

இந்த நிலையில் குறித்த இலங்கைத் தமிழரின் புகலிடக் கோரிக்கை விண்ணப்பத்தை மீளவும் பரிசீலிக்குமாறு நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது. (த–வ)

# முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளையும் போர்க்குற்ற விசாரணையில் சேர்க்கவேண்டும்

## *கிழக்கில் நேற்று பிரகடனம் வெளியீடு*

மட்டக்களப்பு, நவ.5

இலங்கையில் ஐ.நா. அனுசரணையுடன் நடைபெறவுள்ள போர்க்குற்ற விசாரணையில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் சேர்க்கப்படவேண்டுமென வலியுறுத்தி நேற்றுப் புதன்கிழமை கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்களால் பிரகடனமொன்று வெளியிடப்பட்டுள்ளது.




தென்கிழக்கு பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸினால் பல்கலைக்கழகத்திற்கு முன்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கவன ஈர்ப்பு போராட்ட நிகழ்வின் போது இந்தப் பிரகடனம் வாசிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

முஸ்லிம் மஜ்லிஸ் பிரகடனம் என வெளியிடப்பட்ட அந்த பிரகடனத்தில்,

இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளில் முஸ்லிம்களுக்கு சம அந்தஸ்து வழங்குதல், வடக்கிலிருந்து விடுதலைப் புலிகளினால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் விவகாரம் மற்றும் முஸ்லிம்களின் பிரச்சினைகளும் போர்க்குற்ற விசாரணையில் சேர்க்கப்படவேண்டும். அத்துடன் அந்த விசாரணைகள் 1985ஆம் ஆண்டு தொடக்கம் நடைபெற வேண்டும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வட மாகாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் பிரச்சினைகளை ஐ.நா. விசாரணை செய்யவேண்டும். அவர்களுக்கு உரிய இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும். முஸ்லிம் அரசியல் தலைமைகள், முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகள் தொடர்பில் ஒருமித்த கருத்துடன் செயற்படவேண்டும். வடமாகாண முஸ்லிம்களின் பிரச்சினைகளை ஆராயும் பொருட்டு ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படவேண்டும்.

மேலும் வனப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள முஸ்லிம்களின் காணிகளை மீள வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் போன்ற விடயங்களும் ஏற்பாட்டாளர்களினால் இந்த கவன ஈர்ப்பு போராட்டத்தின் போது வலியுறுத்தப்பட்டது. (த–வ)

# எம்.கே.நாராயணன் மீது காலணியால் தாக்குதல்

## சென்னையில் நேற்றுச் சம்பவம்


எம்.கே.நாராயணன்


தாக்குதல் நடத்திய பிரபாகரன்

லண்டன், நவ.5
இந்தியாவின் முன்னாள் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணனை சென்னையில் இலங்கை அகதிகள் தொடர்பான கருத்தரங்கின் முடிவில், பார்வையாளர்களில் ஒருவர் காலணியால் தாக்கியுள்ளார்.
எல்லாத்துக்கும் நீதான் காரணம் என குறிப்பிட்டு அந்த நபர் தாக்குதல் நடத்தியுள்ளார். இலங்கைத் தமிழர் பிரச்சினையில் எம்.கே. நாராயணனன் தான் காரணம் எனவும் குறித்த நபர் பின்னர் குறிப்பிட்டுள்ளார்.
இது தொடர்பில் லண்டன் பி.பி.சி வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
சென்னையிலிருந்து வெளியாகும் இந்து ஆங்கில நாளிதழ் குழுமத்தின் ஆய்வு அமைப்பான, அரசியல் மற்றும் பொதுக் கொள்கைக்கான இந்து மையம் என்ற அமைப்பினால் இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளின் எதிர்காலம் குறித்து நேற்று சென்னையில் கருத்தரங்கு ஒன்று நடந்தது.
அதில் கலந்து கொண்ட முன்னாள் இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன், உரையாற்றிவிட்டு, அந்த அரங்கை விட்டு வெளியே சென்று , அரங்கில் பார்வையாளராக அமர்ந்திருந்த ஒருவர், அவரை அணுகி, செருப்பால் அடித்தார்.
அந்த நபர் நாராயணனைத் தாக்கும்போது, எல்லாத்துக்கும் நீ தாண்டா காரணம் என்று கூறியபடியே அடித்தார். இதில் இரண்டு – மூன்று அடிகள் நாராயணன் மீது விழுந்தன. இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக வந்திருந்த முன்னாள் பொலிஸ் அதிகாரி உடனடியாக அந்த நபரைப் பிடித்துத் தள்ளினார்
திடீரென்று நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலை அடுத்து உடனடியாக, அவரை , அவரது அருகில் இருந்த இந்து பத்திரிகை குழுமத்தின் தலைவர் என்.ராம் மற்றும் பிறர் சூழ்ந்து பாதுகாப்பாக அங்கிருந்து அவரது காருக்கு அழைத்துச் சென்றனர்.
தாக்குதல் நடத்திய நபர், புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியைச் சேர்ந்தவர் என்றும் அவர் பெயர், பிரபாகரன் என்றும் தெரிகிறது.
தான் எந்த இயக்கத்தையும் சாராதவர் என்றும், இலங்கைத் தமிழர் பிரச்சனையில் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தியை திசை திருப்பியவர் எம்.கே.நாராயணன் தான் என்றும் அதனால் தான் அவரைத் தாக்கினேன் என்றும், அவர் அங்கிருந்த செய்தியாளர்களிடம் கூறினார்.
இதற்குள் அங்கு விரைந்த பொலிஸார், பிரபாகரனைக் கைது செய்தனர். நாராயணனுக்கு காயம் ஏதும் ஏற்பட்டதாக உடனடியாகத் தெரியவில்லை.
இந்தத் தாக்குதலைக் கண்டித்த இந்துக் குழுமத்தின் தலைவர் என்.ராம், இது போன்ற தாக்குதல்களில் ஈடுபடுபவர்களுக்கு எந்த விதமான ஆதரவும் தமிழ் நாட்டில் இல்லை, அவர்கள் விளிம்பு நிலை இயக்கங்களை சேர்ந்தவர்கள் என்று குறிப்பிட்டார். இவர்கள் முழுக்க முழுக்க இலங்கைத் தமிழர்களின் நலன்களுக்கு எதிரானவர்கள் என்று ராம் குறிப்பிட்டார்.
முன்னதாக இந்தக் கூட்டத்திற்கு எதிராக மே 17 இயக்கம் ஆர்ப்பாட்டம் நடத்துவதாக அறிவித்திருந்ததால், பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.
அனைவரது உடைமைகளும் சோதனையிடப்பட்ட பின்னரே அரங்கிற்குள் அனுமதிக்கப்பட்டனர். இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் தங்கள் பெயர்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ள வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்ததாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## அரச நியமன வயதெல்லையை அதிகரிக்க அமைச்சர் யோசனை

கொழும்பு, நவ.5
அரச உத்தியோகத்திற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள நியமனம் வழங்கும் வயதெல்லையை மேலும் 10 வருடங்கள் அதிகரிக்கும் பத்திர மொன்றை அமைச்சரவையில் முன் வைக்கவுள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.
மத்துகம பகுதியில் இடம் பெற்ற நிகழ்வொன்றிலேயே ராஜித மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.
இது தொடர்பில் அவர் கூறியுள்ள தாவது:-
தற்போது அரச உத்தியோகத்திற்கான அதிகபட்ச வயதெல்லை 30 தொடக்கம் 35 வரையாக உள்ளது.
இதனால், சிலருக்கு தொழிலைப் பெறும் வயது பிரச்சினையாக இருப்பதால் தொழிற்படையில் சேர முடியால் உள்ளது.
இந்தப் பிரச்சினைக்கு மக்களுக்கு சாதகமான வகையில் தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும்.-என்றார். (த-வி)


சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2695 திகதி 2015.11.04
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
02 12 28 60 Z 50
சனிக்கிழமை ஜக்பொட் ரூ.33,357,775/=
பச்சை நிற டிக்கட்டுகள் 2015.11.07 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Galaxy Star
வெற்றி வாரம் 005 திகதி 2015-11-04
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
10 06 18 32 41
அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ.2,474,220/-

SAAMSON SPOKEN ENGLISH
Experts in English Training
நெல்லியடி & யாழ்நகர்
இம்முறை A/L எழுதியோர், இளைஞர், யுவதிகள்,பல்கலை புகுமுகமாணவர்கள் தொழில்புரிவோர், ஆசிரியர்கள் வெளிநாடுசெல்வோர் இணையமுடியும்.
பாடப்புத்தகங்கள், சான்றிதழ் மற்றும் VIDEO DVD என்பன முற்றிலும் இலவசம்.
வாரநாள் (திங்கள், புதன்) வகுப்புகள் ஆரம்பம் – 09.11.2015 திங்கட்கிழமை
1.காலை 08–10 மணி 2. காலை 10–12 மணி
சனி. ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 07-11-2015
1. காலை 08–10 வரை 2.மாலை 03–05 வரை
SAAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 621 4567

வாடகைக்குண்டு
நாள், மாத அடிப்படையில் கார்கள் வாடகைக்குண்டு (Nishan, Sunny, Axio)
தொடர்பு : 075 204 0061


**துயர் பகிர்கின்றோம்**

மன்ற உறுப்பினர் திரு.த. செல்வம் அவர்களின்
(உரிமையாளர் மாதவன் மிதிவண்டி திருத்தகம்- சாவகச்சேரி)
பாசமிகு தாயார்

திருமதி **வெள்ளையம்மா தம்பு**

அவர்கள் 01.11.2015 ஞாயிற்றுக்கிழமை இயற்கையெய்தினார். அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.

**கண்ணீர் அஞ்சலி**

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் சந்திரபுரம் பிரிவில் கிராம அலுவலராக கடமையாற்றும் **கே.வாமதேவன்** அவர்களின் அன்பு மாமியார்

திருமதி **பத்தினி சின்னத்தம்பி**

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம், தென்மராட்சி.
பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரிசங்கம்.

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர் **அருந்தவம் பிரீடன்**

மண்ணில் 20.09.1987
விண்ணில் 15.11.2014

அன்புள்ள மகனாக
அனைவருக்கும் உறவாக
இன்புள்ள மனிதனாக
இவ்வுலகில் வாழ்ந்தவனே
பிரிவென்னும் பெருந்துன்பம்
பிறப்போடு சேர்ந்ததுதான்
எனினும் உன்னை மறப்போமா
எம் உயிர் உள்ளவரை.

ஆவரங்கால் கிழக்கு, மணற்பகுதி, புத்தூர்
குடும்பத்தினர்.

**31ஆம் நாள் நினைவஞ்சலி**



திருமதி **அன்னலக்ஷ்மி நவரட்ணம்**

மலர்வு 25.09.1936
உதிர்வு 05.10.2015

பாசத்தின் இருப்பிடமாய்
அன்பின் திருவுருவாய்
பண்பின் உறைவிடமாய்
எம் எல்லோரையும்
வையத்துள் வாழ்வாங்கு வாழ
வைத்த அன்னையே
நீ தெய்வத்துள் உறைவது
திண்ணம்

குடும்பத்தினர்.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

வேலணை பிரதேச சபையில் முகாமைத்துவ உதவியாளர் தரம் II இல் கடமையாற்றி இலங்கை நிர்வாக சேவைப் (SLAS) பரீட்சையில் சித்தி பெற்று தெரிவு செய்யப்பட்டுள்ள

**செல்வன் பரமானந்தன் சத்தியராகவன்**




சீரிய உள்ளம் கொண்ட
சிறப்பு மிகு மைந்தா உந்தன்
கண்ணியம், கடமை, நேர்மை
கருத்தொருமித்தும் கொண்டு
வேலணை பிரதேச சபையில் விருப்புடன்
முதல் சேவையாற்றி கல்வியின் மேண்மையினால்
பதவியில் உயர்வு பெற்று
அன்புடன், பண்பினால் அரவணைக்கும் ஆற்றலில்
எல்லோருக்கும் நல்லவனாய் ராகமதாய் நீர் இருந்தீர் - இன்று
இலங்கை நிர்வாக சேவையிலே
உன்னதமாய் சேவை செய்ய
உயரிய பரீட்சையில் சிறப்புடனே சித்திபெற்று
நீர் போற்றும் தாயாம் நயினை பூசணியின் அருளுடன்
மக்கள் சேவையாம் மனோ உன்னத சேவை செய்ய புறப்படும் மைந்தா
பல்லாண்டு காலம் பார் போற்ற வாழ்க என வாழ்த்துகின்றோம்.

பணியாளர் நலன்புரி சங்கம்
வேலணை பிரதேச சபை
வேலணை.

# அடக்குமுறையைத்தான் இந்த அரசும் கையாள்கிறது

## குமார் குணரட்ணம் கைது தொடர்பில் முன்னிலை சோசலிசக் கட்சி விசனம்

யாழ்ப்பாணம், நவ. 5

மக்களுக்கு அரசு அழுத்தம் கொடுக்கும்போது அதற்கு எதிராகப் போராடினால் - அரசுக்கு அழுத்தம் கொடுத்தால் அவர்களுக்கு எதிராக இந்த அரசும் அடக்குமுறையைக் கையாள்கிறது.

இவ்வாறு, முன்னிலை சோசலிசக் கட்சியின் தலைவர் குமார் குணரட்ணம் கைது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள கட்சியின் மத்திய குழு உறுப்பினர் ரவீந்திர முதலிகே தெரிவித்தார்.

குறித்த கட்சியின் தலைவர் குமார் குணரட்ணம் கேகாலையில் வைத்துப் பொலிஸாரால் நேற்று முற்பகல் கைது செய்யப்பட்டார். அவரது தாயார் நோய்வாய்ப்பட்டுக் கேகாலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் என்றும் அவரைப் பார்வையிடச் சென்ற போதே குணரட்ணம் கைது செய்யப்பட்டதாகவும் ரவீந்திர முதலிகே தெரிவித்தார்.

அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரிய கருத்தமர்வு ஒன்று யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது. அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

குமார் குணரட்ணம் அரசியல் கட்சி ஒன்றின் தலைவர். முன்னைய ஆட்சியில் அவர் அச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டு ஓடினார். பின்னர் வந்திருந்த நிலையில் ராஜபக்ச ஆட்சியில் அவர் கடத்தப்பட்டார். எனினும் சர்வதேச நாடுகளின் அழுத்தம் காரணமாக அவர் பின்னர் விடுவிக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டார். கடந்த வருட இறுதியில் நாட்டுக்கு வந்திருந்தார். அவர் இந்த நாட்டுப் பிரஜை என்றபோதும் அவருக்கு இங்கு வாழ்வுரிமை அளிக்கப்படவில்லை. அவர் பற்றிய விவகாரம் பிரச்சினைக்குரியதாக இருந்த நிலையில் அவர் நாட்டில் தங்கியிருக்கலாம் என்று சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கும் நிலையில் அவரைக் கைது செய்துள்ளனர்.

எச். என்.டீ.ஏ. மாணவர்களின் போராட்டத்துக்குப் பின்புலமாக குமார் குணரட்ணம் இருந்தார் என்றும் குற்றச் சாட்டுச் சுமத்தப்பட்டுள்ளது. அதன் காரணமாகவே அவர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் கைது செய்யப்பட்டமையைக் கண்டிப்பதாகவும் கைதை ஏற்க முடியாது என்றும் ரவீந்திர முதலிகே தெரிவித்தார்.

தற்போது நல்லாட்சி என்று கூறுகின்றபோதும் அவர் அரசியல் செய்ய அனுமதி வழங்கப்படவில்லை. அவரின் பிரஜாவுரிமை பற்றி அரசு கூறும் விடயம் புதினமாகவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-4)

### தமிழ் கைதிகள்

இவர்களுக்கு எதிராக எந்தச் சாட்சியமும் இன்றிப் பல ஆண்டுகளாக வைத்திருந்து விட்டு வழக்குகளும் பதியாமல் தற்போது சட்டமா அதிபர் தான் தீர்மானிக்க வேண்டும் என்பது ஏமாற்று. இவர்களுக்கெதிராக வழக்கு இதுவரை பதியப்படவில்லை என்றால் இவர்களுக்கு எதிரான சாட்சிகள் அங்கு இல்லை. இனித்தான் அவர்கள் சாட்சிகளைப் பெறவேண்டியுள்ளது. அதைப் பெற்றுத்தான் இவர்களுக்கு எதிராக வழக்கைப் பதியக் கூடியதாக இருக்கும்.

ஆகவே இது அரசியல் ரீதியில் எடுக்க வேண்டிய தீர்மானம். நீதி அமைச்சர் எனது நண்பர். இருப்பினும் கூற்றை ஏற்க முடியாது .இது ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் இணைந்து அரசியல் ரீதியான முடிவின் பால் விடுதலை செய்யப்படவேண்டியது. நாட்டில் ஏற்கனவே 10 ஆயிரம் போராளிகளிளும்,ஜே.வி.யினரும் விடுவிக்கப்பட்டபோது இந்த நாட்டில் ஏற்படாத குழப்பம் இந்த 300 பேரை விடுவிப்பதால் ஏற்படமாட்டாது. ஆகவே அரசியல் காரணத்துக்காக வைத்திருக்கும் இந்தக் கைதிகள் அரசியல் ரீதியான தீர்மானத்தின் மூலமே விடுவிக்கப்படவேண்டும்-என்றார். (த-101)

### ரவிராஜ்

கருணா குழு உறுப்பினர்களான பழனித்தம்பி சுரேஸ் மற்றும் சிவநேசன் விவேகானந்தன் ஆகியோருக்கு எதிராக மாத்திரம் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படாத ஏனைய மூன்று சந்தேகநபர்களையும் விடுதலை செய்வது குறித்து சட்டமா அதிபர் ஆலோசித்து வருவதாகவும் நீதிமன்றத்தில் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த விவகாரம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ஏனெனில், குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்படாத சந்தேக நபர்களுள், ரவிராஜ் படுகொலை வழக்கில் பிரதான சந்தேகநபர் என்று கூறப்பட்ட லெப்.கொமாண்டர் சம்பத் முனசிங்க என்ற கடற்படை அதிகாரியும் ஒருவராவார். இவர் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச மற்றும் முன்னாள் கடற்படை தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட ஆகியோரின் பாதுகாப்பு அதிகாரியாக பணியாற்றியிருந்தார். அத்துடன் இவரே, பல கடத்தல்களின் சூத்திரதாரியாகச் செயற்பட்டதாகவும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன. இந்த நிலையில், இவர் இந்த வழக்கில் இருந்து விடுவிக்கப்படுவது சட்டத்துறை வட்டாரங்களில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. (த-5)

### கைதிகளின்

வழிமொழிந்து உரையாற்றுகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் இவ்வாறு கூறினார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் அரசியல் கைதிகள் நீண்டநாட்களாக விசாரணைகள் எதுவுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஏழு வருடங்களுக்கு மேல் இவ்வாறு தடுத்துவைக்க முடியாது. எனவே, இங்கு அரசியல் காரணம் இருக்கின்றது. இந்த நிலையில், இலங்கையில் அரசியல் கைதிகள் என எவரும் இல்லையென்று அமைச்சர்கள் துள்ளியெழுந்து கூறுகின் றனர்.

அவன்கார்ட் போன்ற சம்பவங்களுடன் தொடர்புடையவர்களுக்குப் பிணை வழங்கப்படுகின்றது. ஏனைய குற்றவாளிகளுக்கும் பிணை கிடைக்கின்றது. எனினும், நீண்ட காலமாகச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு பிணை வழங்கப்படுவதில்லை. இது ஏன்? தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஒரு அணுகுமுறையும் மற்றையவர்களுக்கு வேறு அணுமுறையும் பின்பற்றப்படுவது ஏன்? தமிழர்கள் என்பதாலா அவர்கள் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்?

தமது விடுதலையை வலியுறுத்தித் தமிழ் அரசியல் கைதிகள் அண்மையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். இந்த நிலையில், விடுதலைக்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரச தரப்பிலிருந்து உறுதியளிக்கப்பட்டது.

விடுதலை நடவடிக்கை ஒக்ரோபர் 31 ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகும் என்றும், நவம்பர் 7ஆம் திகதிக்குள் விடுதலை இடம்பெறும் என்றும் வாக்குறுதியளிக்கப்பட்டது. இன்னும் 3 நாள்களே எஞ்சியுள்ளன. எனினும், வெளிப்படையான நடவடிக்கைகள் இடம்பெற்றதாகத் தெரியவில்லை. எனவே, அரசின் உறுதிமொழி நிறைவேற்றப்படுமா?

அதேவேளை, நாம் மாற்றத்துக்கு ஒத்துழைப்பு வழங்கினோம். அதேபோல், ஊழல் ஒழிப்பு நடவடிக்கைக்கும் குரல் கொடுத்தோம். இந்நிலையில், ஊழலுக்கு எதிரான நடவடிக்கை உட்பட அரசு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் இந்த அரசு இன்னும் ஒரு வருடத்துக்கு நீடிக்குமா என்பது சந்தேகமே.

அதேவேளை, புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட தங்கத்தில் ஒரு பகுதியை ஜனாதிபதித் தேர்தலின்போது கிளிநொச் சிக்கு வந்து மகிந்த ராஜபக்ச வழங்கினார். போர் முடிவடைந்து ஐந்து ஆண்டுகள் கடந்த நிலையிலேயே தங்கத்தை அவர் வழங்கினார். ஏன் இத்தனை ஆண்டுகள் எடுத்தன? வைபவங்களுக்கு அணிவதற்காக அவரின் மனைவிக்கு வழங்கினாரா? ஒரு பகுதி தங்கமே வழங்கப்பட்டுள்ளன. மிகுதி தங்கத்துக்கு என்ன நடந்தது?" என்று கேள்வி எழுப்பினார். (த-சி)

### பிள்ளையானை

பிரதம நீதிவான் நீதிமன்றில் நிறுத்தி, நேற்று வரை தடுத்து வைத்து விசாரிக்க அனுமதி பெற்றிருந்தனர்.

இந்த நிலையில், நேற்றுப் பிள்ளையானைக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்ற நீதிபதி கிகான் பிலப்பிட்டிய முன்னிலையில் நிறுத்திய போது, டிசெம்பர் 10ஆம் திகதி வரை தடுத்து வைத்து விசாரிக்க அனுமதி அளித்தார். (த-வ)

### போர்க்குற்றவாளிகள்

குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படும் நிலையில், அது தொடர்பாக இலங்கை அரசு நடத்தவுள்ள உள்ளக விசாரணையை வரவேற்றுள்ள பொன்சேகா, இந்த விசாரணையில் நம்பகத் தன்மையை ஏற்படுத்துவதற்காக சர்வதேச கண்காணிப்பாளர்களும், ஆலோசகர்களும் நியமிக்கப்படுவ தில் தவறில்லை என்றும் குறிப்பிட்டார்.

கடந்த ஆட்சியில் இடம்பெற்ற பெரும் ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பொன்சேகா கருத்து வெளியிடுகையில், இந்தக் குற்றங்களைப் புரிந்த மகிந்த ராஜபக்ச, கோத்தபாய ராஜபக்ச ஆகியோர் சிறையில் இருக்க வேண்டியவர்கள் என்றும் தெரிவித்தார்.

மகிந்த போரை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்பதில் பெரும் அவசரத்தில் இருந்தார் எனக் குறிப்பிட்ட பொன்சேகா, 2008ஆம் ஆண்டு ஜனவரி முதல் அவர் பொறுமையிழந்தவராகக் காணப்பட்டார் என்றும் சுட்டிக்காட்டினார்.

நீண்ட போருக்கு மகிந்த ராஜபக்ச தயாராக இருக்கவில்லை எனக் குறிப்பிட்ட பொன்சேகா, போரை விரைவாக முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்ற அழுத்தத்தை மகிந்த தன் மீது பிரயோகித்தபோதும் தான் உரிய முறையில் போரை முன் னெடுத்திருந்ததாகவும் அவர் கூறினார்

'உதய'னுக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலின்போதே பீல்ட் மார்ல் சரத் பொன்சேகா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த நேர்காணலில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

போரின்போது தனிப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றிருக்குமாயின் அதாவது இரண்டு இலட்சம் பேரைக்கொண்ட பெரும் இராணுவப் படையணியில் 7,8 பேர் எதையேனும் இழைத்திருந்தால் அதற்கு நான் பொறுப்பேற்கமாட்டேன். அவர்களே அதற்கான பொறுப்பை ஏற்கவேண்டும். அவர்களை யாரும் தண்டிக்கமுடியும். அது இராணுவத்தின் பிரச்சினையல்ல. நாம் அவர்களைப் பற்றிக் கவலைகொள்ள முடியாது. யாரேனும் மனித உரிமைகளை மீறிச் செயற்பட்டிருந்தால் நான் இராணுவத்தினருக்கு வழங்கிய உத்தரவுகளுக்கு எதிராகக் குற்றங்களை இழைத்திருந்தால் அதற்கான பொறுப்பை அவர்களே ஏற்க வேண்டும்.

நான் போரின் கடைசி ஆறு நாட்களும் வெளிநாட்டில் இருந்தேன். இதன்போதே வெள்ளைக் கொடி சம்பவம் போன்ற குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இதற்கு நான் பொறுப்பேற்க முடியாது.

ஜனாதிபதி மாளிகையில் அமைக்கப்பட்டிருப்பதை பகுங்கு குழி என்று கூறமுடியாது. மாறாக அதுவொரு நிலக் கீழ் மாளிகை.

விடுதலைப்புலிகளின் சிறிய விமானத்திலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு நிலத்தின் கீழ் நான்கடுக்கு கட்டடம் அவசியமில்லை. நான் இராணுவத் தலைமையகத்திலேயே இருந்தேன். அது ஜனாதிபதி மாளிகையில் இருந்து 200 மீற்றர் தொலைவிலேயே இருந்தது.

போர்க் காலத்தில் மூன்று அறைகளைக் கொண்ட கட்டடத்திலேயே நான் இருந்தேன். நான் எனது படுக்கை அறைக்கு மேலாக ஒரு கொங்கிரீட்டை மாத்திரமே அமைத்துக் கொண்டேன். அதற்கு எனக்கு 50 ஆயிரம் ரூபா மாத்திரமே செலவாகியி ருந்தது. ஏனெனில், இராணுவத்தினர் என்ற படியால் 50 ஆயிரமே செலவாகியிருந்தது.

விடுதலைப்புலிகளின் அந்தக் குட்டி விமானங்கள் குறித்து பெரிதும் அச்சம் கொண்டவர்களாக மகிந்த ராஜபக்சவும் கோத்தபாய ராஜபக்சவும் இருந்திருப்பார்களேயானால் அதற்காக நான்கு அடுக்கு கட்டடத்தை நிலத்தின் கீழ் கட்டியிருப்பார்களேயானால் அவர்கள் தலைவர்கள் என்று அழைக்கப்படுவதற்கு அருகதையற்றவர்கள். மாறாக அவர்கள் முதற்தரக் கோழைகளாகவே நோக்கப்படவேண்டும் - என்றார். (த-சி)

### குமார்

குணரட்ணம், 1990 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் இலங் கையிலிருந்து தப்பிச் சென்று ஆஸ்திரேலியாவில் குடியேறினார்.

ஆஸ்திரேலியக் குடியுரிமை பெற்ற அவர், இலங்கைக்குச் சுற்றுலா விசா வில் வந்திருந்தபோது இலங்கைக் குடியுரிமைக்கு விண்ணப்பித்திருந்தார். எனினும், குடிவரவுச் சட்டங் களின்படி அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

இந்த நிலையில், விசா அனுமதிக் காலம் முடிந்த நிலையிலும் இலங்கை யில் தலைமறைவாகத் தங்கியிருந்த குமார் குணரட்ணம், நேற்றுப் பிற் பகல் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளார்.

அவர், குடிவரவு அதிகாரிகளிடம் ஒப் படைக்கப்படவுள்ளதாகவும், அதன் பின்னர் நாடு கடத்தப்படக்கூடும் என் றும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக் கின்றன. (த-வ)

### அரசியல்

முடிவு அறிவிக்கப்படுமென அரசின் சார்பில் ஜனாதிபதி உறுதி வழங்கியிருந் தார்.

இது தொடர்பில் ஆராய்வதற்காக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இரண்டு தடவைகள் இடம்பெற்ற உயர்மட்ட கூட்டங்களில் சிறைச்சாலைகள் ஆணையாளரிடமிருந்து அரசியல் கைதிகளின் விவரங்கள் பெறப்பட்டு மேலதிக நடவடிக்கைக்காக, சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் கடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், அரசியல் கைதிகளுக்குப் பிணை வழங்குவதற்கான பொறுப்பு சட்டமா அதிபரிடம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அரசின் உத்தரவாதத்துக்கு அமைவாக, முக்கிய முடிவை எடுப்பதற்கான விசேட கூட்டம் இன்று பிரதமர் தலைமையில் மாலை 4 மணிக்கு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டத்துக்கு அனைத்துக் கட்சிகளையும் அழைப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என அமைச்சர் மனோ கணேசன் குறிப்பிட்டார். (த-வ)

### மோசடிக்காரர்களை

கறுப்பு முகங்கள் யாருடையவை என்பதை நாட்டு மக்கள் தெரிந்துகொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

நாடாளுமன்றில் நேற்றுப் புதன்கிழமை கடந்தகால ஊழல், மோசடிகளுக்கு எதிராக துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்தி ஜே.வி.பியால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையைச் சமர்ப்பித்து உரையாற்றியபோது மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு:

தான் ஜனாதிபதியானதும் விமான நிலை-யத்தை மூடுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். ஊழல், மோசடியாளர்கள் செல்லக்கூடாது என்பதற் காகத் தான் அவர் அப்படிக் கூறினார். ஆனால், அதன் பிறகு அவர் வேறு வேறு கதை கூறினார். 100 நாள் வேலைத்திட்டத்திலும் ஊழல், மோசடிக்காரர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

பிரிட்டன், ஹொங்கொங் நாடுகளில் ஊழல், மோசடி தொடர்பான விசாரணை உதவிகளைப் பெற்று விசாரணைப் பிரிவொன்றை ஸ்தாபிப்பதாக அரசு கூறியது. ஊழல், மோசடிக்காரர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுப் பணம் மீளப்பெறப்படும் என்றது. ஆனால், இன்றுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவர்களைப் பாதுகாக்க இந்த அரசு செயற்படுகிறது என்பது நிரூபணமாகியுள்ளது.

ஊழல், மோசடிகள் தொடர்பில் தற்போதைய அரசு கறுப்புப் புத்தகம்' ஒன்றைத் தயாரித்தது. இந்தப் புத்தகத்தில் தற்போதைய ஜனாதிபதியின் செயலாளரின் பெயர்தான் முதலாவதாக உள்ளது. இந்தக் கறுப்புப் புத்தகத்தை அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டும். அதிலுள்ள கறுப்பு முகங்கள் யாருடையவை என்பதை மக்கள் தெரிந்துகொள்ளவேண்டும்.

மேலும் டுபாய் வங்கிக் கணக்குகள் பற்றி குறிப்பிடப்பட்டது. இவற்றுக்கு என்ன நடந்தது என்பதைக் குறிப்பிடவேண்டும். கடந்த காலத்தில் இடம்பெற்ற ஊழல், மோசடிகளினூடாக பெறப்பட்ட பணத்தை மீளப்பெறவேண்டும். அதுமட்டுமன்றி, ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்களும் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும். அதுவரை எமது போராட்டம் தொட ரும்-என்றார். (த-சி)

# கைதிகள் விடுவிப்பில் ஜனாதிபதி மௌனம்

## சந்தேகம் அளிக்கிறது என்கிறார் செல்வம் எம்.பி.

கொழும்பு, நவ.5

நவம்பர் 7ஆம் திகதிக்கு முன்னர் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என வாக்குறுதியளித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தற்போதுவரை மௌனமாக இருப்பது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் நேற்றுமுன்தினம் சபையில் தெரிவித்தார்.

1983ஆம் ஆண்டுசிறையிலிருந்து ஒரு விடுதலை வேட்கை உருவானதுபோல மீண்டுமொருவிடுதலை வேட்கை சிறையிலிருந்து உருவாகுவதற்கு இந்த அரசு வழியேற்படுத்தக்கூடாது என்றும் எச்சரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்து, எச்சரிக்கைவிடுத்த அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எமது அரசியல் தீர்வு விவகாரம், பொருளாதாரப் பிரச்சினை தொடர்பில் புதிய அரசு இப்போதுவரை ஒரு சமிக்ஞையைக் காட்டவில்லை. சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை குறித்து பேசப்படுகிறது. 1983ஆம் ஆண்டு சிறையில் வைத்து குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டனர். இந்த நிலையில் தற்போது சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க நாம் கோரிக்கை விடுத்து வருகின்றோம்.

தம்மை விடுதலை செய்யவேண்டும் எனக் கோரிக்கை விடுத்து தமிழ் அரசியல் கைதிகள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இவர்கள் எதிர்வரும் 7ஆம் திகதிக்கு முன்னர் விடுதலை செய்யப்படுவார்கள் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எம்மிடம் வாக்குறுதியளிக்க இந்த விடயத்தை உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அரசியல் கைதிகளிடம் குறிப்பிட்டுப் போராட்டத்தை நாம் முடிவுக்குக் கொண்டு வந்தோம்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அரசிலுள்ள அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெவ்வேறு கருத்தை வெளியிடுகின்றனர்.

இந்த நிலையில், நவம்பர் 7ஆம் திகதிக்கு முன்னர் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என வாக்குறுதியளித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தற்போதுவரை மௌனியாக இருப்பது எமக்குச் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

1983ஆம் ஆண்டு சிறையிலிருந்து விடுதலை வேட்கை உருவானது போல மீண்டுமொரு விடுதலை வேட்கை சிறையிலிருந்து உருவாக அரசு வழியேற்படுத்திவிடக் கூடாது. இல்லாவிட்டால் போராட்டமொன்றை உருவாக்கிய பொறுப்பை இந்த அரசு ஏற்கநேரிடும்.

தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம், இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரம், பொருளாதாரப் பிரச்சினை என்பன தீர்க்கப்படவேண்டும். இந்த விடயங்களை ஜனாதிபதியும், பிரதமரும் தீர்த்து வைப்பார்களா எனப் பார்க்கும்போது சந்தேகமாகவே உள்ளது. இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு பொது மக்கள் சுதந்திரமாக வாழும் சூழ்நிலையை இவர்கள் ஏற்படுத்தித் தர வேண்டும். இல்லாவிட்டால் எமது பாதையில் நாம் பயணிக்க நேரிடும்-என்றார். (த-சி)

## துப்பாக்கிச் சூட்டில் இருவர் சாவு

காலி, ரன்தொடுவில பகுதியில் இரு இளைஞர்கள் நேற்றுமுன்தினம் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இந்த இரு இளைஞர்கள் மீது மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் வந்த இரு சந்தேக நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி விட்டு தப்பிச்சென்றுள்ளனரென்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

அதே பகுதியைச் சேர்ந்த 20 மற்றும் 25 வயதுடைய இரு இளைஞர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என்றும் அவர் கூறினார்.

உடன் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைய சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும், அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

BOC
சிறிமெதுற
வீட்டுக்கடன்



பயணம் 2 உடன் வீட்டுக்கடன்

முதல் பயணத்தில் விண்ணப்பியுங்கள்
இருவாரங்களில் மற்றொரு பயணத்தை மேற்கொண்டு கடனைப் பெற்றுக்கொள்ளுங்கள்.*

- துரித சேவை, குறைந்த வட்டி, மிகக் குறைந்த சேவைக் கட்டணம்.
- சட்ட ரீதியாக தேவைப்படும் ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்கு இலங்கை வங்கியிடமிருந்து உதவிகள்.
- கடன் தொகை கிடைக்கும் வரை, அது தொடர்பான நிலை பற்றி குறுந்தகவல்கள் (SMS).
- ரூ. 25 மில்லியன் வரையிலான உயர்ந்தபட்ச வீட்டுக்கடன்.
- கடனை மீளச்செலுத்துவதற்கான கால எல்லை 25 வருடங்கள்.

இருமுறை மட்டுமே இலங்கை வங்கிக்கு விஜயம் செய்து உங்கள் கனவு இல்லத்தை சொந்தமாக்கிக் கொள்ளுங்கள்
உங்கள் அருகிலுள்ள இலங்கை வங்கி கிளைக்கு இன்றே விஜயம் செய்யுங்கள்
சிறிமெதுற - நம்பிக்கையான வீட்டுக்கடன்.*

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

www.boc.lk

தலைமை அலுவலகம், "இலங்கை வங்கி சதுர்க்கம்" இல. 01, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 01. | அழைப்பு நிலையம் 011 220 4444 | ஃபிச் ரேட்டிங் AA+(lka)

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

# முதலமைச்சர் கிண்ண சதுரங்கத் தொடரில் யாழ்ப்பாணம் கல்விவலய முடிவுகள்

மாங்குளம்,நவ.5
முதலமைச்சர் கிண்ணத்துக்காக யாழ். கல்விவலயத்துக்கு உட் பட்ட பாடசாலைகளுக்கு இடை யிலான சதுரங்கத் தொடர் கடந்த ஞாயிற்றுக்கிழமையும் திங்கட் கிழமையும் யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடைபெற்றது. யாழ்ப் பாணம்,நல்லூர்,கோப்பாய் கோட்டமட்டப் போட்டிகளில் முதல் பத்து இடங்களைப் பெற்ற இந்தத்தொடரின் முடிவுகள்.

**பெண்கள் பிரிவு**

6வயதுப்பெண்கள் பிரிவில் சுண்டுக்குளிமகளிர்கல்லூரியைச் சேர்ந்தஅனஞ்ஜா 1ஆம் இடத்தையும்,பொஸ்கோ பாடசாலையைச் சேர்ந்தசாந்தவி 2ஆம் இடத்தையும்அதேபாடசாலையின் லக்சியா 3ஆம் இடத்தையும் பெற்றனர்.

8வயதுப் பெண்கள் பிரிவில் லேக்லான் சர்வதேசஅமெரிக்கன் பாடசாலையைச் சேர்ந்த அக்சயா 1ஆம் இடத்தையும்,பொஸ்கோ பாடசாலை யைச் சேர்ந்த ஐறினி 2ஆம் இடத்தையும்,கரந்தன் இராமுப்பிள்ளைவித்தியாலயத்தைச்சேர்ந்தஅருள்நங்கை 3ஆம் இடத்தையும் பெற்றனர்.

10 வயதுப்பெண்கள் பிரிவில் பொஸ்கோ பாடசாலையைச் சேர்ந்தகிறிஸ்ரினாநிதுஜா 1ஆம் இடத்தையும்,யாழ் இந்துஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்தஆரபி 2ஆம் இடத்தையும்,உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தைச் சேர்ந்தபிரசாயினி 3ஆம் இடத்தையும் பெற்றனர்.

12வயதுப்பெண்கள் பிரிவில்வேம்படிமகளிர் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்தமதுமிதா1ஆம் இடத்தையும்,கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்ததிலக்சனா 2ஆம் இடத்தையும்,வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த சுவஸ்திகா 3ஆம் இடத்தையும் பெற்றனர்.

14வயதுப்பெண்கள் பிரிவில்வேம்படிமகளிர் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த மாணவிகளான கம்சாயினி 1ஆம் இடத்தையும், பிரசாயினி 2ஆம் இடத்தையும், தமிழ்மதி 3ஆம் இடத்தையும் பெற்றனர்.

16 வயதுப்பெண்கள் பிரிவில் வேம்படிமகளிர் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த லாவண்யா 1ஆம் இடத்தையும்,லக்சிகா 2ஆம் இடத்தையும்,யாழ் இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்ததேனுசா 3ஆம் இடத்தையும் பெற்றனர்.

18 வயதுப்பெண்கள் பிரிவில்யாழ். இந்துமகளிர் கல்லூரியைச் சேர்ந்த தனுஸ்பிரியா 1ஆம் இடத்தையும்,சுமித்திராதேவகி 2ஆம் இடத்தையும்,கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த மதுசா 3ஆம் இடத்தையும் பெற்றனர்.

18வயதுக்குமேற்பட்டபெண்கள் பிரிவில்யாழ். இந்துமகளிர் கல்லூரியைச் சேர்ந்தசாரங்கி 1ஆம் இடத்தையும்,வேம்படிமகளிர் கல்லூரியைச் சேர்ந்தசிவநீபா 2ஆம் இடத்தையும்,யாழ். இந்துமகளிர் கல்லூரியைச் சேர்ந்தபிரதாஜினி 3ஆம் இடத்தையும் பெற்றனர்.

**ஆண்கள் பிரிவு**

6 வயதுஆண்கள் பிரிவில் பொஸ்கோபாடசாலையைச் சேர்ந்த சதுக் 1ஆம் இடத்தையும், யாழ். இந்துஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த ஜெகராம் 2ஆம் இடத்தையும் பொஸ்கோ பாடசாலையைச் சேர்ந்த சஜீப் 3ஆம் இடத்தையும் பெற்றனர்.

8வயதுஆண்கள் பிரிவில்கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையை சேர்ந்த தனுசிகன் 1ஆம் இடத்தையும், சென். ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த அபி சாயிசன் 2ஆம் இடத்தையும் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தைச் சேர்ந்தவேததர்சன் 3ஆம் இடத்தையும் பெற்றனர்.

**10வயதுஆண்கள் பிரிவில்**

யாழ். இந்துஆரம்பப் பாடசாலையை சேர்ந்தஆருத்திரன் 1ஆம் இடத்தையும்,பொஸ்கோ பாடசாலையைச் சேர்ந்த லதுசன் 2ஆம் இடத்தையும்,ரமீலன் 3ஆம் இடத்தையும் பெற்றனர்.

12வயதுஆண்கள் பிரிவில் யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த தீபக் 1ஆம் இடத்தையும்,டுளீசன் 2ஆம் இடத்தையும்,அனுசங்கர் 3ஆம் இடத்தையும் பெற்றனர்.

**14 வயதுஆண்கள் பிரிவில்**

யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்தமி சோதன் 1ஆம் இடத்தையும், கொக்குவில் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த துஸ்யந்தன் 2ஆம் இடத்தையும்,சென். ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த ரஞ்சித்குமார் 3ஆம் இடத்தையும் பெற்றனர்.

**16 வயதுஆண்கள் பிரிவில்**

யாழ். இந்துக்கல்லூரியைச்சேர்ந்த விரோசன் 1ஆம் இடத்தையும், அரன் 2ஆம் இடத்தையும், சென். ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த அனுஜன் 3ஆம் இடத்தையும், பெற்றனர்.

**18 வயதுஆண்கள் பிரிவில்**

கொக்குவில் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த கஜேந்திரன் 1ஆம் இடத்தையும்,யூட்டிரோசன் 2ஆம் இடத்தையும்,யாழ். இந்துக் கல்லூரியைச்சேர்ந்த அஜன்ஸ்ரின் 3ஆம் இடத்தையும்பெற்றனர்.

18 வயதிற்குமேற்பட்டஆண்கள் பிரிவில் யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த அன்ரூட் 1ஆம் இடத்தையும்,அச்சுவேலி மத்தியகல்லூரியைச் சேர்ந்த கஸ்மன் 2ஆம் இடத்தையும்,யதுசன் 3ஆம் இடத்தையும் பெற்றனர். (ம-422)

# வடக்கு விளையாட்டு அபிவிருத்திக்கு நீண்டகாலத் திட்டம் ஒன்று வேண்டும்

## தெரிவிக்கிறார் சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம்



மாங்குளம், நவ. 5
வடமாகாணத்தின் விளையாட்டுத்திறனை வளர்த்தெடுப்பதிலும் மேம்படுத்துவதிலும் நீண்டகாலத் திட்டம் ஒன்று இருக்க வேண்டும் அத்திட்டத்தின் அடிப்படையி லேயே விளையாட்டுத்துறை விருத்தி செய்யப்பட வேண்டும்இவ்வாறுதெரிவித்தார் வடமாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம்.

வடமாகாணவிளையாட்டுத் திணைக்களத்தினால்நடத்தப்பட்டமாவட்டச்செயலகங்களுக்கு இடையிலான தடகளத் தொடரின் இறுதி நாள் நிகழ்வின் போது பிரதம விருந்தினரர்க் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரி வித் தார்.

மேலும் தொவிக்கையில் – யுத்தத்தின் பிடிக்குள் இருந்த வடமாகாணம் படிப்படியாக தற்பொழுது விளையாட்டுத்துறையில் சாதிக்க ஆரம்பித்திருக்கிறது. தேசியத்திலும் வடமாகாணம் பிரதிநிதித்து வப்படுத்தப்படுகிறது. ஆனால் இந்த அடைவுமட்டம் போதுமான தாக எண்ணவில்லை. வளப்பற்றாக் குறையும் வாய்ப்புக்கள் இன்மையும் வடமாகாண வீர வீராங்கனைகள் எதிர்கொள்ளும் பிரதான பிரச் சனையாக உள்ளது. இது நிவர்த்தி செய்யப்பட வேண்டும். வழங்களின் இருப்பு பூரணப் படுத்தப்படுவதுடன் வாய்ப்புக்களும் நடுநிலை. மையுடன் வழங்கப்பட வேண்டும். அவ்வாறு வழங்கப் படும் பட்சத்தில் வடமாகாணம் ஏனைய மாகா ணங்களுக்கு பெரும் சவாலாக இருக்கும்- என்றார். (ம-422)

# வருடாந்தப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 5
நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழகத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

குறித்த கூட்டத்தில் அடுத்த வருடத்துக்கான நிர்வாகத் தெரிவும் இடம் பெறவுள்ளதால் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் பிற்பகல் 4 மணியளவில் கழக முன்றலில் ஒன்றுகூடுமாறு நிர்வாகம் அறிவித் துள்ளது. (ம)

# ஆனந்தா வி.கழகத்தின் உதைபந்தாட்ட முடிவுகள்



யாழ்ப்பாணம், நவ. 5
ஆனந்தபுரம் ஆனந்தா விளையாட்டுக்கழ கத்தின் புதிய மைதானத்தின் திறப்பு விழாவை முன்னிட்டு நடத்தப் பட்டுவரும் விலகல் முறையிலானஉதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங் கள் குறித்த கழக மைத்தானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் செவ்வாய்கிழமை, மற்றும் புதன்கிழமைகளில் இடம்பெற்ற ஆட்டங்களின் விவரங்கள் வருமாறு.

செவ்வாய்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் முதலாவது ஆட்டத்தில் சுப்பர்றாங் அணியை எதிர்த்து முள்ளியவளை செல்வா அணி மோதிக் கொண்டது. இதில் சுப்பர்றாங் அணி 9:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் வற்றாப்பளை செந்தமிழ் அணியை எதிர்த்து கைவேலி உதிக்கும் திசை அணி மோதிக் கொண்டது. இந்த ஆட்டம் சமநிலைத் தவிர்ப்பு உதைகள் வரை இழுபறிப்பட்டது. சமநிலைத் தவிர்ப்பில் கைவேலி உதிக்கும் திசை அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

புதன்கிழமை காலை இடம்பெற்ற ஆட்டத்தில் இரணைப்பாலை சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து அளம்பில் இளம்பறவை அணி மோதிக் கொண்டது. இதில் அளம்பில் இளம்பறவை அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் முள்ளியவளை வளர்மதி அணியை எதிர்தது நாவற்காடு வெண்மலர் அணி மோதிக் கொண்டது. இதில் முள்ளியவளை வளர்மதி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# இறுதிக்குள் நுழைந்தது யங்கென்றிஸ்



கரணவாய், நவ. 5
யாழ். மாவட்ட ரீதியாக நடைபெற்று வரும் உதைபந்தாட்டத் தொடர் ஒன்றில் பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி இறுதியாட்டத்துக்குள் நுழைந்தது யங் கென்றிஸ் வி.கழகம்.

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதை பந்தாட்டத் தொடர் குறித்த கழகமைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் வதிரி பொம்மரஸ் விளையாட்டுக் கழகமும் இளவாலை யங் கென்றிஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

ஆட்டத்தின் ஐந்தாவது நிமிடத்திலேயே யங்கென்றிஸ் சார்பாக முதல்கோல்பதிவானது. இருஅணிகளும் பெரும் போராட்டத்தை வெளிப்படுத்திய போதிலும் கோல் கணக்கில் மாற்றம் ஏற்படவில்லை. வேறெந்த கோல்களும் பதியப்படாத நிலையில் யங் கென்றிஸின் ஆதிக்கத்துடனேயே முடிவடைந்தது முதல்பாதி.

முதல் பாதியின் ஆரம்பத்தைப் போல இரண்டாம் பாதியின் 5ஆவது நிமிடத்திலும் கென்றிஸ் சார்பாக இரண்டாவது கோல் பதிவாக யங்கென்றிஸின் வெற்றி கிட்டத்தட்ட உறுதியாகியது. 7ஆவது, 11ஆவது, 19 ஆவது நிமிடங்களில் கோல்கள் யங்கென்றிஸ் சார்பாக குவிக்கப்பட்டது. பொம்மரஸின் உதயராஜ் இறுதி நிமிடத்தில் ஆறுதல் கோலை அடிக்க முடிவில் 5:1என்று வெற்றியீட்டி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது யங்கென்றிஸ் விளையாட்டுக்கழகம். (ம-108)

# 238 ஓட்டங்களா, 8 இலக்குகளா திரில் நிலையில் இங்கி. பாக். டெஸ்ட்



இங்கிலாந்து- பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தின்நான்காம்நாளான நேற்றைய தினத்தில் இரண்டாவது இன்னிங்ஸிற்காக பாகிஸ்தான் சகல இலக்குகளையும் பறி கொடுத்து 355 ஓட்டங்களை எடுத்தது. முதல் இன்னிங்ஸில் முன்னிலை வகித்தது இங்கிலாந்துக்கு கை கொடுக்க வெற்றியிலக் காக 284 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. நாள் முடிவில் இங்கிலாந்து 46-2 என்ற நிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க 50 ஓட்டங்களை எட்டுவதற்குள் ஆரம்ப வீரர்கள் இருவருமே களத்தில் இல்லை. மத்தியவரிசை சிறப்பாகச் செயற்பட்டாலும் பின் வரிசையில் ஒருவருமேபத்துஓட்டங்களை முழுமை செய்யாத நிலையில் திடீரென சரிவு கண்டு 234 ஓட்டங்களில் சுருண்டது. அதிகபட்சமாக மிஸ்பா 71 ஓட்டங்களைக் குவித்தார்.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக அண்டர்சன் 4 இலக்குகளையும் புரோட், சமித் பட்டேல், மொயீன் மூவரும் தலா இரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்துக்கு மொயீன் அலி சிறந்த அடித்தளம் அமைத்துக் கொடுக்கவில்லை. குக்குடன் இணைந்தார் பெல். இணைப்பாட்டம் நிதானிக்க சரிவில் இருந்து மீண்டது கிரிக்கெட்டின் தாயகம். 49 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் இங்கிலாந்தின் தலைவர் குக். 40 ஓட்டங்களுடன் பெல்லும் நான்கே ஓட்டங்களுடன் ரூட்டும் ஆட்டமிழக்க இங்கிலாந்து 139-4. ரெய்ல ருடன் இணைந்தார் பரிஸ் ரௌவ். மேலதிக இலக்குகள் இழப்பில்லாமல் 200 ஓட்டங்களை எட்டியது இங்கிலாந்து. 76 ஓட்டங்களுடன் ரெய்லர் ஆட்டமிழக்க அடுத்த சில பந்துப்பரிமாற்றங்களிலேயே பரிஸ்ரௌவ்வின் ஆட்டமும் முடிவுக்கு வந்தது. முடிவில் முதல் இன்னிங்ஸிற்காக 306 ஓட்டங்களைப் பெற்றது இங்கிலாந்து.


பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பாக மலிக் 4 இலக்குகளையும் சாஜ் 3 இலக்குகளையும் ரகற் அலி 2 இலக்குகளையும் பாபர் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

72 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் இலக்குச் சரிவில்லாமல் இங்கிலாந்து முன்னிலை பெற்றிருந்த ஓட்டங்களைச் சமன் செய்தது. கபீஸ் ஒருமுனையில் நிதானித்து நின்றாலும் மறுமுனையில் மலிக் 0, யுனிஸ்கான் 14, ரகற் அலி 0 என்று ஒருவர் பின்னால் ஒருவராக ஆட்டமிழக்க ஆட்டங்கண்டது பாகிஸ்தானின் முன்வரிசை. மிஸ்பாவின் உதவியுடன் சதம் கண்டார் கபீஸ். மிஸ்பா 38. சபிக் 46, அகமட் 36 என்று மத்திய வரிசையைப் பலப்படுத்தினர். இருப்பினும் கபீஸின் இன்னிங்ஸ் 151 ஓட்டங்களுடன் முடிவுக்குவர கூடவே பாகிஸ்தானின் இன்னிங்ஸும் 355 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது.

முதல் இன்னிங்ஸில் முன்னிலை வகித்தது இங்கிலாந்துக்கு கை கொடுக்க வெற்றியிலக்காக 284 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. இலங்கை எட்டும்படியான நம்பிக்கை தந்தது ஆரம்பம். நாளின் முடிவில் சுழல் ஒத்துழைக்க பந்து மலிக்கின் கைகளுக்குச் சென்றது. மிஸ்பாவின் எதிர்பார்ப்பை நிவர்த்தி செய்தார் மலிக். மொயீன் அலியையும் இயான் பெல்லையும் வீழ்த்த நாள் முடிவில் இங்கிலாந்து 46-2 என்ற நிலையில் உள்ளது. இங்கிலாந்து வெற்றிபெற இன்னமும் 238 ஓட்டங்கள் தேவைப்படுகிறது. 8 இலக்குகள் கையிருப்பு உள்ளன. (ம)

# சேவாக் ஓர் அச்சுறுத்தும் கனவு டேல் ஸ்ரெயின் புகழாரம்





இந்திய அணியின் முன்னாள் வீரரான சேவாக், தென் ஆப்பிரிக்க அணிக்கு அச்சுறுத்தும் கெட்ட கனவாக இருந்தவர் என்று புகழாரம் சூட்டியுள்ளார் தென்னாபிரிக்காவின் வேகப்பந்து வீச்சாளர் டேல் ஸ்ரெயின்.

சேவாக் எடுத்த இரண்டு முச்சதங்களில் ஒன்று தென்னாபிரிக்காவுக்கு எதிராக பெறப்பட்டது. இந்த நிலையில் சேவாக் தொடர்பாக ஸ்ரெயின் தெரிவித்ததாவது 'நீங்கள் அவருக்கு சரியான இடத்தை விட்டுவிட்டு கொஞ்சம்தள்ளிப் பந்து வீசினால் கூட அதை அவர் வெளியில் அனுப்பிவிடுவார். சென்னையில் நடைபெற்ற எங்களுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தில் 300 ஓட்டங்கள் குவித்துவிட்டார். சேவாக் போன்ற வீரர்களுக்கு பந்து வீசியுள்ளேன். ஆனால் சேவாக்தான் எங்கள் அணிக்கு ஓர் அச்சுறுத்தும் கனவு. 90 ஓட்டங்களைத் தாண்டியதன் பிற்பாடு ஒவ்வொரு வீரருக்கும் ஏற்படும் தடுமாற்றத்தை அவரது இன்னிங்ஸில் காணமுடியாது.' என்றார். (ம)

# விடைபெறுகிறார் மலிக் டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து



பாகிஸ்தான் அணியின் சகல துறைவீரரான மலிக், இங்கிலாந்து அணிக்கு எதிராக நடைபெற்று வரும் மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்துடன் டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

கடந்த 2010ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடிய மலிக்குக்கு அதன் பின்னர் பாகிஸ்தான் அணியில் இடம் கிடைக்கவில்லை. இந் நிலையில் அசார் அலிக்கு காயம் ஏற்பட்டதால் கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது மீண்டும் இங்கிலாந்து தொடரில் இடம்பிடித்தார்.

அபுதாபியில் நடைபெற்ற முதல் டெஸ்டில் இரட்டை சதம் (245 ஓட்டங்கள்) அடித்து அசத்தினார். ஆனால் அதன்பின் 0, 2, 7, 0 ஓட்டங்கள் என அடுத்தடுத்து சொதப்பினார். தற்போது இங்கிலாந்து அணிக்கு எதிராக 3ஆவது டெஸ்ட் சார்ஜாவில் நடைபெற்று வருகிறது. இதில் 2ஆவது இன்னிங்சில் அண்டர்சனின் முதல் பந்திலே டக்கில் வெளியேறினார். இந்த நிலையில் அவர் சர்வதேச டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

கடந்த 2001ஆம் ஆண்டு டெஸ்ட் ஆட்டங்களில் அறிமுகமான மலிக், 34 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடி 1860 ஓட்டங்களைப் பெற்றதுடன், 25 இலக்குகளையும் கைப்பற்றியுள்ளார். (ம)



*ஆஸ்திரேலியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 3 ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் இன்று பிரிஸ்பெயின் மைதானத்தில் நடைபெறவுள்ளது. இலங்கை நேரப்படி காலை 5.30 மணி க்கு ஆட்டம் ஆரம்பமாகும். (ம)*

# இந்தியா-தென்னாபிரிக்கா முதலாவது டெஸ்ட் இன்று

இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் மொகாலியில் இன்று ஆரம்பமாகிறது.

ஏற்கனவே நடைபெற்று முடிந்த ரி-20, ஒருநாள் தொடர்களை தென்னாபிரிக்கா அணி கைப்பற்றிய பின்னர் டெஸ்ட் தொடரை கோக்லி தலைமையிலான இந்திய அணி வெல்லும் என்ற பொதுவான கருத்துக் கணிப்பு உள்ளது. ஆனால் சில புள்ளி விவரங்கள் இந்தியா டெஸ்ட் தொடரையும் இழக்கப் போகிறது என்பதை சொல்லாமல் சொல்லுகின்றன.

தற்போதைய டெஸ்ட் தரப்படுத்தலில் தென்னாபிரிக்கா முதலிடத்தில் உள்ள அணி என்பது ஒருபுறமிருக்க அந்த அணி கடந்த ஒன்பது வருடங்களில் ஒரு டெஸ்ட் தொடரையேனும் இழக்கவில்லை என்பது மற்றொரு தரவாக உள்ளது. ஆனால் அஸ்வினின் சுழல் எடுபட்டால் நிச்சயம் தென்னாபிரிக்கா சரணடையும். அதேநேரம் அஸ்வினைச் சமாளித்து விட்டால் தென்னாபிரிக்காவின் கை ஓங்குவதையும் தடுக்க முடியாது. (ம)

# ரியோ ஒலிம்பிக் தொடரில் பதக்கம் வெல்வதே கனவு -சானியா



சர்வதேச ரென்னிஸ் தொடரின் பெண்கள் இரட்டையர் பிரிவு ஆட்டங்களில் வரிசையாக கிண்ணங்களை வென்றுவரும் சானியா, அடுத்த வருடம் பிரேஸிலின் ரியோ டி ஜெனிரொவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் தொடரில் பதக்கம் வெல்வதே தனது இலட்சியம் என்று தெரிவித்துள்ளார்.

ரியோ ஒலிம்பிக் தொடர்பாக சானியா தெரிவித்ததாவது 'நடப்பு வருடத்தில் நானும் கிங்கிஸிம் இணைந்து பல்வேறு கிண்ணங்களைக் குவித்துள்ளோம். ஆனால் ஒலிம்பிக்கில் கிங்கிஸ் என்னுடன் இணைந்து விளையாட முடியாது. ஏனெனில் அவர் இந்தியர் அல்ல. வேற்று நாட்டவர். ஆனால் கலப்பு இரட்டையர் பிரிவில் பயஸுடன் இணைந்து பதக்கம் வெல்ல வாய்ப்புக்கள் உள்ளன. அவர் ஓர் அற்புதமான வீரர். அவர்மீது அதிக நம்பிக்கை உண்டு.' என்றார். (ம)



# தந்தை தந்தைதான் மகன் மகன்தான்

## கபிலின் நகைச்சுவை

டோனியினதும் கோக்லியினதம் தலைமைத்துவத்தை ஒப்பிட்ட கபில் தேவ் டோனியின் மகனாக கோக்லியை சித்திரித்து கருத்துத் தெரிவித்துள்ளமை இந்திய ஊடகங்களின் மத்தியில் தற்பொழுது பிரபல்யமாகப் பேசப்படும் விடயமாக மாறியுள்ளது.

டோனியின் தலைமைத்துவத்தை கோக்லியால் ஈடுசெய்ய முடியுமா? என்ற கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே கபில் தேவ் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது 'தலைமைத்துவத்தைப் பொறுத்தவரை டோனி தந்தை, கோக்லி மகன். தந்தை தந்தை தான்... மகன் மகன் தான். தந்தையிடம் இருந்து மகன் கற்றுக்கொள்ள வேண்டும் (டோனியிடம் இருந்து கோக்லி கற்றுக்கொள்ள வேண்டும்). டோனியின் தலைமைத்துவ சாதனைகளை எட்டிப் பிடிக்க கோக்லி இன்னும் நீண்ட தொலைவு செல்ல வேண்டும். இப்படிச் சொல்லும்பொழுது இன்னொன்றையும் தெரிவிக்கிறேன், கோக்லி ஒரு அபாரமான துடுப்பாட்ட வீரராகத் திகழ்கிறார், இந்திய அணியின் தலைவராக அவர் இனிவரும் காலங்களில் சிறப்புறுவார் என்று நான் வலிமையாக நம்புகிறேன். ஆனால் தற்போதைக்கு டோனியுடன் கோக்லியை ஒப்பிடாதீர்கள். ஏனெனில் எவருடனும் ஒப்பிட்டுப் பேசும் அளவுக்கு டோனி இல்லை. அவர் மிக உயரத்தில் உள்ளார்.' என்றார். (ம)

மங்களா காட்சியறை
தீபாவளி மலிவு விற்பனை
Mangala
சகல தளபாடங்களுக்கும்
Steel Cupboard 6x3 = 14500 8900 6x4 = 16000 9900 6x5 = 19600 14900
Dresing Table m = 9000 6800 L = 12500 9900 XL 15000 10990
Computer Table M = 4200 3200 L = 5500 3500
Iron Board 1500 1000
Kitchen Rack 2500 1900 2000 1500
536, K.K.S. வீதி, மனோகரா சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 8367, 0777 286 0 69

வெளிவாரி பட்டப்படிப்பு
கொழும்பு பல்கலைக்கழகம்
க.பொ.த சா.த சித்தியடைந்தோர் யாவரும் விண்ணப்பிக்க முடியும். உ.த 2015 தோற்றியோரும் விண்ணப்பிக்கலாம். வேலை தேடுவோர், பதவி உயர்வுக்கு விணணப்பிப்போர் அனைவர்க்கும் ஏற்றது.
பிரிவு 1 ஞாயிறு மட்டும் அனுமதி நிறுத்தப்பட்டுள்ளது
பிரிவு 2 சனி 2-5 அனுமதி வழங்கப்படுகின்றது
Type BIT<Name> & send to 772395895
MCS யாழ் பல்கலைக் கழகத்திற்கு அருகில்





இந்திய டெஸ்ட் அணித்தலைவர் விராட் கோக்லியின் 27ஆவது பிறந்த தினம் இன்று.

# சகாரியருக்கு சிக்கல்

இந்தியாவுடன் தொடர்கள் நடத்தப்படுவது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த இந்தியாவுக்குச் சென்ற பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் தலைவரான சகாரியர் கான், எந்த அடிப்படையில் யாருடன் கலந்தாலோசித்து இந்தியாவுக்கு சென்றார் என்பது தொடர்பாக விளக்கம் தரவேண்டும் என்று பாகிஸ்தான் அரசு சகாரியருக்கு உத்தரவிட்டுள்ளது.

இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை பாகிஸ்தானுடன் தொடர்கள் நடத்த இழுத்தடித்து வரும் நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையும் அவ்வாறான ஓர் நிலைப்பாட்டடையே பேணவேண்டும் என்று பாகிஸ்தான் அரசு தெரிவித்திருந்தது. ஆனால் சகாரியர் கான் குறித்த விடயம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த இந்தியாவுக்கே சென்றிருந்தார். அவர் தனது தற்துணிவின் அடிப்படையிலேயே இந்தியா சென்றதாகவும் சில தகவல்கள் வெளியாகியிருந்தன. ஆனால் இந்த தற்துணிவு முடிவை பாகிஸ்தான் அரசு விரும்பவில்லை இதனாலேயே யாருடன் கலந்தாலோசித்து யாரிடம் அனுமதி பெறப்பட்டு பயணித்தார் என்ற அறிக்கை சமர்ப்பிக்கும்படி அந்த அரசு உத்தரவிட்டுள்ளது. (ம)

உங்களிடமிருந்து ஒரு மிஸ்ட்கோல்,
எங்களிடமிருந்து புற்றுநோய் வைத்தியசாலைக்கு ரூ.10.
CALL TO DONATE
இலங்கையில் [illegible] என்கின்றவகையில் எமக்கு எப்போதும் அனைத்து உயிர்களும் பெறுமதியானவை. அதனால் தான் வாழ்வை வாழப் போராடும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்காக CALL TO DONATE செயற்திட்டத்தை ஆரம்பித்தோம்.
இவ் விளம்பரம் அல்லது வேறு ஏதேனும் காப்புறுதி விளம்பரத்தை பார்த்தாலோ கேட்டாலோ
உங்கள் அழகிய புகைப்படம் ஒன்றினை எமது பேஸ்புக் பேஜ்ஜில் அப்லோட் செய்யுங்கள்
1357க்கு ஒரு மிஸ்ட்கோல் கொடுக்கவும்
அல்லது



அப்போது உங்களுக்காக ஸ்ரீ லங்கா இன்ஷுரன்ஸ் புற்றுநோய் வைத்தியசாலைக்கு ரூ.10ஐ நன்கொடையாக வழங்கும்.
ஓர் உயிரை வாழவையுங்கள், அப்போது உங்கள் வாழ்வும் பெறுமதியாகும்.
ஸ்ரீ லங்கா இன்ஷுரன்ஸ்
விஜயம் செய்யுங்கள் www.facebook.com/SLICorporation

# நடாலை வீழ்த்தியது ஆச்சரியமளிக்கிறது



சுவிற்சர்லாந்து ரென்னிஸ் தொடரின் இறுதியாட்டத்தில் நடாலை வீழ்த்தியது ஆச்சரியமளிக்கிறது என்று தெரிவித்துள்ளார் பெடரர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற சுவிற்சர்லாந்து ரென்னிஸ் தொடரின் இறுதியாட்டத்தில் 2:1 என்ற செற் கணக்கில் போராடி வெற்றி பெற்றார் பெடரர். கிட்டத்தட்ட 2 வருடங்களுக்குப் பின்னர் நடாலும் பெடரரும் இறுதியாட்டத்தில் மோதியது நேற்றுமுன்தினமே. இந்த நிலையில் நடாலை வீழ்த்தியது தொடர்பாக பெடரர் தெரிவித்ததாவது:- 'நடால் ஒரு ஆக்ரோசமான வீரர். அவரது போராட்டத் தன்மைக்கு ஈடுகொடுக்கும் விதத்தில் வேறுஎந்தவொரு வீரரும் இல்லை. 5-0 என்ற நிலையில் இருந்தாலும் மீண்டுவந்து செற்றைக் கைப்பற்றும் திறன் நடாலுக்கு உண்டு. சில தடவைகள் இதை சாதித்தும் உள்ளார். அவரை எதிர்கொண்டு பல மாதங்களாகி விட்டதால் கிண்ணம் என்னிடம் வரும் என்ற எதிர்பார்ப்பு எனக்கு பெரிதளவில் இல்லை. ஆனால் சமீப காலமாக நடால் தடு மாறுவது எனக்கு கை கொடுக்கும் என்ற நம்பிக்கையிலேயெ களமிறங்கினேன். நான் எதிர்பார்த்ததைப் போல் நடால் சிறப்பாக ஆடி னார். இருப்பினும் சில சர்வீஸ்கள் எனக்குச் சாதகமாக அமைந்ததால் ஆட்டத்தின் முடிவும் சாதகமானது.' என்றார். (ம)

# பரீஸ் சென் ஜேர்மனை வீழ்த்தியது ரியல் மட்ரிட்

நடைபெற்றுவரும் லாலிகா தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் பரிஸ் சென் ஜேர்மன் அணியை வீழ்த்தி தரப்படுத்தலில் மீண்டும் முதலிடத்தை பிடித்துள்ளது ரியல் மட்ரிட் அணி.

ஆட்டம் ஆரம்பித்தது முதல் இரண்டு அணிகளும் சம பலத்துடனேயே மோதின. இதனால் கோல் கணக்கு ஆரம்பிக்கப்பட நீண்ட நேரம் எடுத்துக் கொண்டது. முதல் பாதியின் 35ஆவது நிமிடத்தில் மட்ரிட்டின் நிகோ முதல் கோலை விளாசினார். மேலதிக கோல்கள் எவையும் பதியப்படாமல் முடிவடைந்தது முதல் பாதி.

இரண்டாம் பாதியில் பழிதீர்க்க வேண்டும் என்ற கட்டாயத்தில் களமிறங்கியது சென் ஜேர்மன். ஆதிக்கத்தை தொடரும் முனைப்பில் ரியல் மட்ரிட். இரண்டாம் பாதியில் கோல்கள் எவையும் பதியப்படாத நிலையில் 1:0 என்று வெற்றிபெற்றது மட்ரிட். இந்த வெற்றியின் மூலம் லாலிகா புள்ளிப்பட்டியலில் 16 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்துள்ளது ரியல் மட்ரிட். (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 5.11.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.